Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20 ரூபா 13/50
දිනමුරසු වාරමලර්
மார்ச் 11 - 17, 2001
வாரமலர்
# தினமுரசு
THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 399

# பயங்கரவாதத் தடையும் சர்வதேச வலையும்



## மினித் தொடர் ஆரம்பம்

# முரசம்

## நிதானம் தேவை!

**அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.**

பிரித்தானிய அரசாங்கம்
தமிழீழ விடுதலைப் புலிகளை
பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ்
தடைசெய்த விடயமானது
பாரதூரமான தாக்கங்களை
ஏற்படுத்தக் கூடியது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு
புலிகள் முன்வந்திருந்த போதிலும்,
அப் பேச்சுவார்த்தைகளுக்கான
நல்லெண்ண அறிகுறியாக
புலிகள்,
ஒருதலைப் பட்சமான
யுத்த நிறுத்தத்தை
அறிவித்து, அதை
மேலும் மேலும் நீடித்து
வருகின்ற போதும்,
நோர்வே அரசாங்கம்
பேச்சுவார்த்தைக்கான நடுவர்களாகப்
பங்காற்ற முன்வந்திருந்த போதும்,
பிரித்தானிய அரசாங்கம்
விடாப்பிடியாகப் புலிகளை
தடைசெய்துள்ளனர்.

புலிகளைத் தடைசெய்ய வேண்டாமென
பல்வேறு அமைப்புகள்
பிரித்தானிய அரசாங்கத்தைக்
கோரியிருந்தனர்.
புலிகளால் தடைசெய்யப்பட்ட
தமிழ் இயக்கங்கள்கூட
புலிகளைத் தடைசெய்ய வேண்டாமென
பிரித்தானியத் தூதுவரிடம்
கூட்டாக வேண்டுகோள் விடுத்திருந்தன.

வடக்கு-கிழக்கு
ஆண்டகைகள்கூட
பிரித்தானியா புலிகளைத் தடைசெய்தால்
சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு
குந்தகம் நேர்ந்துவிடுமென
வலியுறுத்தியிருந்தனர்.

இவற்றுக்கு மத்தியிலும்
பிரித்தானியா இத்தகைய
முடிவினை எடுத்திருக்கும் நிலைமையை
நாம் தீவிரமாக ஆராய வேண்டும்.

இந்தத் தடையை மட்டும்
விசனத்துடன் நோக்காமல்
இத்தகைய தடைகளுக்கான
மூலவேர் எங்கிருந்து
ஆரம்பமானதென்பதையும் நாம்
சிந்திக்க வேண்டும்.

புலிகள் மீதான முதலாவது
வெளிநாட்டுத்தடை
இந்தியாவிலேயே ஆரம்பமானது.

இந்தியத் தடைக்கு
அடிகோலிய விடயம்
ராஜீவ் காந்தியின்
படுகொலையே!
இலங்கை விடயத்தில்
இந்தியாவிற்கிருக்கும்
ஆதிக்கம் எத்தகையதாக இருப்பினும்
அதனைக் கையாளவேண்டிய
அரசியல் வழிமுறையில்
நாம் விடுத்த
தவறான அணுகுமுறையின்
பாதிப்புகள் பின்னர்
எத்தகையதாக விஸ்தரித்துள்ளதென்பதை
தற்போது உணரக்கூடியதாகவுள்ளது.

இந்தியாவை அடுத்து
அமெரிக்காவும்,
அதன்பின் மலேசியாவும்
புலிகளைத் தடை செய்ததுடன்
இப்போது பிரித்தானியாவும்
தடைசெய்துள்ளதானது
சர்வதேச ரீதியில்
ஓர் ஆபத்தான போக்கு
உருவாகி வருவதையே
கட்டியம் கூறுகிறது.

பிரித்தானியத் தடையையடுத்து
கனடா, பிரான்சு, ஜேர்மனி போன்ற
நாடுகளும் கூட
இதேவழியைத் தொடரக்கூடிய
ஆபத்து தலைகாட்டியுள்ளது.
அண்மையில் இலங்கைவந்து
திரும்பிய ஐரோப்பிய ஒன்றியத்தின்
அறிக்கையும் கூட
புலிகளுக்குப் பாதகமானதாகவே
அமைந்திருக்கிறது.

இலங்கையில் புலிகள்
பயங்கரவாதத்தில் ஈடுபடுகிறார்களென்றும்,
ஐரோப்பிய ஒன்றியம்
பயங்கரவாதத்தை எதிர்ப்பதுடன்
ஜனநாயக அரசாங்கங்களை
ஆதரிக்குமென்றும்,
பயங்கரவாதத்துக்கு உதவும்
அமைப்புகள் மீது
அந்தந்த நாடுகளின் அரசாங்கங்கள்
நடவடிக்கை எடுக்கவேண்டுமெனத்
தாம் கோருவதாகவும்
அவர்கள் வெளியிட்ட
19 அம்ச அறிக்கையில்
தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவற்றையெல்லாம்
சீர்தூக்கிப் பார்க்கையில்,
எமக்கு எதிரானதாக
நிகழ்ந்தேறும் விடயங்களுக்கெல்லாம்
எதிர்த் தரப்பின் மீதே
தவறுகாணுவதன் மூலம்
எம்மை நாமே
திருப்திப்படுத்திக்கொள்ளும்
சுபாவத்திலிருந்து விடுபட்டு,
தமிழ்பேசும் மக்களின்
உரிமைக்கான இத்தனைகால
இழப்புகளும் போராட்டங்களும்
கொச்சைப் படுத்தப்படுகின்ற
ஆபத்திலிருந்து மீள்வதற்கும்,
தமிழ் மக்களின் உரிமைகளை
நிலைநாட்டுவதற்குமான
சரியான அரசியல் மார்க்கம்பற்றி
நிதானமாகச் சிந்திக்க வேண்டிய
அவசியம் ஒன்று இப்போது
விளைந்துள்ளதையே
உணர முடிகிறது.

*மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.*

# ஆன்மீகம்

## மனித நேயம்

ஒரு மனிதனிடம் தன்னம்பிக்கை, மனக்கட்டுப்பாடு, ஒழுக்கம் போன்றன இருக்குமாயின் அவனுடைய மனம் அமைதியடையும். அதனால் நாடும் உலகமும் அமைதிபெறும்.

மனிதநேயம் ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியம். ஒழுக்கமும் கட்டுப்பாடும் உள்ளவனிடத்தில் தோன்றும் மனிதநேயம்தான் மற்றவர்களுடைய நன்மை கருதி செயற்படும். 'செய்யும் தொழிலே தெய்வம்' என்ற உணர்வோடு தங்கள் தொழில்களைத் திறம்படச் செய்யவேண்டும். விஞ்ஞான வளர்ச்சியால் வாழ்க்கையில் பல வசதிகள் கிடைக்க மனதில் ஆசைகள் கூடுகின்றன. இந்த ஆசைகளை மனிதன் அடக்கவில்லையாயின் நிறைவில்லாத- நிம்மதியில்லாத வாழ்க்கைதான் அமையும்.

மனிதன் மனிதனாய் வாழ உடல்வலிமை, மனவலிமை, அறிவாற்றல் பொருளாதாரம், சமூகச் சிந்தனை, தெய்வநம்பிக்கை, அதனால் உண்டாகும் ஆன்மீக பலம் ஆகிய அனைத்தும் தேவைப்படுகின்றன.

ஒரு செடி நன்றாக செழித்து வளர்கிறது. அதனது பசிய இலைகளை கால்நடைகள் தின்றுவிடுகின்றன. இருந்தாலும் அந்தச் செடி மீண்டும் வளர்ந்து, மரமாகி கால்நடைகளுக்கு உணவாகவும், நிழலாகவும் உதவுகின்றன. அதுபோலவே மனிதனிடமும் தனக்குத் தீங்கு செய்பவர்களை மன்னித்து அவர்களுக்கு நன்மை செய்கின்ற மனப்பாங்கு வளரவேண்டும். இதுவே மனிதநேயம். மனிதனிடம் அன்பு, ஈகை, இரக்கம், பண்பு ஆகியன இருந்தால் இறைவன் தானே வலியவந்து அவனுள்ளத்தில் உறைகின்றான். அவனை உலகம் தெய்வமாக மதிக்கின்றது.

பா. வேலுப்பிள்ளை-வெள்ளவத்தை.



## நல்லொழுக்கத்தின் அவசியம்

நல்லொழுக்கம் நற்குணத்தின் பிரதிபிம்பமே. நற்குணமுடையோர் நல்லொழுக்க சீலர்களே, அவர்களையே உலகமும் விரும்புகிறது. அல்லாஹுதஆலாவும் நேசிக்கிறான். நிச்சயமாகக் கெட்டவார்த்தைகள் பேசுவோர் மீது அல்லாஹ் கோபங்கொள்கிறான் என்பதும் நபி (ஸல்) அவர்களின் மணிமொழியாகும். பிள்ளைப் பருவமும் பள்ளிப்பருவமும் கடந்துவிட்டால் ஒருவனை நற்குண நல்லொழுக்கமுள்ளவராக்குவது கஷ்டமாகும். எனவே இப்பருவத்தில் கண்ணுங் கருத்துமாய் இருக்க வேண்டும்.

எல்லாச் சமயங்களும் ஒழுக்கத்தை வற்பறுத்துகின்றன. நல்லொழுக்கம் சந்தோஷமான சமூக வாழ்வுக்கு மட்டுமல்லாது, நிம்மதியான ஆத்மீக ஈடேற்றத்துக்கும் இன்றியமையாதது. எனவே தான் இஸ்லாம் நல்லொழுக்கத்தை மிக மிக வற்புறுத்துகிறது.

அன்னிய பெண்களுடன் தனிமையில் தங்குவதையும், பெண்கள் உடலை மறைக்காமல் செல்வதையும், உடலையோ, நகைகளையோ அந்நிய ஆண்களுக்குக் காட்டுவதையும், வெளியே செல்லும்போது மணம் பூசி இருப்பதையும் இஸ்லாம் தடை செய்துள்ளது. இதன் அடிப்படையில் நாங்களும் ஒற்றுமையாகவும் நல்லொழுக்கத்துடன் வாழ இறைவன் துணை புரிவானாக. (ஆமீன்)

எம். ஐ. எம். அஸாத்-வெள்ளைமணல்.

## நல்லறிவுரையைப் புறக்கணியாதே

தான் செய்வது பிழையென்று அறியாத ஒருவர் பாவமான காரியத்தைச் செய்து பின், அது பாவச் செயல் என்று உணர்ந்து வருந்தினால், அவனுக்கு மன்னிப்பு உண்டு. அனுபவசாலிகள், நேர்மையாளர்கள் அறிவுரை கூறும்பொழுது அதை முழுமனதுடன் ஏற்று தன்னைத்திருத்திக் கொள்பவன் வாழ்க்கையில் ஒளி பெற்று உயர்வான். நல்லறிவை ஏற்காதவனோ அக்கிரமச் செயல்களில் மூழ்கி தனக்கே குழிவெட்டிக் கொள்கிறான்.

இதையே "நல்லுரையை ஏற்போர் மெய்வாழ்க்கைக்கான பாதையில் நடப்பர்; கண்டிப்புரையைப் புறக்கணிப்பவரோ தவறான வழியில் செல்வர்." (நீதிமொழிகள் 10:17) என்னும் வாக்கியங்கள் புலப்படுத்துகின்றன. ஆகையால், 'நாம் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள்' என்னும் கொள்கையை விட்டு, நல்லறிவாளரது அறிவுரையைக் கேட்டு செயலாற்றுவோமானால் வாழ்க்கையில் வெற்றி பெறுவோம் என்பது திண்ணம்.

அக்னஸ் சவரிமுத்து-வட்டகொடை.

## கவிதைப் போட்டி இல.399



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 17.03.2001

கவிதைப் போட்டி இல.399
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



### சோக தினம்

உலகமே இருண்டு
உறங்குகிறது.
விடிந்தால் காதலர் தினம்
இரவே பூமி அதிர்ந்தால்
உங்களுக்கு சோகதினம்!

ஜெ. ஜெயதாஸ்-பெரிய கல்லாறு.

## கவிதைப் போட்டி இல.396

### பரிசுக்குரிய கவிதை

### சந்திப்பு

**அதிகாலை ஆனதும்
அறியாமல்;
அந்தி மாலை யானதும்
முடியாமல்!
நீண்டநாள் நட்பு-
காதலர் தின
சந்திப்பு!**

அஸ்ஹா-ஹெம்மாதகம.

### காதலியுங்கள்

இறந்த கால சோகம் தீர,
எதிர்காலத்தை நினைத்துக் கொண்டு
நிகழ்காலத்திலே காதலியுங்கள்!
பொங்கி வரும் கடலும்,
மங்கிப் போகும் சூரியனும்
காதல் எதிரிகளல்ல; காவலர்களே!

எம். டீ. தில்ஷாத்பேகம்-ஹெட்டிபொள.

### பொறுத்திருங்கள்...!

காதலர்கள் உல்லாசமாக
சுற்றுவதற்கு எங்கே
நம் நாட்டில் சுதந்திரம்
உண்டு..?
சமாதானம் கிடைக்கட்டும்
பொறுத்திருங்கள்!

ஜே. லக்கி-பெரியகல்லாறு.

### சந்தித்தேன்!

அன்றொருநாள்
உன்னைச் சந்தித்தேன்
என் காதலனாய்!
அன்றிலிருந்து நேற்றுவரை
நாம் காதலர்கள்!
இன்னொருநாள்
உன்னைச் சந்தித்தேன்
என்காதலனாய் அல்ல;
காவிய நாயகனாய்!

எம். அப்துல் ஹகீம், பறகஹதெனிய.

### சமாதானத்திற்காக

கைகள் பற்ற
கண்களினால் உரசிய
தீக்குச்சி 'காதல்'
இனங்கள் இணைய
இதயத்திலும்
பிறக்கட்டும் 'காதல்'

சு. நாகவாணி ராஜா-
தலவாக்கலை.

### காதலர் தினம்

சூரிய காந்தி..
குடையின் கீழ்
இரு உள்ளங்கள்
குதூகலம்..
இங்கு இல்லாதது
ஒன்று; ஊரடங்கு.

க. நாகராசா,
கோண்டாவில்.

### கடமை

மனசு எனும்
தொழிற்சாலையில்,
நெசவு செய்த
ஆடைதான்
காதல்,-அது
கிழியாது காப்பது
உங்கள் கடமை.

மு. அலெக்சாண்டர், ஹய்.:.போரஸ்ட்.

### உம்மத்தர் புத்தி

கசக்காது காதலர் கருத்தொருமித்தால்
கனியுமன்றோ; ஒருகுடை நிழல் காய
-கூடுவாரோ...
நன்கொடை நாடும் யாசக உம்மத்தர்
நலன் செய் சொல்ஹெய்ம் கொடையாம்
-குடையில்

கரிகாலன் பாலசௌந்தரி, மாதகல்.

### இலங்கை நியதி

குடை நிழலில் இருந்து
குளிர்பானம் குடிப்போரும்,
நடை மெலிந்து அகதியாய்
நண்ணுவர் வேற்றூர்.

திருமதி: வி. கந்தசாமி, குருமன்காடு.

### ஏக்கம்

தேவி இங்கு
உன்னை
நினைப்பதைக்கூட
நிறுத்திவிட்டேன்-எதற்காக
அங்கு உனக்கு
புரை அடித்து
விடும் என்ற
பயத்தில்...!

யூ. எல். நஜீப், அக்கரைப்பற்று-01.

### காதலர்

மும்தாஜின் மகனையும் கிளிண்டனின் மகளையும்
காணவில்லை என்று ஊருக்குள் பேச்சு
காதலர்களை அழித்துவிடும்படி கயவர்களின் புரட்சி
யுத்தத்தில் மடிந்துகிடந்த மலர்கள்
காதலரை கண்ட அதிர்ச்சி
இவர்களுக்கு தஞ்சம் இந்த பீச்சு.

சிவலிங்கம் மகேஸ்வரி, ஏறாவூர்-04.

# வாசக[ர்] சாலை





என்
அன்பிற்
கினிய
முரசே,
ஒவ்வொரு
வாரமும் நீ
சுமந்து
வரும்
'மன்னாதி
மன்னன்'
என்ற தொடர் கதையை பார்த்துப் பார்த்து என் கண்கள் பூத்து கொண்டிருக்கிறது. மன்னாதி மன்னனோடு நீயும் ஒரு மன்னராக வாழவேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

ஏ. ரீட்டாமேரி, பாலங்கொடை.

## வாழ்க, வளர்க

ஒவ்வொரு வாரமும் சிந்தனை முத்துக்களை நீ சுமந்துவந்தாலும், பெப்ரவரி 14ல் வெளிவந்த காதலர் தினத்தை முன்னிட்டு வெளிவந்த இதழ், மிகவும் பாராட்டுக்குரியது. அதில் வெளிவந்த, சிறுகதைகளோ, கவிதைகளோ, அத்துடன் காதலைப்பற்றிய ஒவ்வொரு பகுதியும் வாசிக்க சுவையாக மட்டுமல்ல, பல காதலர்களின் உள்ளங்களிலும், பல மாற்றங்களையும், சந்தோஷங்களையும் ஏற்படுத்துவதுடன் பல அறிவுரைகளையும் கண்டு கொள்ளக்கூடியதாக இருந்தது. எனது திருமணமும் காதல் திருமணம் தான். அதிலும் பல பிரச்சனைகளின் மத்தியில், வெற்றி பெற்ற காதல் தான். என்னை மட்டுமல்ல, பல வாசகர்களின் உள்ளங்களையும் கொள்ளைக் கொண்ட இனிய முரசே உன் அளப்பெரும் சேவை வாழ்க, வளர்க.

ஏ. சுகந்தி, மன்னார்.

## பாரதி பாடல்கள்

தங்கள் முரசில் எஸ்.டி.எஸ். கண்ட பாரதி எனும் தலைப்பில் வரும் விடயங்களை இடையிடையே படிப்பேன். மற்றைய அம்சங்கள் நன்றாயிருப்பதால் சிலசமயம் இதைபார்ப்பது குறைவு. இரா.பத்மநாதனின் கட்டுரை கடந்த காலத்தை எப்படிப் படம் பிடித்த மாதிரி எழுதுகிறார் என ஆச்சரியப்பட்டேன்.

தாங்கள் எழுதியது போல் அக்காலத்தில் இசைக் கச்சேரிகளில் தெலுங்கு வாடையே வீசியது. மொழி புரியாத தமிழ் ரசிகர்கள் அலுத்துவிடுவர். இதன்பின் எம்.கே.ரி.பாகவதர், கல்கி கிருஷ்ணமூர்த்தி, தண்டபாணி தேசிகர், சிதம்பரம் ஜெயராமன் ஓர் இயக்கத்தை அமைத்து தமிழில் பாடி ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியபின் தூங்கிக்கிடந்த பாரதி பாடல்கள் புத்துயிர் பெற்றன. இதன் பின் எதிலும் தமிழ் பாடல்கள் மணம் வீசின.

ஆனால் இந்த இசைமேதைகள் தமது சுயநலத்துக்கு என வாழாது இதை நம்மவர்க்கு வைத்து மறைந்து விட்டனர். கொடை வள்ளல்களான செட்டிநாட்டரசர்களும் தமிழ்வளர்க்கப் பணத்தை வாரி வழங்கினர். ஆனால் இன்று? 'பராசக்தி' படத்தில் ஒரு காட்சியில் சிவாஜி கணேசன் அவர்கள் "தங்கையின் பெயரோ கல்யாணி, ஆனால் அவள் நெற்றியில் குங்குமம் இல்லை. கூந்தலில் பூ இல்லை. அவளுக்காக நான் அலைந்தேன்!" என்கிறார். அதே போல் பெயரோ தமிழ் நாடு; பேசுவதோ ஆங்கிலம், வரும் தமிழ்ப்படங்களுக்கோ ஆங்கிலத் தலைப்புக்கள். ஒலிக்கும் பாடல்களோ ஆங்கில சொற்களின் ஆதிக்கம். தமிழ்ச் சொற்கள் அங்கு இங்கு என சேர்ப்பு, உடைகளும் ஆங்கில மோகம். வரும் டி.வி.தொடர் நாடகங்களையும் சொல்லத் தேவை இல்லை. அன்று தமிழ் வளர்த்த மேதைகளும் பாரதியும் இன்றிருந்தால் "நாம் வளர்த்த தமிழ் எங்கே?" எனக் கண்ணீர் விடுவர்.

ச. இரா. பாலகிருஷ்ண ஐயர், கொழும்பு.

அன்பின் முரசே!

18.02.2001 அன்று காதல் ஸ்பெஷலில் நீ சுமந்து வந்த அனைத்தும் முத்தான முத்துக்கள். அதிலும் 'ஆட்டத்துக்குத் தயாராகும் அரசியல் சதுரங்கம்', காதலைப்பற்றிய சிறு கதைகள், சிந்தியா கேள்வி பதில், பார்க்கப் போனால் 20 பக்கமும் 20 கோடி நிலவுக்குச் சமன்.

ஜனாத்தனி பாலபாஸ்கரலிங்கம்,
பெரிய கல்லாறு-02.

திக்திக்கும் சிந்தைக்கினிய செய்திகளை தாங்கி வரும் தினமுரசு வார மலரில் இடம் பெறும் ஒவ்வொரு அம்சங்களுமே சிந்தையை தொடுகின்றது. அரசியல் கட்டுரைகள். தொடர்கதைகள். தொடர் கட்டுரைகள். சினிமா வாசக(ர்)சாலை இது போன்ற இன்னோரன்ன அம்சங்கள் முரசை மெருகூட்டுகின்றது. தினமுரசு ஆசிரியர் பீடத்திற்கும் ஊழியர்களுக்கும், வாசக நேயர்களுக்கும் இனிய ஹஜ்ஜிப்பெருநாள் வாழ்த்துக்களை வாசகர் சாலை மூலம் தெவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

ஏ. சீ. எம். முஸம்மில் (பியுடி)
குளியாப்பிட்டிய.

என் முத்தான முரசே,

நீ உன்னில் சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் அருமை. ஒரு வாரத்தில் ஆறு நாட்களில் ஏற்படும் சோகங்களை ஏழாவது நாளில் நீ எம் கைகளில் கிடைத்ததும் மறக்கச் செய்கிறாய். மனம் மகிழ மணம் வீசும் முரசு மலரே உன் மணம் இந்நாடெங்கும் வீச வாழ்த்தும் வாசகன்.

எஸ். அப்துல்சலாம், அல்மனார் கல்பிட்டி.

என்இனிய தின (தமிழ் முரசே தமிழர்களின் இடங்களை வெளிச்சம் போட்டு காட்டும் உன் சேவை தமிழர்களுக்கு ஒரு பெரிய ஆதரவை தருகின்றது. சூடான செய்திகளை சுடச்சுட தரும். உன்சேவையை எப்படி பாராட்டுவது என்றே தெரியவில்லை. குத்தியனின் 'பார்த்தேன் எழுதுகிறேன்' கட்டுரை என்னையும் அறியாமல், மெய்மறக்க வைக்கின்றன உன் சேவைகள் மென்மேலும் வளர எனது வாழ்த்துக்கள்.

கே. இளங்கோ, இம்புல்பிட்டிய, கீழ்பிரிவு.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல்(Fax):- 074-513266

# புலிகள் அமைப்பு மீதான பிரித்தானிய அரசியல் நடவடிக்கை

## இனப்பிரச்சனை தீர்வு முயற்சியை திசைமாற்ற நோர்வே அனுமதிக்காது!

தமிழீழ விடுதலைப்புலிகள் மீது பிரித்தானிய அரசாங்கம் தடை விதித்திருப்பதனால், இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெறவிருக்கும் இனப்பிரச்சனை தொடர்பான பேச்சுவார்த்தைகள் திசைமாறிச் செல்வதற்கு நோர்வே நாடு ஒருபோதும் இடமளிக்காது என்று இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இவ்வார முற்பகுதியில் இலங்கை வந்திருந்த நோர்வே நாட்டின் விசேட தூதுவர் இதில் உறுதியாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒருநாள் விஜயத்தை மேற்கொண்டு கொழும்பு வந்திருந்த திரு.எரிக் சொல்ஹெய்ம் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைச் சந்தித்திருந்தார்.

இச்சந்திப்பின்போது, தமிழீழ விடுதலைப் புலிகள் மீது பிரித்தானிய அரசாங்கம் எடுத்திருக்கும் நடவடிக்கை குறித்தும் நோர்வேயின் சமாதான நடவடிக்கையின் தற்போதைய நிலவரம் பற்றியும் திரு.சொல்ஹெய்ம் விரிவாக ஆராய்ந்தார்.

அத்துடன் நோர்வேயை பொறுத்தவரை இலங்கை இனப்பிரச்சனை தீர்வு விடயத்தில், விடுதலைப் புலிகள் அமைப்பும் இலங்கை அரசாங்கத் தரப்பும் ஒரு சமாந்திர நிலையில் வைத்தே நோக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் அரசியல் தலைவர்களைச் சந்தித்த பின்னர் இலண்டன் மாநகருக்கு பயணமான திரு.சொல்ஹெய்ம் அங்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு.அன்டன் பாலசிங்கத்தையும் சந்தித்து, அமைதிப் பேச்சுவார்த்தைகள் தொடர்பான விடயங்களை ஆரம்பித்திருந்தார்.

பிரித்தானியாவும், நோர்வேயும் நெருங்கிய நட்பு நாடுகள். இருந்தபோதிலும், ஒன்றின் நடவடிக்கைகளில் மற்றொன்று தலையிடுவதை தவிர்த்துக் கொள்ளுகின்றன. எனவே பிரித்தானிய அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது மேற்கொண்டுள்ள நட்வடிக்கை முற்றுமுழுதாக பிரித்தானிய அரசாங்கத்தைச் சார்ந்ததாகும். இதனால் நோர்வே தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்பான நிலைப்பாட்டில் எவ்வித மாற்றத்தையும் கொண்டிருக்கவில்லை என்று இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை கொழும்பிலிருந்து புறப்பட்டுச் செல்வதற்கு முன்னதாக எரிக் சொல்ஹெய்ம் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் திரு.கோபால கிருஷ்ண காந்தியையும் சந்தித்து உரையாடியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

## மட்/மன்னம்பிட்டியாக மாறிவரும் யாழ்/அல்லைப்பிட்டி

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து கொழும்பு செல்வதற்கு கெடுபிடிகளுக்குப் பெயர் போன இடம் மன்னம்பிட்டி சோதனைச் சாவடியாகும். அதேபோன்று யாழ் அல்லைப்பிட்டியிலும் இப்படியான பெரும் சோதனைச் சாவடியொன்று தற்போது உருவாகி வருகின்றது.

தீவகத்திலிருந்து யாழ்ப்பாணம் செல்வதாயின் அல்லைப்பிட்டி சோதனைச் சாவடியைத் தாண்டியே போக வேண்டும்.

யுத்தச் சூழலால் பாதுகாப்புக் காரணங்களுக்காக பரிசோதனைக்குள்ளாக்கப்படுவது தவிர்க்க முடியாததொன்றாகும். ஆனால் வாகனங்கள் மெதுவாகச் செல்வதற்கு கல்லினாலும் தாரினாலும் சேர்த்து புதிதாக நான்கு தடை தாண்டிகள் போடப் பட்டுள்ளதே மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். பல ஏழைக் குடும்பங்கள் துவிச்சக்கர வண்டிகளில் விறகினையும், ஊமல்களையும் ஏற்றிக் கொண்டு யாழ் நகரில் விற்பனை செய்யும் பலர் இந்தத் தடை தாண்டிகளால் பெரிதும் துன்பப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

இப்படிப் பாரத்துடன் செல்பவர்களுக்கு இன்னுமொருவர் உதவிக்குத் தேவைப் படுகின்றார். உதவிக்கு ஆளில்லாத நேரங்களில் இவர்கள் கீழே விழுவதையும் காண முடிகிறது. ஆகவே இத்தடை தாண்டிகளை அகற்றுவதற்கு அல்லது உயரத்தினைக் குறைப்பதற்கு உதவி புரியுமாறு, ஈ.பி.டி.பி தீவக அமைப்பாளர் முன்னாள் பா.உ.மாகிய ந.மதனராஜா அவர்களிடம் பலர் கையொப்பமிட்டு மகஜர் ஒன்றினைக் கையளித் துள்ளனர்.

## தோ.தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கை

### அரசின் தலையீடு அவசியம்

மலையகத் தோட்டத் தொழிலாளர்கள், ரூபா 400 தங்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று கூறி தொடங்கப்பட்ட சத்தியாக்கிரகம் தொடர்ந்தும் நடைபெறுகிறது. தோட்டத் தொழிலாளர்களுடைய கோரிக்கையில் உள்ள நியாயம் யதார்த்தமானது என்பதனால் நாட்டின் சகல தொழிற்சங்கங்களும் இப்போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றன.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைமையில் தான் இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டம் ஹட்டன் நகரில் ஆரம்பிக்கப் பட்டபோதும், மலையகத்தில் எதிரும் புதிருமாக சச்சரவு பட்டுக் கொண்டிருந்த சகல தொழிற்சங்கங்களையும் இது ஒன்றிணைக்கும் ஒரு மகத்தான சக்தியாக உருப்பெற்று விட்டது என்பதை மறுக்க முடியாது.

தொழிலாளர்களின் கோரிக்கை தொடர்பாக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு திட்டவட்டமான ஒரு முடிவை எட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கிடையில் பிரதமர் ரட்னசிறி விக்கிரமநாயக்க, விடுத்துள்ள செய்தி அனைவரையும் துணுக்குற வைத்திருக்கிறது. தோட்ட முதலாளிமார் சம்மேளனமும் தோட்டத் தொழிலாளர் சங்கங்களும் தங்களுக்கிடையிலான பிணக்குகளை தாங்களே தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று அவர் தனது அறிக்கையில் கூறியிருக்கிறார். இத்தகைய அறிக்கை உண்மையில் ஜனாதிபதி அவர்களின் கருத்துக்கு அமைவாக விடுக்கப்பட்ட அறிக்கைதானா என்பது ஐயத்திற்கிடமாகத் தோன்றுகிறது.

நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக அன்று முதல் இன்றுவரை விளங்கிவரும் மலையக தோட்டத் தொழிற் துறையில் ஏற்பட்டுள்ள பாரிய நெருக்கடி, அரசாங்கத்திற்குத் தொடர்புடையதல்ல என்றும் அவ்வளவு சுலபமாகக் கைவிடப்படக் கூடிய ஒன்றுமில்ல, என்பதை நாட்டு மக்கள் அனைவரும் நன்கு அறிவார்கள்.

இந்தப் பிரச்சனைக்கு விரைவில் நல்ல முடிவினை எட்டமுடியாவிட்டால் அடுத்த கட்டம் நிச்சயமாக நாடு தழுவிய பொது வேலை நிறுத்தத்தில் போய் முடியலாம். அவ்வாறான வேலை நிறுத்தமொன்று நடைபெறுமானால் ஏற்கனவே நலிவடைந்து போயுள்ள நாட்டின் பொருளாதாரம் மீண்டும் தலையெடுக்க முடியாத அதல பாதாளத்தில் போய் விழும் நிலைதான் ஏற்படும்.

ஓயாத போரினாலும் அந்நியச் செலாவணி தட்டுப்பாட்டினாலும் விலைவாசிகள் இமயமளவு வளர்ந்துவிட்டது. இந்தச் சுமையைத் தாங்க முடியாது தவிக்கும் மக்கள் மென்மேலும் துயரங்களைச் சுமக்கத் தயாராயில்லை.

அரசாங்கம் உடனடியாக தோட்டத் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கையைப் பெற்றுக் கொள்வதற்கேற்ற வழி வகைகளைச் செய்தாக வேண்டியது மிக முக்கியமான கடமையாகும்.

## தமிழாசிரியர் சங்கத் தேர்தல்கள் 3 கட்டமாக நடைபெறும்!

(காரைதீவு நிருபர்)

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் புதிய நிருவாகத் தெரிவுக்கான தேர்தல் மூன்று கட்டங்களில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய இடங்களில் நடாத்தப்படவுள்ளது.

அதற்கான வேட்பாளர் பட்டியல் சகல பிரதிநிதிகளுக்கும், வேட்பாளர்களுக்கும் அந்தந்த கிளைச் செயலாளர்களூடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் நேற்றுத் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட பிரதிநிதிகள் வாக்களிக்க வசதியாக அங்கு ஒரு தேர்தல் நடாத்த சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. அத்தேர்தல் எதிர்வரும் 12.03.2001ம் திகதி யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் விசாலாட்சி மண்டபத்தில் நடைபெறும்.

வன்னி இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேச பிரதிநிதிகள் வாக்களிக்க வசதியாக முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் எதிர்வரும் 19.03.2001ம் திகதி மற்றொரு தேர்தல் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், வன்னி தவிர்ந்த நாட்டின் ஏனைய பாகங்களிலுள்ள சங்கப் பிரதிநிதிகள் வாக்களிக்க திருகோணமலை புனித மரியாள் கன்னியர் மடக் கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 31.03.2001 ஆம் திகதி இறுதியான தேர்தலொன்று ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

இவை அனைத்திற்கும் தேர்தல் அதிகாரியாக சங்கத்தின் கல்வி கலாசாரச் செயலாளர் எஸ்.பாலசிங்கம் நியமிக்கப் பட்டுள்ளார். இவர் இம்மூன்று தேர்தல் வாக்களிப்பு நிலையங்களுக்கும் சென்று தமது கடமையைச் செய்வார்.

மேற்படி தீர்மானங்கள் யாவும் கடந்த 01.03.2001 ஆம் திகதி நடைபெற்ற சங்கத்தின் விசேட செயற்குழுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறை வேற்றப்பட்டன.


முரசு வாசகப் பெருமக்களுக்கு புனித ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்


## மட்.நகர அபிவிருத்திக்கு 82 கோடி அனுமதி!

மட்டக்களப்பு நகர் நவீன மயப்படுத்தி அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இத்திட்டத்திற்கென நகர அபிவிருத்திப் பொது வசதிகள் அமைச்சு 82 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

அபிவிருத்தி செய்யப்படவுள்ள திட்டங்களின் சாத்தியக் கூற்று அறிக்கைகள் பரிசீலிக்கப்பட்டுச் சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

முதற்கட்ட அபிவிருத்தியின் கீழ் மட்டக்களப்பு முனைத்தெரு, பஸ் நிலையப் பகுதி என்பன அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. 15 பஸ்கள் ஏக காலத்தில் தரித்து நிற்கக் கூடியதாகவும் 15 பஸ்கள் வந்து போகக் கூடியவாறும் மட்டக்களப்பு இ.போ.ச.பஸ் நிலையம் அபிவிருத்தி செய்யப்படும்.

அதேவேளை தனியார் பஸ் நிலையமும் மலசலகூட வசதிகளுடன் நவீன மயப் படுத்தப்படும். மட்டக்களப்பு இ.போ.ச.பஸ் நிலையத்திற்கு முன்னாலுள்ள மாநகர சபைக் காணியில் நவீன கடைத் தொகுதி அமைக்கப்படும்.

## கொழும்பில் கம்பன் விழா

கொழும்புக் கம்பன் கழகம் மே மாதம் 4ம் திகதி முதல் 8ம் திகதிவரை கம்பன் விழாவை கொழும்பில் நடாத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது. வழக்கம் போல் இவ்வாண்டு விழாவிலும் எம் நாட்டு அறிஞர்களும் தமிழ் நாட்டு அறிஞர்களும் கலந்து கொள்ளவிருக்கின்றனர். ஆண்டு தோறும் நடைபெற்றுவரும் கம்பன் விழா காலை-மாலை நிகழ்ச்சிகளாக நடைபெற்றுவருவதுபோல் இவ்வாண்டும் மிகச் சிறப்பான முறையில் இவ்விழாவினை நடாத்துவதற்கு கொழும்பு கம்பன் கழகத்தார் ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கியுள்ளனர்.

## மட்டக்களப்பில் தனியார் வங்கி முகாமையாளர் கைது!

மட்டக்களப்பிலுள்ள பிரபல தனியார் வங்கியொன்றின் முகாமையாளர் ஒருவர் பணமோசடி சம்பந்தமாகக் கைது செய்யப் பட்டு விசாரணையிலுள்ளார்.

குறித்த வங்கியிலிருந்து பெருந்தொகைப் பணம் மோசடி செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. மேலதிக விசாரணைக்காக சம்பந்தப்பட்ட முகாமையாளர் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பில் செயற்படும் தனியார் வங்கிகளில் குறித்த வங்கியும் அதிகளவான வாடிக்கையாளர்களைப் பிடித்துக் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த விசேட திட்டம்!

நாட்டில் அதிகரித்து வரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

இதற்கமைய குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதற்காக விசேட வலையமைப்பில் சகல பொலிஸ் நிலையங்களும் இணைக்கப்படும். இவ்வாறான விசேட திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளதாக குற்றச் செயல்கள் மற்றும் பயங்கரவாத விசாரணைகளுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் சிறிசேன ஹேரத் தெரிவித்தார்.

குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதில் ஏனைய நிறுவனங்களின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வது பற்றியும் கலந்துரையாடப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரது ஆலோசனைகளும் பெற்றுக் கொள்ளப்படவுள்ளன.

இராணுவத்திலிருந்து தப்பித் தலைமறைவாயுள்ளோர் அதிகளவான குற்றச் செயல்களைப் புரிந்து வருகின்றனர் என்பது பரவலான குற்றச் சாட்டாகும்.

## செங்கலடியில் போலி மருத்துவ நிலையம் கண்டுபிடிப்பு!

மட்டக்களப்பு-செங்கலடியில் வைத்தியச் சான்றிதழ் இல்லாது இயங்கி வந்த போலி டாக்டரின் மருந்தகம் சுகாதார வைத்திய அதிகாரிகளால் திடீர் முற்றுகைக்கு உள்ளானது.

சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.நவலோஜிதன் தலைமையிலான குழுவினரே இப்பரிசோதனையை நடத்தி போலி வைத்தியரைக் கண்டு பிடித்தனர். அதனைத் தொடர்ந்து அந்தப் போலி வைத்தியசாலை உடனடியாகச் சீல் வைத்து மூடப்பட்டது.

செங்கலடிப்பொதுச் சந்தைக் கட்டடத்தில் நீண்ட காலமாக இயங்கி வந்த இந்த போலித்தனமான வைத்தியர் மேற்கொள்ளும் கருத்தடை, கருச்சிதைவு மற்றும் இதுபோன்ற சட்ட விரோதமான வைத்திய முறை பற்றி 'முரசு' முன்னரே செய்தி வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

புலிகளும் இவரைக் கடத்திச்சென்று நீண்டநாள் விசாரணையில் வைத்திருந்து பெருந்தொகைப் பணம் அறவிட்டபின் விடுவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

போலி வைத்தியசாலையை மூடுவதற்கு நடவடிக்கை எடுத்ததையிட்டுப் பொதுமக்கள் நன்றி தெரிவிக்கிறார்கள்.

## தலிபானைக் கண்டித்து பௌத்த சாசன அமைச்சு கையெழுத்து வேட்டை!

(நமது நிருபர்)

ஆப்கானிஸ்தானிலுள்ள சிலைகள் யாவற்றையும் தகர்த்தெறியப் போவதாக அந்நாட்டு ஆட்சியாளர்களான தலிபான் இயக்கத்தினர் அறிவித்துள்ளனர்.

இதன் பிரகாரம் அங்குள்ள உலகிலேயே அதி உயரமானது எனக் கருதப்படும் 196 அடி 150அடி கொண்ட புத்தரின் சிலைகள் உட்பட, நாட்டிலுள்ள சகல மற்றும் சிலைகளையும் அழித்து விடப்போவதாக அவர்கள் அறிவித்துள்ளனர்.

இதனை இலங்கையிலுள்ள பௌத்தர்கள் கண்டித்துள்ளனர். தலிபானின், தீர்மானத்திற்கெதிராக இலங்கையிலுள்ள பௌத்தர்களின் கையெழுத்துக்களைத் திரட்டும் நடவடிக்கையொன்றை பௌத்த சாசன அமைச்சு துவங்கியுள்ளது.

பெப்ரவரி மாதம் 09ஆம் திகதி நோன்மதி தினத்தன்று அருகிலுள்ள பௌத்த ஆலயங்களுக்குச்சென்று கண்டனத் தீர்மானத்தில் கையெழுத்திடுமாறு அமைச்சு பௌத்தர்களைக் கேட்டுள்ளது.

தலிபானின் முடிவுக்கெதிராக இலங்கையே முதலில் எதிர்ப்புத் தெரிவித்தது என்று பிரதியமைச்சர் எதிரிவீர பிறேமரட்ண தெரிவித்தார். இது விடயமாக முஸ்லிம் நாடுகளின் தூதுவர்களிடம் பிரத்தியேக சந்திப்பு ஒன்றை நடத்தத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

## மலையகத் தொழிலாளர் போராட்டங்களுக்கு கிழக்கிலும் ஆதரவு பெருகுகிறது

நானூறு ரூபா சம்பள உயர்வு கோரி ஹட்டன், பதுளை ஆகிய நகரங்களில் இடம் பெற்றுவரும் சத்தியாக்கிரகப் போராட்டம் பலமடைந்து வருகிறது.

மலையகத்தில் எதிரும் புதிருமாக இருந்த பல தொழிற் சங்க அமைப்புகளும் சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து அதில் பங்கு பற்றியுமுள்ளன.

சம்பள உயர்வு சம்பந்தமாக கடந்த 2ம் திகதியன்று அறிக்கை சமர்ப்பிக்கும்படி ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழு கேட்கப் பட்டிருந்தது.

அதன்படி அக்குழுவினரால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆயினும் இன்னமும் ஜனாதிபதி தனது முடிவை அறிவிக்கவில்லை.

இதனிடையே பல காரணங்களையும் சுட்டிக் காட்டிய முதலாளிமார் சம்மேளனம் தோட்டத் தொழிலாளருக்கு 400 ரூபா சம்பள உயர்வு வழங்கத் தம்மால் முடியாது என்றும் இது விடயமாகத் தாம் நீதிமன்றம் செல்லத் தயார் என்றும் அறிவித்துள்ளது.

இதேவேளை தோட்டத் தொழிலாளரின் சம்பள உயர்வுக் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவிக்கும் இயக்கம் கிழக்கிலும் விரிவடைந்துள்ளது. காத்தான்குடியிலுள்ள முஸ்லிம் தொழிற் சங்கமொன்றும், கல்முனையிலுள்ள தமிழ் முஸ்லிம் தொழிற் சங்கமொன்றும் ஆதரவு தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளன.

## அமெரிக்கத் தூதுக்குழுவினர் யாழ் விஜயம்

### 4 கோடி ரூபாவுக்கான வைத்திய உபகரணங்கள் வழங்கினர்!

அமெரிக்கத் தூதுவர் அஸ்லி ஹில்ஸ் தலைமையிலான குழுவினர் கடந்த வாரம் யாழ்ப்பாணம் சென்று திரும்பினர்.

அரச சார்பற்ற உதவி அமைப்புக்கள், அரச துறையினர், பல்கலைக்கழக சமூகத்தினர் மற்றும் இடம் பெயர்ந்த மக்கள் ஆகியோரையும் இவர்கள் சந்தித்தனர்.

அரச அதிபருடனான சந்திப்பில் வட பகுதி அபிவிருத்தி பற்றி ஆராயப்பட்டது. அரச கூட்டுத்தாபன திணைக்களத் தலைவர்களும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

அமெரிக்கத் தூதுவர் 4 கோடி ரூபா பெறுமதியான வைத்திய உபகரணங்களை வழங்கினார்.

ஏற்கனவே அமெரிக்கத் தூதுவர் வட பகுதிக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளைக் கண்டறிந்தார் என்பது தெரிந்ததே.

உலகப் புகழ்பெற்ற

# எக்ஸ் ஒயில்

TRADE MARK

- காய்ச்சல்
- தலைவலி
- தலைச்சுற்று
- தலைப்பாரம்
- ஜலதோஷம்
- இருமல்
- மூக்கடைப்பு
- பல்வலி
- காதுவலி
- வயிற்றுவலி
- வாதத்தால் வரும் வலிகள்
- உணர்ச்சியற்ற பாகங்கள்
- சுளுக்கு
- தசை வலிகள்
- பூச்சிக் கடிகள்
- பிரயாணக் களைப்பு
- மதுவால் ஏற்படும் பிரச்சினை




**ஆகியவற்றிற்கு உடனடி நிவாரணி**

எக்ஸ் ஒயிலைப் பெற வசதியில்லாத பகுதிகளில் விற்பனையாளர்கள் தேவை. தொடர்பு கொள்ளவும்.

**SINGHA HOLDINGS (PVT) LTD**
**14,Ground Floor - Welikada Plaza - Rajagiriya.**
**T.P : 888214 Fax : 682984**

# விற்பனையாகிறது




## இங்கிலாந்து சாரதிகளின் எழுத்துப் பரீட்சை

**உத்தியோக ரீதியான வினாவிடை**

இப்புத்தகம் இங்கிலாந்து அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்ட வினா விடை புத்தகத்தில் இருந்து அவர்களின் அனுமதியுடன் மொழி பெயர்வு செய்யப்பட்டு இருக்கிறது லண்டனில் உள்ள அங்கிகரிக்கப்பட்ட வியாபாரிகளிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**வெளியீடு**

Mr.B.Shubotheesh (A.D.I), S.D.T School of motoring
Tel: 020 88641788, Mobile: 07831728157

**விற்பனையாளர்கள்**

London:
110 Holland Road,
East Hame,
London E6 2EP
T.P: 020 84704416.

Colombo: 340, Sea street, Col 11.
T.P: 422321.
309A 2/3, Galle Road, Col-06.
T.P: 074-515775.

# உங்கள் பலன் எப்படி?

**ஏ.சுலேமான் - A. Suleman**

உங்கள் சொந்தப் பலன் எப்படி? கைரேகை, நட்சத்திரம், பிறந்த நேரக் குறிப்பு பார்த்து, பலன்கள் சொல்வோம். காதல் கைகூட வைப்பது, வெளிநாட்டுப் பயணத்தடையை நீக்குவது, விரும்பியவரை மணமுடித்து வைப்பது, கணவன்-மனைவி பிரச்சனைகளைத் தீர்ப்பது.

★ நீண்ட காலமாக நீங்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகள்
★ பரீட்சை பற்றிய பதட்டமா?
★ பிசாசு, சூனியம், சாபக்கேடு துர் அதிஷ்டங்களால் இடர்பட்டு அழுந்துகிறவர்களுக்கு ஒரே பார்வையில் ஆறுதல் கிடைக்கும்.

பிறந்த திகதி, பெயர்-மொழி-தமிழர்-சிங்களவர் எவராயினும் எல்லோர் பிரச்சனையையும் தீர்த்து வைப்பார். முன்னதாக (காலை 10.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை) நேரம் நிர்ணயிக்க வேண்டும். அல்லது எழுதலாம்.

**Mrs.Madiha, 78 Plashet Grove,**
**London. E 6 1AB.**
**T.P. 02085860922**

# ~ தரணியாகலையில் ~
## புதிய முரசு முகவர் நியமனம்

தெரணியாகலை வாசகர்களின் சௌகரியம் கருதி: நா.இரவிச்சந்திரன், நியுலக்ஸ்மி வீடியோ அன்ட் புக் சென்டர், பஸ் நிறுத்தும் இடம், தெரணியாகலை என்ற இடத்திற்கு புதிய முரசு முகவர் ஒருவர் தெரிவாகியுள்ளார் என்பதை வாசகர்களுக்குத் தெரியப்படுத்துகிறோம்.

# நிதி உதவி கோருகிறார்



கண்டியைச் சேர்ந்தவரும் தலைநகரில் வாழும் இஸ்லாம் மதத்தை தழுவியவருமான Mohamed Kapoor Alias Janakiram. தனது மனைவி Sithi Nazeema. இவர்களின் 24 வயது ஒரே மகன், கல்கிசை தோமஸ் கல்லூரி பழைய மாணவருமான Rahuman என்பவர் மூளை பாதிப்பால் இடுப்பு சீவனற்று, நடக்க முடியாமல், 5 வருடமாக உட்கார்ந்த நிலையில் இருக்கிறார்.

இவரின் சிகிச்சைக்காக தென்னிந்திய அப்பலோ மருத்துவமனை, 5 இலட்சம் கோருகிறது. தங்களது ஒரே மகனை குணமாக்குவதற்கு போதிய பணவசதியின்றி, துயரில் ஆழ்ந்திருக்கும் பெற்றோர், அனைத்து முஸ்லிம்களும் இந்துக்களும், கிறிஸ்தவர்களும் உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றனர்.

**பண உதவி வழங்குவோர்:**
Sithi Nazeema
Savings A/c 0140-164197-101, Seylan Bank. Dehiwela கிளை
நேரில்: 91, 2nd Lane, Badowita, Mt.Lavnia
விலாசத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

# மலையாள மாந்திரீகம்





மலையாள மாந்திரீகத்தை இலங்கையில் திட்டவட்டமாகக் கற்றவர் டாக்டர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை, எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கு மட்டுமே இடமுண்டு எண்ணியவன்-எண்ணியவளைத் திருமணம் முடிப்பதற்குச் சிற்சில தடைகளா, திருமணமே நடக் காதா என்ற ஏக்கமா. காதல் தோல்வியாகிவிட்டதா, கணவன்-மனைவி ஒற்றுமை குறைகிறதா, கையில் பணம் தங்கவில்லையா, பணவருவாய் குறைவா, கொடுத்த கடன் திரும்பி வரவேண்டுமா, குடும்ப வாழ்க்கை இனியவையாக அமையவேண்டுமா, லக்சுமி கடாட்சம் பெறவேண்டுமா, வெளிநாட்டுப் பயணத்தில் தங்கு தடை ஏற்படுகின்றதா, தான் பெற்றபிள்ளை தன் பேச்சைக் கேட்கவில்லையா, பெருவாழ்வு-குபேர வாழ்வு பெற வேண்டுமா, குழந்தைப்பேறு கிட்டவில்லை எனக் கவலையா, கல்வியில் சித்தி பெற வேண்டுமா, கடந்த 33 வருடமாக ஸ்ரீ துர்க்கையின் அருட் கடாட்சத்தால் 100க்கு 100% வெற்றி பெற்றவர்கள் எமது பதிவேடு மூலம் தெரிந்து கொள்ளலாம், வெளிநாட்டவர்களுக்கு கடல் கடந்து செயல்பட கூடிய வண்ணம் அதிவிசேட மாந்திரீக உச்சாட்ட பிரிவு மூலம் உடனுக்குடன் அனுப்புவதால் வெற்றியும் உடனுக்குடன் கிடைக்கிறது. இது ஒரு பிரமாண்டமான அங்கீகாரம் பெற்றதும் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தில் மாந்திரீகப் பிரிவாக அதி உன்னத சேவையின் நிமித்தம் வெற்றி கிட்டுவது மிக மிகச் சுலபம், மாந்திரீக வேலைகள் வெற்றிக்கு அச்சொட்டான திட்டவட்டமான சரிவரும் திகதியும் கொடுப்பது என்றால் அது எமது திருவருளே, அதுமட்டுமல்ல காண்ட அடிப்படையில் ஜாதகங் களையும் கைரேகைகளையும் தெட்டத் தெளிவாக எழுதி அறிந்து கொள்ளலாம். இன்னும், அனைத்து உலக நாட்டில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் பிரச்சனைகளை உடனுக்குடன் மாந்திரீக சக்தியால் தீர்வு கண்டமையால், எண்ணற்ற வாடிக்கை யாளர்களின் நற்சாட்சிப் பத்திரங்களை எமது நிருவாக பதிவேட்டில் காணலாம்.

**வெளிநாட்டவர்களுக்கென அதி தொழிநுட்பம் வாய்ந்த 24 மணித்தியால தொலைபேசிச் சேவை உண்டு.**
Tel-466620, 466820 **தேவைகளுக்கு:-**

**உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி**
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika Uchchada Peedam.

**கொழும்பில்**
No.162,
Kotahena Street,
Mayfield Road,
Colombo 13,
Sri Lanka.

**நுவரெலியாவில்**
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 431137
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-466271, 466571
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.

# அற்புத சித்தர் மாந்திரீகம்

உங்கள் பிரச்சனை எதுவானாலும் அதில் உடன் வெற்றிகாண மட்டக்களப்பு-மலையாள-சோதிட மாந்திரீகச் சித்தர். பேராசிரியர்-கலாநிதி. "சக்திசரவணா" வுடன் தொடர்பு கொள்ளுங்கள். காதல் விவகாரம், குடும்பப் பிணக்கு, தொழில் விருத்தி, திருமணத் தடங்கல், பிரயாணத்தடை, சத்துரு ஜெயம் முதலான சகல விடயங்களிலும் நிச்சயம் வெற்றி பெறலாம். ஏழு தலைமுறை பாரம்பரியமும், 30 வருட சுய அனுபவ ஆற்றலும் கொண்ட "சக்தி சரவணா"வினால் நினைத்த காரியம், ஜாதகபலன், சோதிட அருள்வாக்கு, எண்சோதிடம் முதலான பிற சோதிட சேவைகளும் பெறலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கு விசேட துரிதசேவை மேற்கொள்ளப்படுகிறது. தபால் மூலம் தொடர்பு கொள்ளும் உள்ளூர் அன்பர்கள் 20 ரூபா முத்திரையுடன் தொடர்பு கொண்டு பதில் பெறலாம். இரகசியங்கள் அந்தரங்கமாகப் பேணப்படும். காலதாமதம்-பணவிரயம் இன்றி உடன் பரிபூரண வெற்றி பெற தொடர்பு கொள்ளுங்கள். நேரில் சந்திக்க- காலை 8 மணி முதல் மாலை 3 மணிவரை.

**தொடர்பு**

HON.PROF.DR.SHAKTHY SARAVANA;
48/12; SRI VIMALASARA ROAD;
KALUBOWILA; DEHIWALA; SHRI LANKA.
T.P.723646

(வியாழன் விடுமுறை)

வெளிநாட்டினர் தொடர்பு கொள்ள
T.P. 00941.723646

# துபால் மூலம் விஞ்ஞானம்

G.C.E. (A/L) ~ இரசாயனவியல்
Year - 9, 10, 11 ~ விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்
Year - 5 ~ ஆரம்ப விஞ்ஞானம்

ஆசிரியர்: **குமார் சிவப்பிரகாசம்**

விபரங்களுக்கு சுயவிலாசமிட்ட தபாலுறையுடன் விண்ணப்பிக்கவும்
**P.T.C** 14, Covington Road, Batticaloa.

# சுயதொழில் ஒன்றை ஆரம்பிப்பதற்கு எம்மால் உதவிகள் வழங்கப்படும்
## பதிவு இல. G/11/1437

தமது வீட்டில் இருந்துக் கொண்டே மொனிடர் மற்றும் சீ.ஆர் புத்தகங்கள், பப்படம், பீடீ, ஊதுவர்த்தி தயாரித்து மாதாந்தம் ஏறக்குறைய ரூ.8000/- பெற்றுக் கொள்ளுங்கள். 18 வயதிற்கு மேற்பட்ட எந்த பிரதேசத்திலிருந்தும் விண்ணப்பிக்கலாம். கல்வி அறிவு எதிர்பார்க்கப்பட மாட்டாது. பயிற்சி பெருவதற்கு மூலப் பொருட்கள் மற்றும் ஆலோசனைகள் வீட்டுகளுக்கு விநியோகிக்கப்படும். உங்கள் உற்பத்திகளை எமது நிறுவனத்திற்கு ஒப்படைக்கலாம். வாரத்தில் எந்த நாளிலும் சந்திக்கலாம்.

**விலாசம் எழுதப்பட்ட 9 X 4 கடித உறையில் விசாரிக்கவு ம்.**

Manager.
Krishan Ceylon Ltd.,
infont of tha post Iffice,
Elpitiya.

தங்களின் வாழ்க்கையின் கஷ்டங்கள், காதல் தோல்வி, வேலை வாய்ப்பு, கல்யாணத் தடை, பரீட்சைத் தோல்வி, வாகன அனுமதிப்பத்திரம், குடும்பப் பிரச்சனை, கணவன்-மனைவி கருத்துவேறுபாடு ஆகியவற்றை நிவர்த்தி செய்ய என்னை அணுகவும். பிரச்சனை நிவர்த்தியாகியபின் பணம் பெற்றுக் கொள்ளப்படும்.

**சந்திக்கும் நேரம்: காலை 10.00 இருந்து மாலை 8.00 மணிவரை**

**விலாசம் :**
**MR. ALI, 55. Rue des Poissonniers, 75018 Paris, France.**
**தொலைபேசி-0142552036**

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு ❋ 13 ❋ 03 ❋ 1920



உதிர்வு ❋ 03 ❋ 03 ❋ 1999

## அமரர் ஆறுமுகம் கணபதிப்பிள்ளை

*(வளலாய் அச்சுவேலி)*

**திதி: 12.03.2001**

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டோர் வருவாரோ மாநிலத்து. அன்பின் இருப்பிடமாய் பண்பின் உறைவிடமாய் பாசத்தின் பிறப்பிடமாய் குடும்பத்தின் குலவிளக்காய் திகழ்ந்து எங்களுக்கு வழிகாட்டி வாழவைத்த அன்புத் தெய்வமே நாங்கள் இப்போ சிறகொடிந்த பறவை போல் தனித்து நிற்கிறோம் ஐயா. நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து இரண்டாண்டுகள் ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவு எம் நெஞ்சை விட்டு அகலாது ஐயாவே. அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய கண்ணீர்ப் பூக்களை மாலையாக்கி எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம். அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை 40/1 விசுவமடுவில் 12.03.2001ல் நடைபெறும்.

பிரிவால் துயருறும் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*தகவல்: மகள்* Mrs.A,Srikantha, 46'St Mary's Road, Mattakkuli Colombo-15.

# மனோதத்துவ வைத்தியம் (General Psycho Therapy)

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் DR.P.ஆறுமுகம். அவர்களை சந்தியுங்கள் இளம் சமுதாயத்தினரை வாட்டும் உடல் மெலிவு, கனவில் சக்தி இழத்தல், பயம், ஞாபக மறதி, நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், நித்திரையின்மை, போன்ற தன்னம்பிக்கை இழக்க காரணமான வியாதிகளை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி உங்களையே நீங்கள் வெல்லுங்கள்.

## SEXUAL DISORDERS (தாம்பத்திய கோளாறுகள்)

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணம். என்பதை 90 நிமிடத்தில் தான் குறைவற்ற ஆண் மகனாகிவிட்டேன். என்று அடி மனதில் பதியவைத்த பின்னரே பணம் பெறப்படும். வெளிநாட்டிலும், உள்நாட்டிலும், பல நூற்றுக்கணக்கான இளைஞர்களை சுகமாக்கிய ஆதாரங்கள் உண்டு.

## வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு விஷேட ஏற்பாடுகள்

உங்களின் தாம்பத்திய (பாலியல்) குறைபாடுகளை நீக்க வழியின்றி தவிக்க தேவையில்லை. முழு விபரத்தையும் கடித மூலம். விளக்கி எழுதவும். பின் எமது சில கேள்விகளுக்கு பதில் தெரிந்த பின் தன்னுடைய குறைகள் முற்றாக நீங்க ஏற்ற மனோதத்துவ வைத்தியம் பதிவு செய்யப்பட்ட ஓடியோ கெசட் மூலம் மனோநிலையில் குறையற்றவர் என்றும், உடல் நிலை பாதிப்புக்கு உயர்தர மூலிகை மருந்தும் பெற்று வெற்றி பெற்ற ஆண் மகனாகுங்கள். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்) கட்டாயம் முத்திரை செலவு அனுப்பவும்.

## மட்டக்களப்பு விலாசத்திற்கு மாத்திரம் கடிதத் தொடர்பு கொள்ளவும்

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள், "ஹிஸ்டிரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளார்கள். நீரழிவு (கட்டுப்பாடான நடைமுறையுடனும் சில ஆசனப் பயிற்சியும் அத்துடன் எமது மருந்து பாவித்தும் பலர் நீரழிவு நோயில் இருந்து முற்றாக சுகமாகியுள்ளனர்) மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளை போதல், கிரந்தி நோய், குழந்தை பேறு இன்மை, இன்னும் தீர்க்க முடியாத வியாதிகளுக்கும், வைத்தியம் உண்டு. (கொழும்பில் விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்)

**கொழும்பில் மார்ச் 18 முதல் 25 திகதி வரை**

(செல்டெல் இலக்கம் மாற்றப்பட்டுள்ளது)
**DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492**
**New Ahmed Tourist Inn, Bang Bang Building,**
**Entrance Bankshall Street,No. 10 Reclamation Road, Colombo 11.**
T.P. 074-722841, 074-715546 செல்டெல்: 072-664867

**கல்முனையில் மார்ச் 31, ஏப்ரில் 01 திகதிகளில்**

T.M.M. பாமஸி, கல்முனை. T.P. - 067- 29329

**வவுனியாவில் மார்ச் 10, 11 திகதிகளில்**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)
(Vanni Inn) 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோயில் ஒழுங்கை, வவுனியாவில் சந்திக்கலாம் T.P.024-22074, 21405, 21406.

கடிதத் தொடர்பு: **RESIDENT T.P:- 065-24019**

**DR.P.ARUMUGAM S.A.M.P.,**
**NO.51/5. Koolavady Road,**
**Batticaloa. SRI LANKA.**

# SPOKEN ENGLISH

**By: K.M.N. NALRAVI**

**யாருக்காக?**

★ தொழில் புரிபவர்களுக்காக
★ 16 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களுக்காக
★ வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்காக
★ இல்லத்தரசிகளுக்காக (Housewives)

- ஒவ்வொரு மாணவரிடமும் அதிக கவனம் செலுத்தும் பொருட்டு ஒரு வகுப்பில் மட்டுப்படுத்தப்பட்ட மாணவர் தொகை.
- ஆங்கிலம் சற்றேனும் பேசத் தெரியாதவர்கள் கூட சரளமாக பேசப்பயிற்சி.
- அடிப்படையிலிருந்து இலக்கணம்
- இலக்கணப்பிழையின்றி ஆங்கிலம் எழுதவும் பயிற்சிகள்.
- நவீன வசதிகள் கொண்ட குளிரூட்டப்பட்ட வகுப்பறை.
- பிரித்தானிய உச்சரிப்பு முறையில் பேச்சுப்பயிற்சி.
- இலகுவாக விளங்கிக் கொள்வதற்கான கல்வி அனுகுமுறைகள்.
- Audio Cassette மூலமாகவும் வேறு நவீன கருவிகள் மூலமாகவும் பயிற்சி.
- வகுப்பிற்கு பின்பு வீட்டிலும் பயிற்சி பெற Cassetteகள்.
- வகுப்பில் பயிற்சி பெற Video Cassetteகள்
- பேச்சுப்பயிற்சிக்காக அதிக நேரம்
- 3 அல்லது 6 மாத கால பாடத்திட்டம்
- பாட முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

**குறிப்பு :** அலுவலக நேரம் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை (புதன்கிழமை அலுவலகம் மூடப்பட்டிருக்கும்)

**NALRAVI**
**ENGLISH LANGUAGE CENTRE**
527, First Floor, Galle Road, Wellawata, Colombo-06. (Hotel Ceylon Innsக்கு அருகில்)

# பேச்சுவார்த்தை மீது இந்தியாவின் பார்வை

பிரித்தானியாவின் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் புலிகளுக்குத் தடை விதிக்கப்படுமா என்பதுபற்றி தமிழ்ப் பத்திரிகைகள் பல தப்பான கணிப்பீட்டையே வெளிப்படுத்தி வந்தன.

பிரித்தானியா புலிகளடங்கிய தடைப் பட்டியலை வெளிப்படுத்தியதற்கு முந்திய கடந்த ஒருமாதகால பத்திரிகைகளை, அவற்றில் வெளிவந்த கட்டுரைகளைத் திரும்பிப் பார்ப்பவர்கள் இந்த உண்மையைப் புரிந்து கொள்வர்.

இதன் மூலம் மக்களை என்ன நடக்கப் போகிறது என்று தெரியாத ஒரு இருட்டிலேயே வைத்திருக்க முனைந்தன.

பத்திரிகைகளுக்கு உண்மை நிலைமை புரிந்திருந்தாலும்கூட, அவை அதனை மூடிமறைத்து பொய்யான கற்பிதங்களையே மக்களுக்கு ஊட்டின.

மக்கள் உண்மையின் பாரதூரத் தன்மையைத் தாங்கிக் கொள்ள மாட்டார்களென்று கருதியும், பாதகமான விடயங்களை வெளிப்படுத்தினால் தமது பத்திரிகைகள் விற்பனையாகாது என்ற அச்சத்திலும் இவை இப்படியான பொய்மை எழுத்துக்களால் மக்களை குளிரவைத்து வந்தன.

ஆனால் இதன் விளைவு மிக மோசமானதாக அமையும் என்பதையிட்டு இவர்கள் கவலைப்படுவதில்லை.

பொய்யான மனத்திருப்தியை மக்களுக்கு ஊட்டிக்கொண்டேவந்து விட்டு திடீரெனக் கைவிட்டால் மக்கள் மிகுந்த அதிர்ச்சிக்குள்ளாகிவிடுவார்கள்.

இவ்வாறு, பிரித்தானியா புலிகளைத் தடை செய்ய மாட்டாது என்ற எண்ணத்தைத் தலைகீழாக நின்று பரப்பிவந்த ஒரு பத்திரிகை தடைசெய்த மறுநாளே இத் தடை பிரித்தானியாவில் புலிகளுடன் தஞ்சம் பெறுபவர்களுக்கும், ஏற்கெனவே தஞ்சம் அடைந்தவர்களுக்கும் கூட அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாக ஒரு பாரிய குண்டை மக்களின் தலையில் மிக சாதாரணமாகத் தூக்கிப் போட்டுவிட்டு இருக்கிறது.

இது நோய்வாய்ப்பட்ட குழந்தையை ஆரோக்கியமாக இருப்பதாகப் பெற்றோருக்குக் கூறிக்கொண்டு வந்த ஒரு டாக்டர் திடீரென ஒருநாள் அக் குழந்தை இறந்துவிடப் போவதாகத் தெரிவிப்பதைப் போன்றது.

இப் பத்திரிகைகள் பிரித்தானியாவில் புலிகள் தடைசெய்யப்படும் சாத்தியத்தை மறைத்து வந்தபோது நாம் அப்போதே இதற்கான சாத்தியம் பெருமளவு உண்டு என்ற உண்மையை உணர்த்தியிருந்தோம்.

(பார்க்கவும்: தினமுரசு 393. அதன் '*பிரித்தானியா புலிகளைத் தடை செய்யுமா?*' என்ற தலைப்பிலான எக்ஸ்ரே ரிப்போர்ட்டின் ஆராய்வின் முடிவில் "....இந்த நகர்வுகளைப் பார்க்கும் போது புலிகள் மீதான தடைக்கான வாய்ப்புகள் அதிகரித்து வருவதாகவே உணரக்கூடியதாக உள்ளது" என்று நிலைமையை வெளிப்படுத்தியிருந்தோம்.)

எது எவ்வாறாயினும் இப்போது நாம் பிரித்தானியாவின் இப் புலிகளின் மீதான தடைக்கான காரணங்களையும், அதன் விளைவுகளையும் மிக யதார்த்தமாக ஆராய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அதிலும் ஒரு பொய்யான பார்வையைச் செலுத்தி நிகழ்ந்த தவறுகளைப் புரிந்துகொள்ளாது விடுவது எதிர்காலத்தில் இன்னொரு பள்ளத்தாக்கில் வீழுவதற்கே வகைசெய்யும்.

இதேவேளை நாம் இப்போது இப் பத்திரிகைகள் இறங்கியிருக்கும் இன்னொரு கண்ணாமூச்சி விளையாட்டிலும் ஏமாறாதிருக்க எம்மைத் தயாராக்கிக் கொள்ள வேண்டும்.

அதாவது, சில பத்திரிகைகளில் இப்போது வேறுவிதமான கட்டுரைகள் வெளிவருகின்றன.

பிரித்தானியா ஓர் ஏகாதிபத்திய நாடு, அது இலங்கையில் இரு இனங்களையும் அடக்கியாண்ட நாடு, அந்த நாடு தமிழ் மக்களுக்கு சார்பாக இருக்குமென நாங்கள் நம்பிக்கை வைக்க முடியாது, அது தடை செய்வதால் எவ்வித பாதிப்பும் ஏற்படப் போவதில்லை என்ற விதத்தில் இப்போது எழுதத் தொடங்குகிறார்கள்.

தடை செய்ய முன்னர் பிரித்தானியா ஒரு ஜனநாயகப் பாரம்பரியம்மிக்க நாடு என்று புகழாரம் சூட்டிவந்த அதே எழுத்தாளர்கள்தான் இப்போது இப்படி மாறி எழுதுகிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

இப்போது பிரித்தானியாவை ஏகாதிபத்தியமாகச் சித்திரிப்பதால் இத் தடையின். தார்ப்பரியம் ஒன்றும் மாறிவிடப் போவதில்லையென்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

எமது பின்னடைவுகளின் காரணங்களை எப்போதுமே மறு தரப்பின் குற்றமாகவே கூறித் திருப்திப் பட்டுக்கொள்ளுகின்ற மனோபாவம் எம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளவே உதவும்.

அத்தோடு இத் தடையின் தார்ப்பரியத்தை உணர்ந்து கொள்ள விடாது பசப்பு வார்த்தைகளால் மழுப்பி விடுகின்ற முயற்சியும் அர்த்தமற்றதே.

நாம் எமக்கு வந்த நோய் என்னவென்பதைத் தெரிந்துகொண்டால்தான் அதற்கு வைத்தியம் பார்க்கலாம்.

இதைவிடுத்து, 'விழுந்தாலும் மீசையில் மண்படவில்லை' என்பது போன்ற பசப்பு வார்த்தைகளால் மக்களை ஏமாந்திருக்கச்செய்யும் முயற்சிகளிலும் பல பத்திரிகைகள் இறங்கியுள்ளன.

அவை, "பிரித்தானியா பட்டியலை அறிவித்திருக்கிறதேயன்றி, அந் நாட்டின் இரு சபைகளிலும் அவை இன்னும் நிறைவேற்றப் படவில்லை", "தடை செய்தாலும் அத் தடையை எதிர்த்து அப்பீல் செய்யலாம்", "சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தால், இத் தடையால் கெடுபிடிகள் மேற்கொள்ளப் பட மாட்டாது" என்பதுபோன்றவற்றைக் கூறி மக்களை சமாதானப் படுத்தி விடலாமென முயற்சிக்கின்றன.

பிரித்தானியா அறிவித்த பட்டியல் நிச்சயம் அதன் இரு சபைகளாலும் நிறைவேற்றப்பட்டுவிடும் என்பது இப் பத்திரிகைகளுக்கு தெரியாததல்ல.

பெரும்பான்மையுடன் ஆட்சியிலுள்ள ஓர் அரசாங்கம் தேர்தலை எதிர் நோக்கும் இறுதிக் கட்டத்தில், தோல்வியைத் தழுவக்கூடிய சந்தர்ப்பம் உள்ள ஒரு முக்கியத்துவம் வாய்ந்த சட்ட மூலத்தை முட்டாள் தனமாக முன்வைக்கப் போவதில்லை.

அவ்வரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள அச் சபைகளில் இவற்றை நிறைவேற்றுவது அதற்குப் பெரும் கடினமல்ல.

அத்தோடு இச் சட்டமூலம் சர்வதேசக் கடப்பாடுள்ள ஒரு விடயமாதலால் அதை ஒரு விளையாட்டுத் தனமாக எடுத்தாண்டு தோல்வியுறச் செய்து அவமானப்பட அது முற்படப் போவதில்லை.

எனவே நிறைவேற்றப்படுவது ஏற்கனவே நிச்சயமாகிவிட்ட நிலையில் தான் அது இச் சட்டமூலத்தை முன் வைக்கிறது என்பதை இப் பத்திரிகையாளர்கள் புரியாததுபோல் நடிப்பதுதான் போலித்தனமான பத்திரிகைக் கலையாக இன்று ஆகிக் கிடக்கிறது.

அடுத்ததாக, இச் சட்டமூலத்தை எதிர்த்து அப்பீல் செய்யலாம் என்பது எந்தவிதத்திலும் ஒரு பாரிய சாதகமல்ல.

அமெரிக்கா புலிகளைத் தடைசெய்த போதும், இந்தியா புலிகளைத் தடை செய்த போதும் அத்தடைகளை எதிர்த்து அப்பீல் செய்ததும் வழக்காடியதும் உண்டு.

ஆனால் அத் தடைகளை இதனால் அசைக்க முடியவில்லை.

உண்மையில், இவ்வாறான சில சந்தர்ப்பங்களை அவர்கள் வேண்டுமென்றே வழங்குவது வழக்கம்.

பாதிக்கப்பட்ட தரப்பை, ஒரு கடும் எதிர்த்தாக்கத்தில் இறக்காது இத்தகைய கடைசி நம்பிக்கைகளில் தொங்கிக்கொண்டு காலம் கடத்த வைப்பதற்காக இவ் வழிவகை செய்யப்படுகிறது.

இவற்றுக்கு அப்பீல் செய்வதும், வழக்காடுவதும் எமது ஜனாதிபதித் தேர்தல்களை எதிர்த்து வழக்காடுவது போன்றது.

வழக்குகள் வெல்லப்போவதில்லை என்பதே இங்கு யதார்த்தமாக இருக்க, ஏதோ சாக்குப் போக்காக இந்த வழக்குகள் நிகழ்ந்தேறும்.

அத்தோடு அப்பீல்களாலும், வழக்குகளாலும், இச் சட்டங்கள் இடைநிறுத்தப்படவும் போவதில்லை.

இவ் அப்பீல்களோ வழக்குகளோ வெல்லப்பட்ட பின்னரே இச் சட்டமூலம் நிறுத்தப்படலாமேயன்றி அப்பீல் போட்டதும் இச்சட்டமூலம் இடைநிறுத்தப்பட்டுவிடாது - அமுலிலேயே இருக்கும்.

அத்தோடு, பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தால் இத் தடையால் கெடுபிடிகள் ஏற்படப் போவதில்லை என்றுகூறிச் சமாதானப் படுத்துவதும் இப் பத்திரிகைகளின் கற்பிதமே.

அது முற்றிலும் பிரித்தானியாவைப் பொறுத்த விடயம்.

பிரித்தானியா எப்படி நடந்து கொள்ளுமென நாம் எமது மனவிருப்பத்தின்படி கோடுகீறிவைக்க முடியாது.

இது பிரித்தானியா எப்படி நடக்கும் என்று நாம் தீர்மானிப்பதாக அல்லாமல் மறுதலையாக எமது சமாதானப் பேச்சுக்கள் எப்படி நடக்க வேண்டுமென பிரித்தானியா அதிகாரம் செலுத்தக்கூடிய ஒரு பிரம்பாகத்தான் உண்மையில் அமைந்துள்ளதென்பதை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

எனவே இச் சமாதானங்களால் திருப்தியடைவதற்கு ஒன்றுமில்லை.

அதைவிடுத்து எதிர்கொள்ள வேண்டிய யதார்த்தத்தையிட்டு மக்களை தயார்படுத்துவதே இப் பத்திரிகைகள் செய்ய வேண்டிய உபயோகமுள்ள பணி.

இப்போது நாம் நிலைமையை ஆராய்வோம்.

பிரித்தானியா, தமிழ்மக்கள் மீது எவ்வித அசூசை கொண்ட நாடுமல்ல, இங்கு நடக்கும் விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக இயங்கிய நாடுமல்ல.

சொல்லப்போனால் ஒருவிதத்தில் விடுதலைப் போராட்டத்துக்கு களமமைத்துக் கொடுத்ததும், ஓர் இயங்குதளமாக அமைந்ததுமான ஒரு நாடு.

இலங்கையில் வேரூன்றிய பல விடுதலை இயக்கங்களும், அவற்றின் முன்னணி அமைப்புகளும் இங்குதான் பிரவேசித்திருந்தன.

ஈரோஸ், கெஸ், ஈழ விடுதலை இயக்கம் போன்றவற்றை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

அத்தோடு இத்தகைய இயக்கங்களுக்கான வெளிநாட்டு ஆயுதப் பயிற்சிகளுக்கும், ஏனைய நாட்டு விடுதலை இயக்கங்களின் நட்புறவுகளுக்கும் பிரித்தானியாவே களமமைத்துக் கொடுத்திருந்தது.

விடுதலைப் போராட்டத்தில் இந்தியா எத்தகைய பின்புலமாக அமைந்திருந்ததோ அவ்வாறே பிரித்தானியாவும் ஒரு விதத்தில் தங்கு தடையற்ற ஒரு இயங்கு தளமாக இவ் விடுதலை இயக்கங்களுக்குப் பயன்பட்டு வந்தது.

விடுதலைப் புலிகளின் சர்வதேச தலைமைச் செயலகமும் இங்கேயே இயங்கியது.

அத்தகைய பிரித்தானியா இப்படி ஒரேயடியாக, பயங்கரவாத அமைப்பாக விடுதலைப் புலிகளையும் நிரைப்படுத்த வேண்டிய அளவுக்கு நிலைமை எவ்வாறு மாறியது என்பதே மலைப்புக்குரிய கேள்வியாக இன்று தெரிகிறது.

இது பலரால் நம்ப முடியாத, ஆனால் நம்பித்தான் ஆகவேண்டிய உண்மையாக இன்று ஆகிப்போயுள்ளது.

இவ்வாறு மலைக்கும்போது நாம் ஒரு சில விடயங்களைப் பாராமுகமாக இருந்துவிட்டதை சற்று எண்ணிப்பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

பிரித்தானியா எப்போதும் ஒரு மனிதாபிமானக் கருத்தில் இலங்கைத் தமிழர்களின் பிரச்சனைபற்றியும், அவர்கள் அனுபவிக்கும் இன்னல்கள் பற்றியும் அக்கறை காட்டியுள்ளதேயன்றி ஒரு அரசியல் கருத்தில் எந்த ஆதரவும் தெரிவித்ததில்லை.

அது எப்போதும், இலங்கையின் இறைமையை வலியுறுத்தியே வந்திருந்ததுடன், அண்மைக்காலமாக இலங்கையில் பிரிவினையைத் தான் ஏற்கப் போவதில்லை என்று வெளிப்படையாகவே சொல்லி வந்தது.

மிக அண்மையில்கூட பிரித்தானிய வெளிநாட்டமைச்சர் பீற்றர் ஹெயின், இலங்கையில் ஒரு பிரிவினை ஏற்படுவதை இந்தியாவும், அமெரிக்காவும், தாமும் ஒருபோதும் ஏற்கப்போவதில்லையெனத் தெரிவித்திருந்தார்.

இதன்போது தமது நாட்டின் நிலைப்பாட்டுக்குப் பக்கபலமாக அவர் இந்தியாவையும் அமெரிக்காவையும் துணை சேர்த்திருந்ததன் வலுவை நாம் சர்வசாதாரணமாக உதாசீனம் செய்துவிட முடியாதென்பதை எமது தமிழ்ப் பத்திரிகையாளர்கள் கணக்கிலெடுக்கவில்லை.

நாம் பிரித்தானியாவிடம் எதிர்பார்க்கக்கூடிய ஆதரவின் எல்லையையும் உணரவில்லை.

உண்மையில் பிரித்தானியாவின் சர்வதேச நிலைப்பாடும் கடப்பாடும் அமெரிக்காவுடன் ஒருங்கிசைந்ததாகவே அமைகிறது என்பதையும் நாம் கணித்துக் கொள்ளவில்லை.

தற்போதுகூட ஈராக்கின் மீதான தாக்குதலில் ஏனைய நாடுகளின் கண்டனங்களுக்கு மத்தியிலும் பிரித்தானியா அமெரிக்காவுடன் கைகோர்த்தே இயங்கியது.

பிரித்தானியாவின் இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டமூலம்கூட அமெரிக்காவின் நிலைப்பாட்டை ஒட்டியே அங்கும் அறிமுகப்படுத்தப்படுகிறது.

இத்தகைய ஒரு சட்டத்தில் பிரித்தானியா, அமெரிக்காவில் தடைசெய்யப்பட்ட இயக்கங்களின் பட்டியலை முதன்மையளித்து ஆராய்வதுடன் அமெரிக்க சிபாரிசுகளையும் ஏற்கவே செய்யும்.

அமெரிக்காவில் புலிகள் ஏற்கெனவே தடைசெய்யப்பட்டிருப்பது தெரிந்ததே.

இதேவேளை, இத் தடைச் சட்டமானது பயங்கரவாத இயக்கங்களுக்கான வரையறையொன்றை மேற்கொண்டு அதற்கமையவே அதனால் தடைசெய்யப் படவேண்டிய அமைப்புகளை அடையாளம் காண்கிறது.

எனவே இப் பயங்கரவாத வரையறைக்குள் உள்ளடங்குகிறதா வெளியமைகிறதா என்பது, ஒரு அமைப்பின் கடந்தகால நடவடிக்கைகள் பற்றிய எடைபார்ப்பினால் மேற்கொள்ளப்படுவதாக அமைகிறதேயன்றி எதிர்காலம் பற்றிய மதிப்பீட்டாலல்ல.

அதனால்தான் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடப் போவதாக புலிகள் தெரிவித்த போதும், அதற்கு நல்லெண்ணச் சமிக்ஞையாக ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்தில் இறங்கியிருந்த போதும், அவற்றை பிரித்தானியா கருத்திலெடுக்கவில்லை.

தடைவிதிப்பதானது பேச்சுவார்த்தையுடன் சம்பந்தமற்றதெனவே அது கருதியது.

தனது சொந்த நாட்டின் கிளர்ச்சியாளர்களான ஐரிஷ் போராளிகளுடன் பிரித்தானியா பேச்சுவார்த்தை நடத்திய போதே அவற்றைத் தடைசெய்த நிலையிலேயே பேச்சுவார்த்தையை நடத்தியது.

அப்படியிருக்க, வேறு நாடொன்றின் பேச்சுவார்த்தைக்காக தனது சொந்த நாட்டில் மேற்கொள்ளப்படும் தடையை இடைநிறுத்தி வைத்திருக்கவேண்டுமென்ற அவசியம் அதற்குக் கிடையாது.

பிரித்தானியா தம்மைத் தடைசெய்தால் பேச்சுவார்த்தைகள் முறியும் என இத் தடைக்கு முன்பு கூறிய புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், பிரித்தானியா தம்மைத் தடை செய்தாலும் சமாதானப் பேச்சுவார்த்தை முயற்சிகள் தொடருமென இப்போது கூறியுள்ளதானது, தமது தடை பேச்சுவார்த்தைகளைப் பாதிக்காதென்ற பிரித்தானியாவின் கூற்றை நியாயப்படுத்துவதாகவே அமைகிறது.

அடுத்ததாக, கொள்கைகள், இலட்சியங்கள், மற்றும் ஒரு போராட்டத்தின் தார்மீக நியாயங்கள் என்பவற்றையன்றி, அப் போராட்டத்தில் பயங்கரவாதச் செயற்பாடு உள்ளதா என்பதையே இத் தடைச் சட்டம் கருத்துக்கெடுக்கிறது.

விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையில் ஒரு விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பதாகக் கூறிக் கொண்டாலும் அதன் கடந்த கால செயற்பாடுகளை இச் சட்டமூலத்தின்கீழ் பயங்கரவாதமாக அர்த்தப்படுத்த பல வாய்ப்புகள் உண்டு.

இச் சட்டமூலத்தை சமர்ப்பித்த பிரித்தானிய உட்துறை அமைச்சர் புலிகளை பயங்கரவாத இயக்கமாக அடையாளம்காட்ட, ராஜீவ்காந்தி படுகொலை, சந்திரிகா படுகொலை முயற்சி, தற்கொலைத் தாக்குதல்கள், தலைநகர் குண்டுத் தாக்குதல்கள் போன்ற சம்பவங்களைச் சுட்டிக்காட்டியிருந்தார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இத்தகைய சம்பவங்கள் ஒரு போராட்டத்தில் தவிர்க்க முடியாதவையெனக் கூறியிருக்கிறார்.

ஆனால் மறுதலையாக, அவை தவிர்க்கப்படாவிட்டால் விடுதலைப் போராட்டங்கள் அங்கீகரிக்கப்படாத நிலைமைதான் சர்வதேச ரீதியாகத் தோன்றிவரும் புதிய நிலைமை என்பதை நாம் தற்போது புரிந்துகொள்ள வேண்டும்.

ராஜீவ்காந்தியின் படுகொலை எமது விடுதலைப் போராட்டத்தின் ஒரு தேவையென எம்மால் சர்வதேச ரீதியில் நியாயப் படுத்த முடியாது.

பிரித்தானியாவின் புலிகள் மீதான தடைக்கு இந்தியாவின் பங்களிப்பும் பெரிதும் உதவியதாக இலங்கையின் வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நன்றி கூறியிருக்கிறார்.

இதுவும் ராஜீவ்காந்தி படுகொலையின் எதிர் வினையே - ராஜீவ் காந்திக்கு எதிரான கட்சியே ஆட்சியிலிருக்கும் போதும் அக் கொலைக்காக அது கணக்குத் தீர்க்க முன்நிற்கிறது.

அண்மையிலும் ராஜீவ் கொலையில் தேடப்படும் விடுதலைப் புலிகளின் தலைவர்களை கையளிக்கும்படி இலங்கையிடம் இந்தியா கேட்டிருந்தது.

முஸ்லிம் மக்கள் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டதும் இவ்வாறே சர்வதேச ரீதியில் நியாயப்படுத்தப்பட முடியாத ஒன்று.

அப்போதெல்லாம் சர்வதேசத்துக்கு நியாயம் கூறிக்கொண்டிருக்கவேண்டிய எந்தத் தேவையும் இருக்கவில்லை.

ஆனால் இன்று சர்வதேசத் தலையீடுகள் யன்னலுக்கருகே நெருங்கி வந்துவிட்டன.

பிரித்தானியாவின் தடையின் எதிரொலிகள் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் தோன்றக்கூடிய அபாயங்கள் இருக்கவே செய்கின்றன.

அண்மையில் இலங்கை வந்திருந்த ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவின் விஜயத்தின்பின் அவ் ஒன்றியம் விடுத்திருந்த 19அம்ச அறிக்கையில், பயங்கரவாதத்துக்கு உதவும் அமைப்புகள்மீது அந்தந்த நாடுகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்திருந்தது.

அத்தோடு ஐக்கிய நாடுகள் சபையின் கவனத்துக்கும் இவ் விடயத்தை தாம் கொண்டுசெல்லவிருப்பதாக இவ் ஒன்றியம் கூறியுள்ளது.

எனவே, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில், குறிப்பாக பிரான்சு, ஜேர்மனி போன்ற நாடுகளில் இத் தடையின் தொடர்ச்சி ஏற்பட இடமுண்டு.

அத்தோடு அமெரிக்காவின் செல்ல நாடான கனடாவிலும் இம் முனைப்புகள் தோன்றலாம்.

எனவே இப் பயங்கரவாதத் தடை என்ற விடயம் ஒரு சர்வதேச வலையாக விரியும் அபாயத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் விதத்தில் விடுதலைப் போராட்டங்கள் தம்மை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டிய தேவை இங்கு வெகுவாக உணரப்படுகிறது.

எமது பத்திரிகை ஊடகங்கள் இதன் தார்ப்பரியத்தை உணர்ந்து அதற்கான மாற்றங்களுக்கான அக்கறையை சமுதாயத்தில் ஏற்படுத்த வேண்டும். ○

**நரன்**

## செய்திச் சிதறல்

✪ தமிழீழ விடுதலைப் புலிகளை பிரித்தானிய அரசாங்கம் ஒரு பயங்கரவாத இயக்கம் என்று, தடைவிதித்து சட்டமியற்றியிருப்பது தொடர்பாக புலிகள் இயக்கம் மேன்முறையீடு செய்வதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. பிரித்தானிய அரசாங்கம் பெப்ரவரி 19ம் திகதி பயங்கரவாதத் தடைச் சட்டத்தை கொண்டு வந்தது. இந்தப் பட்டியலில் விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் இணைத்துள்ளது. இதற்கான பிரேரணை பாராளுமன்றத்தில் இனிமேல்தான் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும். பாராளுமன்றத்தின் இரு சபைகளும் அங்கீகரித்தால் மட்டுமே சட்டம் நிறைவேற்றப்படும். பிரித்தானிய பாராளுமன்றத்தில் விடுதலைப் புலிகளைத் தடைசெய்யும் சட்டம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளும் போது புலிகள் இயக்கத்துக்குச் சாதகமாக வாக்களிக்கும் படி பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினர்களை அணுகி ஆதரவு திரட்டும் முயற்சியில் பிரித்தானியாவில் உள்ள விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவாளர்கள் முயற்சித்து வருவதாக அறியப்படுகிறது.

✪ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதின்மூன்றாவது தேசிய மாநாடு கொழும்பு குதிரைப் பந்தயத்திடலில் கடந்த 4ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. மிகக் கோலாகலமாக நடைபெற்ற இம்மாநாட்டில் ஏறத்தாழ ஒன்றரை இலட்சம் மக்கள் கலந்து கொண்டதாகத் தெரிய வருகிறது. ஆளுங்கட்சியில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளின் தலைவர்களும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் இதில் பங்கேற்றனர். கட்சியின் தலைவரான ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இக்கட்சியின் தலைவராக மீண்டும் ஒரே மனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

✪ எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள் கதிர்காமத்திலுள்ள கிரிவிகாரை முன்புறமாக சத்தியாக்கிரகம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர். இச்சத்தியாக்கிரகம், வரவு செலவுத்திட்டம் 8ம் திகதியன்று பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் வரை நடைபெறுமென அறியப்படுகிறது. நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள விலைவாசி உயர்வைக் கண்டித்தே இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டம் நடைபெறுவதாகக் கூறப்படுகிறது.

✪ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்குமிடையில் அமைதிப் பேச்சுவார்த்தைகள் விரைவில் நடைபெறுவதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. இரு தரப்பினருக்குமிடையில் ஏற்பாட்டாளராகப் பணிபுரியும் நோர்வேயின் தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் லண்டன் நகரிலிருந்து கொழும்புக்கு ஒரு நாள் விஜயத்தை மேற்கொண்டு வந்து அடுத்த நாளே லண்டன் மாநகர் சென்று விட்டார். லண்டன் நகரிலுள்ள அன்ரன் பாலசிங்கம் தெரிவித்த கருத்துக்களை இங்குவந்து ஜனாதிபதியிடமும் வேறு சில தலைவர்களிடமும் கூறிவிட்டு, இவர்கள் தெரிவித்த கருத்துக்களை புலிகளுக்குத் தெரிவிப்பதற்காக அவர் சென்றுள்ளார். இவ்வாறு எரிக் சோல்ஹெய்ம் அவர்கள் தன்னல நோக்கமற்ற அலைச்சல் நிச்சயம் பலனளிக்குமென்றே கருதுவோமாக.

# அண்டை மண்டலத்தில்....

## காற்றுக்கென்ன வேலி?

காற்றுக்கு வேலி போட இயலாது. கடலுக்கு எல்லை இல்லை,. பொங்கி வரும் கங்கை வெள்ளத்தை எவராலும் அடக்கிவிட முடியாது. இப்படியொரு அற்புதமான கண்ணதாசன் திரைப்படப் பாடலொன்று உண்டு.

இன்று தமிழகத்தில், சில வட்டாரங்களில் காற்றும், கடலும் கருத்து சுதந்திரத்திற்கு ஓர் உருவகமாகக் கூறப்பட்டு வருகிறது. எப்படி இயற்கையினை மனிதனால் கட்டுக்குள் கொண்டுவரவியலாதோ, அதைப்போலவே கருத்து சுதந்திரத்தை அரசியந்திரத்தால் நசுக்க முடியாது. இப்படியோர் போர் முழக்கம்.

திரைப்பட இயக்குநர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், அறிவுஜீவிகள், இப்படிப் பல தரப்புக்களிலிருந்தும் இந்தியத் தணிக்கைக் குழுவிற்கு கண்டனங்கள். பெரிய அளவில் ஒன்றும் மக்கள் கிளர்ந்தெழுந்துவிடவில்லை. ஆனால் விடுதலைப்புலி ஆதரவாளர்களுக்கு இன்னுமொரு மேடை போட்டுக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே சமயம் கருத்து சுதந்திரமென்றால் என்ன என்பதை விளங்கிக் கொள்ளவும் இது ஒருசரியான வாய்ப்பே.

'காற்றுக்கென்ன வேலி' என்ற திரைப்படம் தான் இந்த விவாதச் சுறாவளியைக் கிளப்பி விட்டிருக்கிறது. பல புதிய முகங்கள் நடித்து, புகழேந்தி என்ற பத்திரிகையாளர் ஒருவர் உருவாக்கிய அத்திரைப்படத்திற்கு, தணிக்கை வாரியத்தின் அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது.

இதிலே குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில் தமிழகத்தில் மட்டும்தான் இது ஒரு பிரச்சனையாக, அதுவும் ஒரு சில வட்டாரங்களில் மட்டுமே, பேசப்பட்டு வருகிறது. கருத்து சுதந்திரத்தைப்பற்றிய பிரச்சனையெனும் போது, அகில இந்திய அளவில் ஏன் ஆதரவுக் குரல்கள் எழவில்லை? அங்குதான் சிக்கலே.

திரைப்படம் விடுதலைப்புலிகளை மாபெரும் வீரர்களாக, தியாகிகளாக, இந்திய-இலங்கை அரசுகளின் அடக்குமுறையால் பாதிக்கப்படுவோராக, இன்னலுறும் இலங்கைத் தமிழரின் ஒரே பிரதிநிதிகளாக சித்தரிக்கிறது.

அத்தகையதொரு படம் வெளியிடப்பட்டேயாக வேண்டும் என்று குரல் கொடுக்க தமிழகத்தில், இந்தியாவில் எவ்வளவு பேர் துணிவார்கள்?

விடுதலைப்புலிகளை கருத்து சுதந்திர விவாதத்தின் மையமாக எடுத்து வைத்தால் எவ்வளவு பேர் ஆதரவு தெரிவிக்க முன்வருவார்கள்? ஆனால் இது ஒரு சுவையான விவாதம் தான். கம்யூனிஸ்ட்டுகள் யதேச்சாதிகார அரசுகள், பாசிச இயக்கங்கள், இவையெல்லாம் கருத்து சுதந்திரத்தை அனுமதிப்பதில்லை, கடுமையாக நசுக்குகின்றன. அதெல்லாம் சரி, அவை கருத்து சுதந்திரத்தை மறுப்பதால், அவற்றின் ஆதரவாளர்களின் சுதந்திரத்தை ஒரு ஜனநாயக அமைப்பு மறுக்கமுடியுமா? அப்படி மறுப்பது நியாயம் தானா? இவையே இன்று கருத்து சுதந்திரத்தை மதிப்பவர் முன்னிருக்கும் வினாக்கள்.

காற்றுக்கென்ன வேலி வழக்கமான மசாலாக்கள் இல்லாத, சற்று யதார்த்தமான, ஓரளவு நேர்மையான திரைப்படம் என்பதில் ஐயமில்லை. ஈழப்போரில் காயப்பட்டு சிகிச்சைக்காக இந்தியாவரும் ஒரு தமிழ்ப்பெண், அவருக்கு சிகிச்சையளிக்கும் தமிழ்நாட்டு டாக்டர் இவர்களைச் சுற்றியே கதை பின்னப்பட்டிருக்கிறது.

முதலில் சிகிச்சையளிக்க மறுக்கும் டாக்டர், பின்னர் அவளது உயிருக்கு ஆபத்து இருப்பதை உணர்ந்து இரவும் பகலும் பாடுபட்டுக் காப்பாற்றி விடுகிறார்கள்.

சினிமாப்பாட்டு படித்துக்கொண்டு பட்டாம்பூச்சியாக வளையவரும் மணிமேகலைக்கு மிக அன்னியோன்னியமான, ஒரு கால் இழந்த சங்கீத ஆசிரியை, சிங்கள ராணுவ வீரர்களால் பாலியல் வல்லுறவுக்குட்பட, அவர் தன்னை உயிருடன் எரித்துக்கொள்கிறார். அதிர்ச்சியில் உறைகிறார் மணிமேகலை.

அச்சிறுமியினையும் பலவந்தப்படுத்த சிங்கள இராணுவம் முயற்சிக்கிறது. ஆனால் போராளிகள் அவரை காப்பாற்றி விடுகின்றனர். பின்னர் அவரே இயக்கத்தில் இணைந்து விடுகிறார். பரந்தன் ராணுவ முகாம் மீதான தாக்குதலில் பங்குபெறும் மணிமேகலை, காலில் படுகாயம் பட்டு ராமேஸ்வரம் கொண்டு வரப்படுகிறார்.

காதல் வயப்பட்ட டாக்டர், மணிமேகலையை தமிழக போலீசாரிடமிருந்து காப்பாற்ற படாதபாடுபடுகிறார். சித்திரவதைக்குள்ளாகிறார். இறுதியில் ஈழப் பெண்போராளி தன்நாட்டிற்கு பாதுகாப்பாக திரும்புகிறார். அவர்கள் போராட்டம் தொடரும் என்று டாக்டரின் முழக்கத்துடன் படம் முடி வடைகிறது.

திரைப்படத்தில் எந்தக் காட்சியும் உண்மைக்குப்புறம்பாயிருப்பதாக, மிகைப்படுத்தப்பட்டிருப்பதாகக் கூறமுடியாது. சிங்கள ராணுவ வீரர்கள் தமிழ்ப்பெண்களை பாலியல் பலாத்காரம் செய்வதோ, தமிழக பொலிசார் விடுதலைப்புலி வேட்டையில் ஈடுபடும்போது, கண்மூடித்தனமாக, ஈவிரக்கமின்றி நடந்து கொள்வதோ ஒன்றும் கற்பனையல்ல. எல்லாம் நடப்பதுதான். ஆனால் சிக்கல் எங்கு வருகிறதென்றால், பிரச்சனையின் ஒரு பரிமாணத்தை மட்டும் எடுத்துக்காட்டும்போதுதான். இலத்தீன்மொழியில் ஒரு வசனம் உண்டு-'சப்ரசியோ வெரி, செஜஸ்டியோ ஃபால்சி' என்று. அதாவது உண்மையை மறைத்து, பொய்யை உண்மை என்று சூசகமாக சொல்லுதல். அதைத்தான் காற்றுக்கென்னவேலியும் செய்ய முயற்சிக்கிறது. வெளிப்படையாக எந்த இடத்திலும் விடுதலைப்புலிகள் என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை. ஆனால் அவர்களைப் பெருமைப்படுத்தும் படம் அது என்பது முதல் அடியிலிருந்து இறுதிவரை அழுத்தந்திருத்தமாக வெளிப்படுகிறது. போராளி ஒருவர் பாரதி பாடலில் ஆழ்ந்துவிடுகிறார். இசையை ரசிக்கிறார்.



இன்னொரு போராளி, களத்தில் நிற்கும் சக தோழர்களை நினைத்து சுவையான உணவை உண்ண மறுக்கிறார். மணிமேகலையைக் காப்பாற்றுவதற்காக அவர்கள் எதற்கும் துணிந்து நிற்கிறார்கள். போலீசாரிடம் சிக்கினால் இயக்கத்தைக் காட்டிக்கொடுக்க வேண்டி வரும் என்று சயனைட் அருந்துகிறார்கள்.

தமிழ்நாட்டில் எந்த வித பிரச்சனையையும் அவர்கள் செய்யவில்லை. மணிமேகலைக்கு சிகிச்சை அளிக்க டாக்டர் மறுக்கும்போது மட்டும் சற்று முரட்டுத்தனமாக நடந்து கொள்கிறார்கள். அதற்காக அவர்கள் வருத்தம் தெரிவிக்கக்கூட இல்லை. மாறாக டாக்டரே அந்த நேரத்தில் அவர்கள் அப்படி நடந்து கொண்டது சரியென்று பின்னர் ஒப்புக் கொள்கிறார். தாங்கள் பயங்கரவாதிகள் அல்ல, போராளிகள் என்கிறார் மணிமேகலை. இவ்வளவிற்கும் மேல் அவர்களை விடுதலைப் புலிகள் என்று பெயரிட்டு அழைக்கவேண்டுமா என்ன! விடுதலைப்புலிகள் தங்களைப் பற்றி செய்துகொள்ளும் பிரச்சாரத்தை முழுமையாக, விமர்சனம் ஏதுமின்றி, அப்படியே ஏற்றுக்கொள்கிறது. காற்றுக்கென்ன வேலி திரைப்படம். ஒரே ஒரு இடம் மட்டும் புலிகளைக் குற்றஞ் சொல்வதாக அமைந்திருக்கிறது. மணிமேகலை சிகிச்சை பெறும் அதே மருத்துவமனைக்கு, புலிகளின் கண்ணிவெடித்தாக்குதலில் தன் கண்களை இழந்துவிடும் ஓர் அமைதிப்படை வீரர் வருகிறார்.

அமைதி காக்கப் போன தனக்கு இத்தகையதொரு கொடுமையான பரிசா என்று வேதனைப்படுகிறார். மணிமேகலையும் அழுகிறார். அமைதிப்படை செய்த அக்கிரமங்களுக்குப் பரிசு அது என்று யாரும் அங்கே வாதிடவில்லை. இதிலேதான் திரைக்கதை அமைப்பாளரின், இயக்குநரின் நேர்மையற்ற தன்மையினைக் காணமுடிகிறது.

சிங்கள ராணுவத்தின் அட்டூழியத்தை அப்பட்டமாகக்காட்டும் படம், புலிகளை மாபெரும் தியாகிகளாக சித்தரிக்கும் படம், புலிகளின் இன்னொரு பக்கத்தை, அவர்களது அராஜகத்தை, சகோதரக்கொலைகளை, அமைதிப் பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து சீர்குலைத்ததை, இவைபற்றி யெல்லாம் இயக்குநர் கவலைப்படவில்லை. ஏனென்றால் இத்தகைய கதை அமைப்பில் வில்லன்களாக சித்தரிக்கப்படுவது சிங்கள அரசும், அந்த இனமும்தான். அவர்களை அப்படி விமர்சிப்பதில் தயாரிப்பாளர்களுக்கு நஷ்டமில்லை தானே.

அதே நேரம் அமைதிப்படைக்கு வக்காலத்து வாங்கப்படுகிறது, ஏன்? ஐபிகேஃப் பற்றி விமர்சனம் செய்தால் இந்திய அரசு கோபிக்குமே. தணிக்கை வாரியம் முரண்டு பிடிக்குமே. எனவேயே ஏதோ இந்திய ராணுவத்தினர் எல்லாம் சத்திய சந்தர்கள் போலவும், பொதுவாக களங்கமற்ற போராளிகள் ஐ.பி.கே.எஃப் விஷயத்தில் மட்டும் சற்று நிலை தடுமாறிவிட்டதுபோலவும் காண்பிக்கப்படுகிறது. அப்படிச் செய்தால் தணிக்கை சான்றிதழ் கிடைக்கும் என்று இயக்குநர் நம்பினாரோ என்னவோ!

ஆயினும் சென்னையிலும் சரி, புதுடில்லியிலும் சரி சான்றிதழ் மறுக்கப்பட்டது. இயக்குநர் புகழேந்தி தலைகீழ் நிற்கிறார். உண்ணாவிரதம் இருந்து பார்த்தார். பாரதிராஜா, பாலு மகேந்திரா உள்ளிட்ட திரைப்படக் கலைஞர்கள், விடுதலைப்புலி அனுதாபிகள், தமிழ் தேசியவாதிகள் ஆதரவாளர்கள் என்று பலரின் ஆதரவையும் நாடுகிறார். ஓரளவு பத்திரிகைகளில் விளம்பரம் கிடைத்திருக்கிறது. ஆங்காங்கே கூட்டங்கள் போடுகின்றனர். அத்தோடு நிற்கிறது விஷயம். அவ்வளவே.

இயக்குநரோ, திரைப்படத்தின் பின்னாலிருக்கும் மற்றவர்களோ ஓர் உண்மையைப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டார்கள், அல்லது யதார்த்த நிலையினையும் மீறி தங்களுக்கு வெற்றி கிடைத்துவிடும் என்று தவறாக கணித்துவிட்டார்கள்- அதாவது தமிழ்நாட்டில், இந்தியாவில், விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான எந்தப் பிரசாரமும் அனுமதிக்கப்படாது.

**கானகன்**

இந்தியாவில் தொடர்ந்து விடுதலைப் புலிகள் இயக்கம் தடைபட்டு நிற்கிறதே, வைகோவோ, ராமதாசோ, வீரமணியோ தடையை எதிர்த்து என்ன செய்யமுடிந்தது? ஜெயலலிதா பக்கம் வந்த பிறகு இன்னும் அதிக ஜாக்கிரதையுடன் இருக்கிறார் டாக்டர் ராமதாஸ். காற்றுக்கென்ன வேலிக்கு தணிக்கைச் சான்றிதழ் மறுக்கப்பட்டு, மாதக்கணக்கில் இயக்குநர் புகழேந்தி அல்லாடிக் கொண்டிருக்கிறார். எந்த புலி ஆதரவாளரும் அவருக்காகக் குரல் கொடுக்க முன்வரவில்லையே.

பொதுவாகவே தணிக்கை வாரிய உறுப்பினர்கள் பழமைவாதிகள்தான். அருவருக்கத்தக்க வேடதாரிகள். எல்லாவிதமான ஆபாசங்களையும், வன்முறைகளையும் அனுமதிப்பார்கள். ஆனால் கலை உணர்வோடு ஏதாவது சொல்லப்பட்டால், அன்றாட வாழ்க்கையில் நடைபெறும் அக்கிரமங்களைச் சித்தரித்தால் அதை கத்தரித்துவிடுவார்கள். இந்திய அரசைக் குறைகூறும் இந்திய சமூக அமைப்பிற்கு சவால்விடும் எந்தக் காட்சியும் அனுமதிக்கப்படாது.

அப்படிப்பட்டதொரு சூழலில் விடுதலைப் புலிகளை ஏதோ சத்தியவான்களாக காண்பித்தால் அது எங்கனம் செல்லுபடியாகும்.

பிரபல இயக்குநர் செல்வமணி இயக்கிய 'குற்றபத்திரிகை', ராஜீவ்காந்தி படுகொலை பற்றிய திரைப்படம். அது வெளியே வரவேயில்லை. இத்தனைக்கும் புலிகளைப் பெருமைப் படுத்தும் படமல்ல அது. ஆனாலும் கொலையினை மையமாக வைத்தே கதை பின்னப் பட்டதால் அதற்கு அனுமதி கிடைக்கவில்லை. அப்படியிருக்கும்போது புலிகளின் புகழ்பாடும் காற்றுக்கென்னவேலிக்கு எப்படி அனுமதி கிடைக்கும்?

இது ஒரு புறமிருக்க, கருத்து சுதந்திரத்தில் நம்பிக்கை கொண்டோர் இப்படியொரு தடையினை ஆதரிக்கமுடியுமா என்பது முக்கியமானதொரு கேள்வி. ஆதரிக்கமுடியாது, ஆதரிக்கக்கூடாது என்பதுதான் சரியான பதில்.

ஆயினும் எந்த ஒரு சுதந்திரமும், எந்த ஒரு அரசியல் அமைப்பிலும் முழுமையாக வழங்கப்படுவதில்லை என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் கூட தனிமனித சுதந்திரத்திற்கு கட்டுப்பாடுகள் உண்டு. ஆஸ்திரியாவில் வெகு ஜன மக்கள் ஆதரவைப்பெற்ற ஓர் அரசியல்வாதி, அவர் ஹிட்லரை ஆதரிப்பவர் என்பதால் பதவி நீக்கம் செய்யப்பட்டார். மற்ற ஐரோப்பிய நாடுகள் ஒன்றிணைந்து ஆஸ்திரிய அரசிற்கு பல்வேறு நெருக்கடிகள் கொடுத்தே அந்த நபரை வீட்டிற்கு அனுப்பின. அதுபோல இந்திய சமூகத்தின் நலனுக்கு எதிராகச் செயல்பட்டவர்கள், செயல்படக் கூடியவர்கள் என்று இன்னமும் அஞ்சப்படும் விடுதலைப்புலிகள் மீதோ, அவர்களது ஆதரவுப் பிரசாரம் மீதோ தடைகள் வருவது இயற்கை. அளவுக்கு மீறி இந்திய அரசு இயந்திரம் செயல்படும்போது, அப்பாவிகள் பாதிக்கப்படும் போது நிச்சயம் குரல் கொடுக்கலாம். உதாரணமாக இலங்கை அகதிகள் வருகை நிறுத்தப்படும்போது, அல்லது அவர்கள்மீது தேவையற்ற, மனிதத்தன்மையற்ற தடைகள் விதிக்கப்படும்போது மனித உரிமை ஆர்வலர்கள் குரல் கொடுக்கவேண்டும். (வேதனையென்னவென்றால் ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் இலங்கைத்தமிழ் அகதிகள் சொல்லொணாத்துயர் அனுபவித்தபோது விடுதலைப்புலி ஆதரவாளர்கள் வாயைத் திறந்ததில்லை. ஏதோ சடங்கிற்காக ஓரிரு காரியங்கள் செய்திருப்பார்கள் அவ்வளவே.)

ஆனால் திரைப்படம்போன்ற ஒரு வெகுஜனத் தொடர்பு சாதனம் மூலமாக அப்பட்டமான விடுதலைப்புலிகள் ஆதரவுப் பிரசாரம் செய்யப்படுமானால் அது தடை செய்யப்பட்டே ஆகவேண்டும். அதுவே எதிர்கால சமூக அமைதிக்கு ஆரோக்கியமான ஓர் சூழலுக்கு வழி வகுக்கும். ■

## பார்த்தேன்...! எழுதுகிறேன்...!

'சிவாய நம என்று சிந்தித் திருப்போர்க்கு அபாயம் ஒரு நாளும் இல்லை' எண்டு ஆச்சி அடிக்கடி சொல்லுவா.

ஆன கடந்த சிவராத்திரி அன்று அபாயம் வந்ததைப்பார்த்தேன். சிவராத்திரி அன்று சிவாயநம என சிந்திக்க கோயிலுக்குப்போக வெளிக்கிட்டவைக்கு, வெள்ளவத்தை முழுக்க மின்சாரம் இல்லாமல் போனதத்தான் குறிப்பிடுகிறேன்.

குட்டி யாழ்ப்பாணம் கும்மிருட்டில பலமணிநேரம் பட்டபாட்டை நானும் பட்டேன். நான்பட்ட துன்பம் போல் துன்பப்பட்டவர்களோடு இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பேரின்பம் பெற்றவர்களையும் பார்த்தேன்.

'பட்டகாலிலே படும் கெட்டகுடியே கெடும்' என்பதுபோல் யாழ்ப்பாண பிரச்சனையால் கொழும்பு வந்த எம் தமிழ் குடிமக்கள் பெருமளவில் வாழும் வெள்ளவத்தை, இருட்டில் மூழ்கியதால் ஆரம்பத்தில் பெரும் வதந்திகள் பெருகத் தொடங்கின.

"குண்டு வெடிச்சிட்டுதாம். இரும்புக் கடையொண்டுக்குள்ளதானாம் வெடிச்சது. அரைவாசி ஏரியா தூள்தூளாம்" எண்டு அவரவர் தனக்குக் கிடைத்த தகவல்களோடு தாமும் மேலதிக தகவல்களை சேர்த்து குசுகுசுக்கத் தொடங்கினர்.

"ஒருத்தற்ர தொலைபேசியும் அழைத்தால் மணியடிக்கவில்லை. எல்லாம் என்கேஜ்ட் ரோன்தான் வருகுது." வதந்தி பரப்பிற சேவையில அனைவரும் பிசியாக இருந்தனர்.

"பம்பலப்பிட்டில கரண்ட் இருக்குதாம், கொட்டாஞ்சேனையில லைற் எரியுதாம்; அப்ப இஞ்சமட்டும் ஏன் இல்லை? இண்டைக்கு சிவராத்திரி எண்டு வம்புத்தனம் செய்து போட்டான்கள்" என கதை கட்டிவிடும் அளவிற்கு கனநேரம் வெள்ளவத்தையில மட்டும் தான் கரண்ட் இல்லை.

'பனையால விழுந்தவனை மாடு ஏறி மிதிச்சமாதிரி' பாதுகாப்பு பிரிவினரும் இருட்டால வாறவய ஒரு பார்வை பார்த்து சோதிக்கத் தொடங்கிட்டினம். "இந்த இருட்டுக்குள்ள எங்க போறியள்?" எண்ட அவையளின்ர கேள்வியில சந்தேகம் நிறைய. ஏனென்டா அவைக்கும் தெரியாது என்ன நடந்தது, ஏன் கரண்ட் இல்லை எண்டு.

மின்சார சபைக்காரன்கள் புத்தியா ஒரு வேலை செய்துபோட்டான்கள். தங்களை அழைத்து, "ஏன் கரண்ட் இல்லை; எப்பவரும்?" எண்டு கேட்டா பதில் சொல்லுற அலுப்பில, ரிசீவரை தூக்கி வெளியில வச்சுப் போட்டான்கள் போல.

அவையின்ர நம்பருக்குக் கோல் எடுத்தவை எல்லாம் "பீப்... பீப்" எண்டு அதுகத்தின என்கேஜ்ட் சத்தத்தைத்தான் கேட்டவை.

இருட்டுக்குள்ளால எங்கட பெண்பிரசுகள் கோயிலடிக்குப் போறவழியில, சில கழிசடைகளின்ர கைவரிசைக்குத் தப்ப ஏலாமல் கண்ட இடமெல்லாம் கம்பளிப்பூச்சி ஊர்ந்த நிலையில அவையின்ர நிலமையும் கவலைக்கிடமாய் போச்சுது. "சனியன்கள் அக்கா தங்கச்சியோட பிறக்காததுகள்" எண்டு திட்டத்தான் முடிஞ்சிது.

அண்டைக்கு இன்னொரு பெரிய பிரச்சனை. அடுக்குமாடி கட்டிடத்தில பிளட் வாங்கி குடியிருந்தவை பட்டபாடு பெரும்பாடு. பிளட் விக்கேக்க 'இருபத்திநாலுமணி நேர லிப்ட் வசதி. ஸ்ராண்ட்பை ஜெனரேட்டர் இருக்கு. வருடம் பூராவும் பராமரிப்பு' என்று போட்ட விளம்பரம் மட்டும்தான். ஆனா அது அவசரத்துக்கு வேலை செய்ய வேணுமே. அதுக்கு ஒழுங்கா தண்ணி, எண்ணை காட்டினாத்தானே அதுவும் இயங்கி கரண்ட் தரும். அண்டைக்கு அதுவும் காலை வார, எல்லோரும் அதை திருத்த டோர்ச்லைட் டோட ஓடித்திரிஞ்சதுதான் மிச்சம்.

இளசுகள் இளரத்தம் தானே தாவித் தாவி மாடிப்படிகளால இறங்கி கீழ வந்திட்டுதுகள். பாவம் வயசுபோன கிழடுகள் தான் முறையா மாட்டிக் கொண்டுதுகள்.

"எட்டடுக்கு மாடி வீட்டில் ஏற்றிவச்ச என்ர பொடியன் விட்டுப்போட்டு கனடா போட்டான்டி. நானிஞ்ச கரண்ட் இல்லாம கீழ இறங்கி கோயில் குளம் போக ஏலாம சீரழியிறனடி!" எண்டு பாடாத குறைதான்.

**~குத்தியன்~**

"படியால இறங்குவமெண்டா உத்தனை படியும் இறங்க இளைப்பெடுத்து பரலோகம் தான் போகவேணும். அறுவானிட்ட சொன்னனான் அடுக்குமாடி வேண்டாம். அனக்ஸ் எடுத்துதாடா எண்டு. என்ர அம்மா சொந்த வீட்டில வசதியா இருக்கவேண்டும் எண்டு ஆகாசத்துக்கு கிட்ட அடுக்குமாடி பிளட்ட வாங்கிப்போட்டான். போற உசிர் புசுக்கெண்டு பரலோகம் போகட்டும் எண்டு தான் எட்டாம் மாடிய எடுத்தானோ தெரியாது" என்ற புலம்பல் வேறு.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டு கோமிலடிக்குப் போனா, வழியில உள்ள வீடியோ கடை விளம்பரம் வலுவிஷேசம் பாருங்கோ.

சிவராத்திரி அண்டைக்கு சோதிமயமானவனைப் பார்த்து 'என்மனதில் உன்னை என்றும் நினைத்துப் போற்றி உன் நினைவை நான் பிரியாத வரம் வேண்டும்' என இறைஞ்சப்போன என் பார்வையில்....

"சிவராத்திரி சிறப்பு வெளியீடு பிரியாத வரம் வேண்டும்" விளம்பரப் போர்ட் பட்டதும் ஏதோ பெரிய எழுத்து சிவ புராணமோ, பெரிய புராணமோ எண்டு போனா, அவன்கள் சொல்லுறான்கள் "அங்கிள் இண்டைக்கு பிரசாந்த்- ஷாலினி நடிச்ச பிரியாத வரம் வேண்டும் கசற் ரிலீஸ்" எண்டு. நாசமாப்போக.

அந்தக்காலத்தில பொங்கல், புதுவருடம், தீபாவளி எண்டாத்தான் புதுப் படம் ரிலீஸ் ஆகும். இப்ப சிவராத்திரி அண்டைக்கு சிறப்பு வெளியீடாம். கிழிஞ்சுது போங்கோ எங்கட சமய அனுஷ்டானம்.

கோமிலடியில பொடியளின்ர கூத்து பெரும் கூத்து. வாய்க்குள்ள சுவிங்கத்தை வைச்சு அரைச்சபடி, அவயளின்ர கதைகளைக் கேட்டா சிவமோட்சம்தான். சாம்பிளுக்கு ஒண்டு சொல்லுறன்.

ஒரு பொடியன் சொன்னான். "மச்சான் வெள்ளவத்தையில எல்லாம் நெடுகலும் பாத்தபடம் தானே. ஏரியா மாறி புதுப்படம் பார்க்க கொட்டாஞ்சேனை போவம்" எண்டு. அதனை உடனடியாக பாதுகாப்பு காரணம் காட்டி மற்றது மறுத்துப்போட்டுது.

"டேய் போற வழியில இருக்கிற செக்பொயின்ரில கஸ்டகாலத்திற்கு இறக்கினான் எண்டா, சிவராத்திரி மட்டுமில்ல CID றிப்போர்ட்வரும் வரை பல ராத்திரி பொலிஸ் ஸ்ரேசனிலதான் இருக்க வேண்டிவரும் வேண்டாம் பேசாம பாத்த படத்தையே பாப்பம்" எண்டு.

உவன்கள் படம் எண்டு பூடகமாக குறிப்பிடுவது குமரியளைத்தான். கோமிலடியில இந்த தலையிடி வேண்டாம் எண்டு நடுச்சாமம் கரண்ட் வந்துட்டுதாம் எண்டு வீட்டை போக புறப்பட்டன். காரணம் அன்று இரவு அடி முடிதேடியவர்களின் அடியைத்தேடப் புறப்பட்ட பெருமாள் (ஈழப்பிரகடனம் செய்துவிட்டு குடும்பத்தோடு தான் மட்டும் பிளேனில் ஏறி ஓடிய அந்தப் பெருமாள் அல்ல) பெருமை கூறும் திருமால் பெருமை படம் ஒளிபரப்பாகும். அதையாவது நிம்மதியாகப் பார்ப்போம் எண்டு வீடுவந்தால், வாசலில் என்னை வரவேற்றது "என்னைத் தாலாட்ட வருவாளோ. இல்லை பூமஞ்சம் தருவாளோ" எண்ட பாடல்தான். என்ர தர்மபத்தினி காலம்பிற எழும்பித் தோஞ்சு வீடுகழுவி விரதமிருந்து சிவராத்திரி கதிமோட்ச மடைய எண்டு எங்கட சுவர்ணவாகினி T.Vக்காரன் 'போட்ட சிவராத்திரி சிறப்புப் படம் 'காதலுக்கு மரியாதை' படத்த பார்த்து பரவசமடைஞ்சு கொண்டிருந்தது. ■

# அலசுவது - இராஜதந்திரி

# எல்.ரி.ரி.ஈ. மீதான பிரிட்டிஷ் நடவடிக்கை:

# இலங்கை இனப்பிரச்சனை விடயத்தில் மற்றுமொரு பரிமாணம்!

பிரிட்டன் சர்வதேச பயங்கரவாத அமைப்புக்கள் என்று வரையறை செய்து பட்டியலொன்றை வெளியிட்ட ஒரு வாரகாலத்தில் லண்டன் மாநகரில் மோட்டார் கார் குண்டொன்று வெடித்திருந்தது.

லண்டனின் பிபிஸி தொலைக்காட்சி நிறுவனக் கட்டிடம் முன்பாகவே அக்குண்டு வெடித்திருந்தது. ஆயினும் ஆட்சேதம் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை. சில வாகனங்களுக்கும், கட்டடங்களுக்கும் மட்டுமே சிறியளவிலான பாதிப்பு ஏற்பட்டிருந்தது.

உடனடி விசாரணைகளை மேற்கொண்டிருந்த பொலிஸார், அக்குண்டு வெடிப்பில் வட அயர்லாந்தின் ஐரிஷ் குடியரசு இராணுவமே சம்பந்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

வட அயர்லாந்துப் பிரச்சனை தொடர்பாக பிரிட்டிஷ் அரசுக்கெதிராக ஆயுதமேந்திச் செயற்பட்டு வரும் ஓர் அமைப்பாகவே ஐரிஷ் குடியரசு இராணுவம் இருந்து வருகின்றது.

இப்போராட்ட அமைப்பு பிரிட்டனின் பல்வேறு பகுதிகளிலும் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதை வழக்கமாகக் கொண்டுள்ளது. ஆயினும் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக முக்கியத்துவம் மிக்க லண்டன் மாநகரே ஐரிஷ் கெரில்லாக்களின் பிரதான இலக்காக இருந்து வருகின்றது.

வட அயர்லாந்துப் பிரச்சனையில் பிரிட்டிஷ் அரசுக்கு ஆயுதப்போராட்டம் மூலமாக அழுத்தங்களைக் கொடுத்துவரும் ஐரிஷ் குடியரசு இராணுவம் பிரிட்டனில் தடைசெய்யப்பட்டுள்ளது.
இருந்தபோதிலும் இந்த அமைப்புடன் பிரிட்டிஷ் அரசு வட அயர்லாந்துப் பிரச்சனை குறித்து பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்தும் நடத்தியே வருகின்றது.

அண்மையில் பிரிட்டன் 21 வெளிநாட்டு ஆயுதப்போராட்ட அமைப்புகளை பயங்கரவாத நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டவை எனப் பட்டியலிட்டு அறிவித்துள்ளது.

இந்த அமைப்புக்களின் பட்டியலில் இலங்கையின் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பும் அடங்குகின்றதென்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச அரங்கில் ஒரு முன்னணி ஜனநாயக நாடு என்ற ரீதியிலேயே பிரிட்டன் இருந்து வருகின்றது. உலகப் பாராளுமன்றங்களின் தாயகம் என்று கூட பிரிட்டனின் வெஸ்ட் மின்ஸ்டர் (West Minster) பாராளுமன்றமே அழைக்கப்படுகின்றது.

இந்நிலையில் சர்வதேச பயங்கரவாத நடவடிக்கைகளின் ஒரு புகலிடமாக பிரிட்டன் இருக்கலாகாது என்ற காரணத்தினாலேயே பயங்கரவாத அமைப்புக்கள் என்று பிரிட்டிஷ் அரசினால் கருதப்பட்டவை பிரிட்டனில் இயங்குவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சனையைப் பொறுத்தவரை கடந்த இருபது வருடகாலமாக ஆயுதப்போராட்டம் ஒரு கெடுபிடியாக இருந்து வருகின்றது.

அரசியல் ரீதியாக இலங்கையின் இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட அனைத்து நடவடிக்கைகளுமே தோல்வியைத் தழுவியிருந்தன.

அரசியல் நிலைப்பாடுகள் தோல்வியைத் தழுவிய நிலையிலேயே ஆயுதப்போராட்டம் விரிவடைந்து, இன்று இப்போராட்டத்தின் விளைவாகவே இலங்கையின் இனப்பிரச்சனை சர்வதேச அரங்கையும் எட்டியிருக்கக் காணப்படுகின்றது.

1983ம் ஆண்டின் பின்னர் இலங்கையின் புவியியல் எல்லைகளைத் தாண்டி இந்தியாவின் கவனத்தை இலங்கை இனப்பிரச்சனை ஈர்த்திருந்தது.

இருந்தபோதிலும் இந்தியாவின் இலங்கைப் பிரச்சனை குறித்த அணுகுமுறைகள் உரிய பயனைத் தராத நிலையில், தற்போது சர்வதேச சமூகத்தின் கவனத்தைப் பெரிதும் பெற்ற தறுவாயிலேயே பிரிட்டன் தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் சேர்த்துக்கொண்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளை பிரிட்டனில் ஒரு பயங்கரவாத அமைப்பாகத் தடை செய்ய வைப்பதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசு மட்டுமல்ல. இந்தியா கூட மேற்கொண்டிருந்ததையே அவதானிக்க முடிந்தது.

பிரிட்டன் தமிழீழ விடுதலைப் புலிகள்மீது மேற்கொண்ட நடவடிக்கையயடுத்து இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொழும்பில் பத்திரிகையாளர் மகாநாடொன்றை நடத்தியிருந்தார்.

அம்மகாநாட்டிலேயே தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான பிரிட்டனின் நடவடிக்கைக்கு இந்தியாவும் பேருதவியாக இருந்தென திரு.கதிர்காமர் குறிப்பிட்டிருந்தார்.

இந்தியாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டுள்ளது. இந்தியப் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தியின் படுகொலைக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பே பொறுப்பாளிகள் என்று தெரிவித்தே அந்த அமைப்பை இந்தியா தடைசெய்துள்ளது.

இருந்தபோதிலும் இலங்கை இனப்பிரச்சனையைப் பொறுத்தவரை தமிழீழ விடுதலைப் புலிகளோடு பேச்சுவார்த்தைகளை நடத்தி ஒரு தீர்வைக்காண வேண்டுமென்பதையே இந்தியா வலியுறுத்தி வருகின்றது.

அண்மையில் இலங்கை ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த போதுகூட இலங்கை அரசு தமிழீழ விடுதலைப் புலிகளோடு பேச வேண்டியதன் அவசியத்தை இந்தியத் தலைவர்கள் எடுத்துக் கூறியிருந்தனர்.

எனவே திரு.லக்ஷ்மன் கதிர்காமர் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான பிரிட்டன் அரசின் நடவடிக்கைக்கு இந்தியாவும் உறுதுணையாக இருந்ததாகக் குறிப்பிட்டிருந்தார். ஆனால் இந்தியா தமிழீழ விடுதலைப் புலிகளோடு இலங்கை அரசதரப்பு பேச்சுக்களை நடத்த வேண்டுமென்பதில் உறுதியாகவே இருக்கின்றது.

இந்தியா மட்டுமல்ல. பிரிட்டன்கூட தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை பயங்கரவாத நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட ஓர் அமைப்பாகப் பட்டியலிட்டுள்ள போதிலும் இலங்கை இனப்பிரச்சனையைத் தீர்ப்பது தொடர்பாக புலிகளோடு இலங்கை அரசு பேச்சுக்களை நடத்தவேண்டுமென்றே வலியுறுத்தியுள்ளது.

பிரிட்டன் தனது சொந்த நலன்களைக் கருத்திற்கொண்டும் ஒரு பூரண இறைமை கொண்ட நாட்டுக்கெதிராகச் செயற்படக்கூடாதென்ற ரீதியிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான நடவடிக்கையை எடுக்க முன்வந்திருக்கலாம்.

ஆனால் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் அரசியல் ரீதியாக இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்சனை குறித்துக்



*"தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான பிரிட்டனின் நடவடிக்கையை சிங்கள மக்கள் ஒரு வெற்றியாகவோ, அல்லது தமிழ் மக்கள் ஒரு பின்னடைவாகவோ கருதலாகாது"*

*-கதிர்காமர்*

கொண்டுள்ள நிலைப்பாட்டை பிரிட்டன் மட்டுமல்ல. சர்வதேச சமூகம் அனைத்துமே ஏற்றுக் கொண்டுள்ளதையே அவதானிக்கமுடிகின்றது.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டமை, இலங்கை ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸாவின் கொலை, மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அ.அமிர்தலிங்கம், அதே அரசியல் கட்சியைச் சேர்ந்த வேறு சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல்வாதிகள், ஆகியோரது கொலைகள் தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் மீதே குற்றஞ்சாட்டப்பட்டு வந்துள்ளது.

இலங்கையின் ஆட்சியாளர்கள் சர்வதேச அரங்குகளைத் தமக்குப் பயன்படுத்தக் கிடைத்த சந்தர்ப்பங்களிலெல்லாம் தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான குற்றச்சாட்டுக்களை அக்குவேறு ஆணி வேறாக எடுத்துக்கூறிவருவதையே வழக்கமாகவும் கொண்டுள்ளனர்.

1995ம் ஆண்டு இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின் போது ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளராக நின்ற காமினி திசாநாயக்கா குண்டு வெடிப்பொன்றில் கொல்லப்பட்டிருந்தார். இச்சம்பவத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளே பொறுப்பாளிகள் எனக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இதுதவிர 1999ம் ஆண்டு கொழும்பில் இடம் பெற்ற பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போது ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க மீது கொலை முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதில் ஜனாதிபதி சந்திரிகா மயிரிழையில் உயிர் பிழைத்திருந்தார். ஆயினும் அவரது வலப்புறக் கண் வெகுவாகவே பாதிக்கப்பட்டிருந்தது. இச் சம்பவத்தில் ஜனாதிபதிக்கருகே நின்ற பலர் கொல்லப்பட்டிருந்தனர்.

எனவே ஜனாதிபதி சந்திரிக்கா மீதான இக் கொலைமுயற்சியிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பே சம்பந்தப் பட்டிருந்ததென்று இலங்கையின் புலனாய்வாளர்கள் தாம் மேற் கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் குற்றஞ் சுமத்தியிருந்தனர்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புமீதான குற்றச் சாட்டுக்கள் இந்தியத் தரப்பிலிருந்தும், இலங்கையிடமிருந்தும் வெளிப்பட்டதையடுத்தே பிரிட்டிஷ் அரசு தமிழீழ விடுதலைப் புலிகள்மீது நடவடிக்கை எடுத்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை ஒரு பயங்கரவாத அமைப்பெனச் சித்தரித்துக் காட்டுவதில் இலங்கையின் ஆட்சியாளர்கள் வெற்றி பெற்றிருக்கலாம்.

ஆனால் இலங்கையில் தமிழ் மக்கள் மீதான அடக்கு முறைகள், கொடுமைகள் என்பவற்றின் வெளிப்பாடாகவே தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு உருவாகியுள்ளதை ஏற்றுக் கொண்டவராகவே ஜனாதிபதி சந்திரிக்கா காணப்படுகின்றார்.

அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் வன்முறைகளுக்குள்ளாகி கொடூரமான அனுபவங்களுக்கு முகங்கொடுத்த இலங்கைத் தமிழ் மக்கள், தற்போது ஒரு நீடித்துச் செல்லும் யுத்தத்துக்கே முகங்கொடுத்து நாளாந்தம் அழிவுகளையும், அவலங்களையும் எதிர்நோக்கியவர்களாகவே இருக்கின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை ஒரு பயங்கரவாத அமைப்பென்று சித்தரிக்க இலங்கையின் ஆட்சியாளர்கள் பல்வேறு குற்றச்சாட்டுக்களையும் பட்டியலிட்டுக் குறிப்பிட்டிருந்தனர்.

ஆனால் வடக்கு-கிழக்கில் பல்லாயிரக்கணக்கில் இடம் பெற்ற உயிர் பலிகளுக்குப் பொறுப்பான அரச பயங்கரவாத நடவடிக்கைகளை யார் தட்டிக் கேட்பதென்பதே பிரதான கேள்வியாக இருக்கின்றது.

1983ம் ஆண்டில் தென்னிலங்கையில் ஐக்கியதேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் இனக் கலவரம் வெடித்து அப்பாவித் தமிழ் மக்களின் உயிர், உடமைகளை அக்கலகம் சூறையாடிவிட்டிருந்தது.

அன்றிலிருந்து இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் இடம்பெற்று வரும் யுத்தம் மற்றும் அதுசார்ந்த அடிப்படை மனித உரிமை மீறல்கள் என்பவை ஆயிரமாயிரம் உயிர்களைக் காவு கொண்டதாகவே இருந்து வருகின்றது.

பிரிட்டிஷ் அரசின் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான நடவடிக்கையென்பது முற்றிலும் அந்நாடு சார்ந்ததாகும்.

ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை இனப்பிரச்சனை குறித்த அரசியல் நடவடிக்கைகள் ஆக்கபூர்வமாக அணுகப்படுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளது அரசியல் ரீதியான பங்களிப்பு அவசியமானதாகவே இருக்கின்றது.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூட கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில், தமிழீழ விடுதலைப் புலிகள்மீதான பிரிட்டனின் நடவடிக்கையை சிங்கள மக்கள் ஒரு வெற்றியாகவோ அல்லது தமிழ் மக்கள் தமது அரசியல் நடவடிக்கையில் ஒரு பின்னடைவாகவோ அதனை கருதக் கூடாது எனத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் பிரிட்டிஷ் அரசு தமிழீழ விடுதலைப் புலிகள்மீது மேற்கொண்டுள்ள நடவடிக்கையை, இலங்கை இனப்பிரச்சனை விடயத்தில் மற்றுமொரு பரிமாணமாகவே கருதவேண்டியுள்ளது.

## அதிரடி அய்யாத்துரை



**கூடிக் கூடிக்** கலைந்த தமிழ்கட்சிகளின் கூட்டு பிரித்தானியாவின் பட்டியல் கண்டு வெலவெலத்துப் போய் உள்ளனவாம். பேச்சு மூச் சற்று மௌனித்துப் போயின வாம்.

**அரசனையே** சந்திக் கலாம் என்று அழைத்துச் செல்லப்பட்டவர்கள் அமைச் சரைக் கூடச் சந்திக்கச் செய்ய முடியாமல் அலுவலக உதவியாளருடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி முடிக்க நிர்ப்பந்திக்கப்பட்டனர். என்னும் இந்த அவமானம் அகிலமும் அறிந்து விடக் கூடாது என்பதற்காக விக்கிரமாதித்த முயற்சிகள் தொடர்கின்றனவாம்.

**கதிர்காமம் போன திணைக்கள** அதிகாரி யார்? போலி வாக்குறுதிகள் கொடுத்த பெரும் புள்ளி யார்? இந்தக் கறுப்பு ஆடு எது என்ற கேள்வி பூதாகரமாக உருவெடுத்துள்ளதாம்.

**எல்லாரும் ஏமாத்திப் போட்டினம்.** வெள்ளைக்காரனும் தடை விதிச்சுப் போட்டான். 'புலம்பி என்ன பிரயோசனம்? தினை விதைச்சால் தினை அறுக்கலாம். ஆனால் வினை விதைச்சால்...?' என்கிறார் தமிழ் அரசியல்வாதி ஒருவர்.

**கடல் கடந்து வந்தாலும்** வாய் திறக்க விடுகிறான்களில்லையே. நாங்கள் ஒரு கருத்தைச் சொல்ல முன்பு அதற்கு பதிலடியாக பல விடயங்களை இரத்தினச் சுருக்கமாய் எடுத்து வைத்து எங்களை வாயடைக்கப் பண்ணுறாங்களே... நோர்வேயிலிருந்து சங்கடப்பட்ட புலம்பல் கொழும்புவரையும் கேட்குது.

**மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள** இந்து ஆலயம் ஒன்றில் அண்மையில் யாகம் நடந்துள்ளதாம். எலியும் பூனையுமாய் கடிபடும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவர் ஒருங்கிணைந்து செய்துள்ளனராம். தமிழ் மக்கள் வெள்ளையரின் உத்தரவுக்கு எதிர்ப்புக்காட்ட கலாச்சார வழிமுறைகளைப் பின்பற்றுவதாகத் தமிழ் வலையில் செய்தி விரிந்துள்ளது.

## திகில் தொடர்



திகில் கதை மன்னன்
**பி.டி.சாமி**

**பட** அதிபர் திடுக்கிட்டு முகம் மாறி 'ஹா' என்று கத்திவிட்டார்.

"யட்சிணி தேவதையா?"

"ஆமாம்! நான் அதை என்னோட மகாபத்ரகாளி அருளால் கண்டுபிடித்து விட்டேன். நான் மகா பத்ரகாளியின் பக்தன். காளியின் உபாசகன். நான் தியானித்துக் கூப்பிட்டால் உடனே வருவாள்... காப்பாள்."

பட அதிபர் அவன் சொல்லுவதை வியப்புடன் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார். படித்துப் பட்டம் பெற்ற வாலிபனாகிய யோகேஷ் தீவிரமான முறையில் மகாபத்ரகாளியின் உபாசகனாக இருப்பது ஆச்சரியமாக இருந்தது.

அவனுக்கு மகாபத்ரகாளி சக்தியை கொடுத்திருப்பதில் வியப்பெதுவும் இல்லை.

அவர் வியர்வை தட்டிய நிலையில், "ய... யட்சிணி தேவதை இப்போதும் ரத்னா உடம்பில் தான் இருக்கிறதா?" என்று நாத்தடுமாற கேட்டார்.

"முன்பு இருந்தது. இப்போது இல்லை."

அவன் சொல்ல பட அதிபர் நிம்மதி பெருமூச்சு விட்டார்.

"ம... மறுபடியும் 'அது' வருமா?"

"வராது என்று சொல்ல முடியாது. நான் தெரிந்து கொண்ட வரையில் முதலில் மாந்திரீக ஏவலை முறியடிக்க வேண்டும். உங்களை அழித்து நாசப்படுத்த, உங்கள் தொழிலான சினிமா படத்தயாரிப்பை முடக்கி பெரும் நஷ்டத்தில் வீழ்த்த நடந்திருக்கும் மண்டை ஓட்டுப் பூஜையும், கருப்புப்பூனை பலியும் மிகவும் சாதாரணம் தான்!"

"சாதாரணமா?"

"ஆமாம்... இவற்றை விடவும் பயங்கரமான பூஜை நடந்திருக்கு. இப்போதும்கூட உக்கிரமான பூஜை நடந்து கொண்டிருக்கலாம்."

அவன் இப்படி சொன்னபோது பட அதிபர் மேலும் பயந்து விட்டார்.

"ஐயோ!"

"இதற்கெல்லாம் பயந்து மிரண்டால் எப்படி? இதை விடவும் பயங்கரமான பூஜையும் முன்பே நடந்திருக்கலாம்."

"முன்பேயா?"

"பயங்கரமான முறையில் நரபலி பூஜை நடந்திருந்தால்கூட ஆச்சரியப் பட மாட்டேன்."

"நரபலி பூஜையா?"

திடுக்கிடலான அலறல் பட அதிபரிடமிருந்து வந்தது.

"எதுவாக இருந்தாலும் கண்டுபிடித்து அழிக்கிறேன். நீங்க பயப்படாமல் ரத்னாவை தீவிரமாக கண்காணித்துக் கொண்டு இருங்கள். நான் உங்கள் எதிரிக்காக செயல்படும் மந்திரக்காரனை சந்தித்து விட்டு வருகிறேன்."

துடிப்புடன் சொல்லிக் கொண்டு அவன் விடை பெற்றான்.

மங்கள விலாஸ் மாளிகை!

அந்த இரவு நேரத்தில் நிலா வெளிச்சத்தில் தனியாக பிரம்மாண்டமான முறையில் உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

யோகேஷ் கைனடிக் ஹோண்டா வாகனத்தில் பயணித்து குண்டும், குழியுமாக இருந்த செம்மண் சாலை வழியாக வந்து கொண்டிருந்தான்.

நீண்ட இடைவெளியில் மின் விளக்குகள் சிக்கனமாக வெளிச்சத்தை விநியோகித்துக் கொண்டிருந்தன.

வேறு எங்கேயும் வேறு வீடுகள் எதையும் பார்க்க முடியவில்லை. ஜன நடமாட்டம் இருப்பதாகவே தெரியவில்லை.

எங்கும் புதர் மண்டி கிடந்தன. ஓர் ஏகாந்தமான சூழ்நிலை. வெறிச்சோடி கிடக்கும் பிரதேசம்... பயமூட்டும் சூழ்நிலை. இந்த மாதிரியான இடத்தில் வாட்ச்மேன் சம்பூர்ண் தனியாக அதுவும் பேயடையும் மங்களவிலாஸ் மாளிகையில் பயமின்றி வசிப்பது அதிர்ச்சியான ஆச்சரியம்தான்!

யோகேஷ் பலவிதமான சிந்தனை குழப்பத்தோடு வந்து ஹோண்டாவை நிறுத்தி இறங்கியதும் ஒரு வீச்சரிவாள் அவனுடைய கழுத்தை நோக்கி பறந்து வந்தது.

'**வி**ஸ்ஸ்க்க்' என்ற ஒலியோடு வீச்சரிவாள் ஒன்று காற்றை கிழித்துக் கொண்டு வருவதை பார்த்து விட்டான் யோகேஷ்.

கண் இமைக்கும் நேரத்தில், அவன் மின்னல் வேகத்தில் விலகி குனிந்து கொண்டதும் வீச்சரிவாள் பாய்ந்து சென்று மரத்தின் மீது மோதி, கீழே விழுந்தது.

ஒரு வினாடி, அதிர்ந்த யோகேஷ் ஓடிச் சென்று வீச்சரிவாளை எடுக்கக் குனிந்தபோது பின்னாலேயே ஏதோ ஒன்று அசைவதை கவனித்து விட்டான்.

அது மனிதனா, அல்லது...

கரிய நிழலாய் ஓர் உருவம் தெரியவே யோகேஷ் வீச்சரிவாளை எடுக்காமலேயே அதன் மீது பாய்ந்தான் இரண்டு கைகளினாலும் தாக்கினான்.

"ஹம்மே..." என்ற மலையாள வாசனைக் குரலோடு அந்த உருவம் தரையில் போய் விழுந்தது.

நிலா வெளிச்சத்தில், கறுப்பு அங்கியால் போர்த்தப்பட்ட முக மூடி மனித உருவம் என்று தெரிந்தது. மலையாளத்தை தாய் மொழியாகக் கொண்டவனாக அந்த உருவம் இருக்கலாம். அவன் தடிமனாக பீப்பாய் சைஸ் உடம்பைப் பெற்றிருந்தான். ஏராளமாக சதை போடப்பட்ட குஸ்தி பயில்வானைப் போலவே தெரிந்தான். சராசரிக்கும் அதிகமான உயரம் தான்! தரையில் விழுந்த அவன் பந்து போல் துள்ளி எழுந்து அதே வேகத்தில் காலைத் தூக்கி விளாசினான்.

யோகேஷ் பக்கவாட்டில் விலகி, அந்த உருவத்தை தாவிபிடித்தான். அப்பொழுது அவனுடைய மூச்சு சுவாசம் பட்டது. வயிறு முட்ட மட்டமான சாராயம் குடித்திருந்தது அந்த உருவம்.

தன் தலையால் யோகேஷை முட்டித் தள்ளிவிட்டு, வீச்சரிவாளை எடுக்க முயன்ற போது யோகேஷ் முந்திக் கொண்டான்.

வீச்சரிவாள் கோகேஷின் கைக்குள் அடைக்கலமானது. அவனை வெட்டிக் காயப்படுத்தியாவது அந்த உருவத்தை உயிருடன் பிடித்து விட வேண்டும் என்று முயன்றான் யோகேஷ்.

"யேய்...ய்.. திமிர் தடியா உனக்கு சம்பந்தமில்லாத சங்கதிகளிலே தலையிடாதே! நின்னை நசுப்பிக்கும். துண்டு துண்டா நின்றே சதையை வெட்டி எடுத்து காக்கைக்கும், கழுகுக்கும் இரைபோடும். ஓடி போய், உயிர் பிழைச்சுக்கோ," என்று எச்சரித்தது அந்த உருவம்.

"நீ யாரடா?"

"ஞான் யாருன்னா விளிக்குன்னது... நின்றே ஜீவனை பறிச்சு மரிக்க செய்யான் எமகிங்கரனாக்கும்."



எச்சரிக்கையாய் சொன்னவன் ஒரே ஒட்டமாக ஓடி, குத்துச்செடிகளினுள் நுழைந்து, காணாமல் போனான்.

எதிர்பாராத தாக்குதலுக்குள்ளானவன் போல் அதிர்ந்து நின்றான் யோகேஷ்.

வீச்சரிவாளின் கைபிடியை தொட்டுத் தூக்கினான். கனமாக இருந்தது. பிறகு, அவனுடன் வேறு யாராவது வந்திருக்கக் கூடுமோ என்ற எண்ணத்துடன் அங்கும் இங்கும் பார்த்தான். தன்னுடைய மோட்டார் பைக் பெட்டியிலிருந்து டார்ச் லைட்டை எடுத்து அதன் வெளிச்சத்தில் தேடினான். யாரும் தென்படவில்லை.. அவன் யாராக இருக்கும்? யாருடைய கூலியாளாக செயல்பட்டு தன்னை கொலை செய்ய முயன்றான்?

தற்போது அவன் தப்பியோடி விட்ட போதிலும் மறுபடியும் வந்து, மறைந்திருந்து தாக்கி கொலை செய்ய முயற்சிப்பான் என்பதில் ஐயமில்லை. நிச்சயமாக அவன் இந்த மங்களவிலாஸ் மாளிகையுடன் தொடர்பு கொண்டவனாகத் தான் இருக்க வேண்டும்.

அவனை பற்றி வாட்ச்மேன் சம்பூர்ண் கிழவனிடம் விசாரித்தால் ஏதாவது தகவல் கிடைக்கக் கூடும் என்ற எண்ணத்துடன் "வாட்ச் மேன் தாத்தா," என்று கூவி அழைத்தான்.

குரல் எதிரொலியாக வந்தது. ஆனால், பதில் வரவில்லை. மணி ஒன்பது தான் இருக்கும். இதற்குள்ளாகவா அவன் தூங்கியிருப்பான்? சாத்தியமில்லை. காவலில் கெட்டிக்காரனான அவன் எப்போதுமே தனிமையில் தனியாக இருப்பது குறித்தும் கவலைப்பட்டதில்லை. தனிமை அவனை வாட்டியதாகவும் தெரியவில்லை. பேய் பிசாசுகளால் தொல்லைகள் ஏற்படுமோ என்று நினைத்து பயந்ததும் இல்லை.

அவனே ஒரு பேய் போலவே நடந்து மற்றவர்களின் சந்தேகத்திற்குரியவனாக பயமுறுத்திக் கொண்டிருந்தான்.

மங்களவிலாஸ் மாளிகைக்கு வெளியே காம்பவுண்டு வாசலை ஒட்டி ஒற்றையாக மின்விளக்கு ஒன்று தொங்கிவாறு வெளிச்சம் பரப்பிக் கொண்டிருந்தது.

மாளிகையினுள் வெளிச்சம் தெரியவில்லை. சிக்கனம் கருதி மின்விளக்குகளை அணைத்திருக்கலாம்.

சிறிது நேரம் அவன் பெயரை சொல்லிக் கூப்பிட்டுப் பார்த்து விட்டு வாசல் பக்கமாக இருந்த காவல் மாடம் அருகில் போனான்.

அதுதான் வாட்ச்மேன் சம்பூர்ணின் ஜாகை! இரண்டு அறைகளைக் கொண்ட சிறிய வீடு.

(திகில் தொடரும்)

## போதைக்கு அடிமையான அழகி



'**பி**ளக் வீனஸ்' என்றழைக்கப்படும் கறுப்பழகி நவோமி கம்பல் போதை மருந்துக்கு அடிமையாகி இருப்பதாக முன்னர் அரசல் புரசலாகக் கதைகள் அடிபட்டன. இப்போது இவரே பகிரங்கமாக ஒப்புக் கொண்டிருக்கிறார்.

பல காலமாக மொடலிங்கில் முதல் இடத்தைத் தக்க வைத்திருக்கும் அழகிகளில் ஒருவர் நவோமி. கறுப்பின அழகியான இவருக்கு 20 மில்லியன் டொலருக்கு (சுமார் 85 கோடி ரூபாய்) மேல் சொத்துக்கள் உள்ளன.

குத்துச்சண்டை வீரர் மைக் டைசன், ஹொலிவூட் நடிகர் றொபர்ட் டி நீரோ போன்ற பெரிய பெரிய பிரபலங்களுடன் காதல் வயப்பட்ட நவோமி இப்போது இலண்டன் மருத்துவமனையில் போதைப்பழக்கத்தில் இருந்து விடுபட சிகிச்சை எடுத்து வருகிறார்.

போதைப் பழக்கத்தினால் ஏற்பட்ட கோபக்குணத்தினால் தனது குதியுயர்ந்த செருப்பின் கூர் முனையால், ஒரு பெண்ணின் காலைக் குத்திக் காயப்படுத்தினார். அதுமட்டுமன்றி இவர் ஒரு முறை தற்கொலை செய்யக்கூட முயன்றிருக்கிறார்.

## காதலர் தினத்தில் மகிழ்ச்சியும் சோகமும்

**இ**ம்முறை காதலர் தினத்தை உலகம் முழுவதும் விதவிதமாகக் கொண்டாடியிருந்தார்கள். ஜமைக்கா நாட்டில் 4 ஜோடிகளுக்கு விமரிசையாகத் திருமணம் நடந்தது. இதில் என்ன விசேஷம் என்றால் இந்த நால்வரும் பிறந்தநாள் உடையில் திருமணம் செய்து கொண்டார்கள்.

அடுத்து தாய்லாந்து நாட்டில் உள்ள சரணாலயத்தில் இரண்டு ஜோடிகளுக்குத் திருமணம் நடந்தது. இந்த ஜோடிகள் இரண்டும் சரணாலயத்தில் உள்ள யானைகள் ஆகும். திருமணம் முடிந்த கையோடு' அவர்களது முதலிரவும் நடந்தது. இந்த 'முதலிரவை' சரணாலயத்திற்கு 'விசிட்' அடித் தவர்களுக்கு பெரிய திரை மூலம் படமாகக் காட்டப்பட்டது.

இப்படி காதலர் தினக் கொண்டாட்டங்கள் மகிழ்ச்சியாக பல்வேறு நாடுகளில் நடந்திருந்தாலும் சோகங்களுக்கும் குறைவில்லை.

காதலர்கள் பலர் காத்திருந்து காதலைச் சொல்ல பயன்படுத்தும் காதலர் தினத்தன்று, தற்கொலை செய்து கொள்ளவும் அதைப் பயன்படுத்தினர்.

காதலித்துத் திருமணம் செய்துகொண்ட மருத்துவர்களான சுரேஷ்-புனிதா இருவரும் தமிழகத்தில் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். வரதட்சனைக் கொடுமை தாங்காது மருத்துவரான புனிதா தற்கொலை செய்து கொண்டார். இவர் தற்கொலை செய்து கொள்ள முடிவெடுத்த நாள் காதலர் தினமான பெப்ரவரி 14.

இன்னொரு சம்பவம் மதுரையில் நடந்தது. கல்லூரி மாணவர்களான கருணாகரன், கண்ணன், கோபி மூவரும் நண்பர்கள். மூவரும் ஆளுக்கொரு பெண்ணைக் காதலித்தனர்.

மூன்று சோடிகளின் காதலன்-காதலி இருவரும் வேறு வேறு சாதியைச் சேர்ந்தவர்கள். தமது காதலைப் பெற்றோர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்ற பயத்தில், பெப்ரவரி 14ம் திகதி அதிகாலை எல்லோரும் பூச்சிமருந்தை அருந்தி விட்டனர்.

## ஆனந்த் பின்னால் அருணா



'**உ**லக செஸ் சாம்பியன்' பட்டத்தை வென்றதன் மூலம் உலக அளவில் பிரபலமாகியுள்ளார் தமிழக வீரர் விஸ்வநாதன் ஆனந்த்.

'ஓர் ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருக்கிறாள்' என்று கூறுவார்கள். ஆனந்தின் வெற்றிக்குப் பின்னால் இருபெண்கள் இருக்கிறார்கள். ஒருவர் ஆனந்தின் அம்மா சுசிலா. அடுத்தவர் ஆனந்தின் மனைவி அருணா.

ஆனந்திற்கு செஸ் பயிற்சியளிப்பது அவரது அம்மா தான். ஆனந்தின் வேலைகள் குறிப்பாக செஸ் பேட்டி நடைபெறும் இடங்கள். திகதி. போட்டி ஒப்பந்தம் உட்பட எல்லாவற்றையும் கவனித்து வருகிறார் ஆனந்தின் மனைவி அருணா.

டெக்ரானில் நடந்த உலக செஸ் சாம்பியன் போட்டியில் வெற்றி பெற்றபின் அருணா அளித்த பேட்டி இது,

"எனது கணவர் எல்லோர்கிட்டேயும் கலகலப்பாகப் பேசுவார். அதுவேண்டும், இது வேண்டும் என்று யாரையும் தொந்தரவு செய்ய மாட்டார். அவர் ஒரு வருடத்தில் 7 மாதம் செஸ் போட்டிகளில் கலந்து கொள்வதால், அவருடன் நானும் ஒவ்வொரு நாடாகப் போவேன்.

அவர் சாப்பிடும்போதும், உறங்கும்போதும் செஸ் பற்றித்தான் பேசுவார். செஸ் விளையாட்டில் அவர் மும்முரமாக இருக்கும்போது நான் அவரைத் தொந்தரவு செய்ய மாட்டேன்.

எங்கள் இருவரின் எண்ணங்களும் ஒரே மாதியாக இருப்பதால் நாங்கள் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கிறோம்." என்று கூறியுள்ளார்.

## அதிக வயதில் அடுத்த திருமணம்

**உ**லக அதிசயமாக இதையும் சேர்த்துக் கொள்ளலாம். அப்துல்லா அல்-மைது அல்கேத்தானிக் என்பவருக்குப் பெயரைப் போலவே ஆயுளும் நீளம். இவரது வயது, அதிகமில்லை ஒரு 110 தான்.


இது மட்டுமா? அதிர்ஷ்டமும் அதிகம் தான். ஏற்கனவே இரண்டு கல்யாணம் செய்து கொண்டு, அதன் மூலம் 70 குழந்தைகள் மற்றும் பேரக்குழந்தைகளுக்கு உரித்துடையவர் இவர்.

இதை அடுத்து இவருக்கு மூன்றாவது கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று திடீர் ஆசை ஏற்பட்டது. இருப்பினும் ஒரு சின்ன சந்தேகம் இவருக்கு. அதாவது குடும்ப வாழ்க்கையில் ஈடுபட முற்றிலும் தயாராக உடல் நிலை உள்ளதா என்பது தான் அது.

உடனே மருத்துவரிடம் சென்று பரிசோதனை செய்ய, நூற்றுக்கு நூறு வீதம் உடல் நிலை 'சகல' விதத்திலும் சரியாக இருக்கின்றதென மருத்துவர் சான்றிதழ் கொடுத்து விட்டார்.

எல்லோருடைய சம்மதத்தையும் பெற்றுக் கொண்டு சிலமாதங்களுக்கு முன் கல்யாணம் செய்து கொண்டார் அப்துல்லா. இப்போது அப்துல்லா அப்பா ஆகப் போகிறார்

## யோகாவை நாடும் நடிகைகள்



**ஹொ**லிவூட் பட நாயகிகள் பலர் அமைதிக்காக யோகாசனத்தில் குதித்திருக்கிறார்கள். இந்த வரிசையில் கடைசியாக இணைந்திருப்பவர் ஸினத் போல்ட்ரோ.

28 வயதான ஸினத் போல்ட்ரோ 'ஷேக்ஸ்பியர் இன் லவ்' என்ற ஆங்கிலப்படத்தில் நாயகியாக நடித்தவர். இவர் தினமும் காலை, மாலை நேரங்களில் 30 நிமிடங்கள் முதல் ஒரு மணிநேரம் வரை யோகாசனம் செய்து வருகிறார்.

இவர் யோகாவில் இறங்கியதற்கு என்ன காரணம்? இவரே சொல்கிறார்,

"பொப் இசைப் பாடகி மடோனா 42 வயதிலும் எவ்வளவு அழகாகக் காட்சியளிக்கிறார். இதற்கெல்லாம் காரணம் யோகா தான்.

இதை அவரே என்னிடம் கூறி, தினமும் யோகா செய்யும் படி எனக்கு ஆலோசனை வழங்கினார். யோகா செய்யத் தொடங்கிய பிறகுதான் அதன் அருமை தெரியவந்தது.

யோகா செய்யத் தொடங்கிய பின் எப்போதும் இல்லாத ஒரு சுறுசுறுப்பு கிடைக்கிறது," என்கிறார் ஸினத்.

# சொக்லேட் பூந்தோட்டம்



→ ஜப்பானிய சமையற்கலை வல்லுநர்களால் அமைக்கப்பட்ட இந்தப் பூந்தோட்டம் முழுக்க முழுக்க சொக்லேட்டுக்களால் தயாரிக்கப்பட்டதாகும்.

ஃபிரான்ஸ் தலைநகர் பாரிஸில் கடந்த வருடம் நடந்த கண்காட்சியில் ஜப்பானியத் தோட்ட மாதிரியைக் கொண்டு அமைத்த சொக்கலேட் பூந்தோட்டத்துடன் சமையற்கலை வல்லுநர்தான் பெருமையுடன் காணப்படுகிறார்.

# பாதுகாக்கப்படும் பொக்கிஷங்கள்




↓ முன்னாள் சோவியத் யூனியன் கலைப்பொக்கிஷங்கள், இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அந்தப் பொக்கிஷங்களுள் ஒன்று தான் இது.

17ம் நூற்றாண்டில் ரஷ்ய கலைஞர்களால் உருவாக்கப்பட்ட உருவப்படம் தான் இது. சிறிய அளவில் காணப்பட்டாலும் இதன் பெறுமதி பல இலட்சங்களுக்கும் அதிகம்.

கன்னி மரியாளையும் குழந்தை இயேசுவைக் கையில் வைத்திருக்கும் இந்த உருவப்படம் தங்கம், வெள்ளி, வைரக்கற்கள் கொண்டு உருவாக்கப்பட்டதாகும்.

இது 32 சென்டி மீட்டர் உயரமும் 28 சென்டி மீட்டர் அகலமும் உடையதாகும்.

# திருக்குர் ஆன்



→ இந்தியாவின் உத்திரப்பிரதேச மாநிலத்தில் அலிகார் பல்கலைக்கழகம் உள்ளது இப்பல்கலைக்கழகத்தில் இருக்கும் மௌலானா ஆசாத் நூலகத்தில் இருக்கும் திருக்குர் ஆன் தான் இது.

சுமார் 1400 வருடங்களுக்கு முன்பு எழுதப்பட்ட இஸ்லாமியப் புனித நூலான இந்தக் குர் ஆன் இன்றும் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

முஹம்மது நபி அவர்களின் வழித்தோன்றலான காலிஃபா ஹஸ்ரத் அலி அவர்களால் ஒட்டகத்தோலில், பேரிச்சை மரத்திலிருந்து தயாரிக்கப்பட்ட'மை' கொண்டு இது எழுதப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதுமட்டுமன்றி இந்நூலகத்தில் முகலாயர் காலத்தில் எழுதப்பட்ட திருக்குர் ஆன் கைப்பிரதிகளும் இங்கு உள்ளன.

# தகவல் பெட்டி

## ஒரே மாதிரிப் போட்டி



↘ தோற்றத்தில் ஒரே மாதிரி இருக்கும் செல்லப்பிராணிகள், அவற்றின் உரிமையாளர்கள் அமெரிக்காவின் ஃபுளோரிடா நகரில் சமீபத்தில் நடந்தது.

அதில் கலந்து கொண்ட 5 வயதுப் பச்சை ஓணானும் (பச்சோந்தி) அதைப் போன்ற உருவத்தையுடைய அதன் உரிமையாளரும் தான் படத்தில் காணப்படுகின்றனர்.

# வேலையில்லாதோரின் வேலை



← ஆர்ஜென்டினா நாடு மோசமான பின்னடைவை எதிர்நோக்கி வருகின்றது. அந்நாட்டில் உள்ள வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில், கடந்த சில வருடங்களில் வீட்டில் வளர்க்கும் நாய்களை வெளியே அழைத்துச் செல்லும் வேலை செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது.

நாய்களை வளர்ப்போர், அவற்றை வெளியில் அழைத்துச் செல்ல நேரமில்லாததால், வேலையில்லா இளைஞர்களிடம் இந்த வேலையை ஒப்படைத்து விடுகின்றனர்.

வீட்டில் வேலையில்லாமல் சும்மா இருப்பதை விட, இப்படி நாயை வெளியே அழைத்துச் செல்லும் வேலையைச் செய்து கொஞ்சம் பணமாவது சம்பாதிக்கலாமேயெனப் பலர் இத்தொழிலில் இறங்கிவிட்டனர்.

திரையுலக மறுபக்கம் 190

தமிழ்நாட்டிலிருந்து மயன்

# போட்டி போடும் முன்னாள்-இந்நாள் நடிகைகள்

இந்தித் திரையுலகில் கனவுக்கன்னியாக இருந்த நடிகையின் பெயரைக் கொண்ட, மூன்றெழுத்து முன்னாள் நடிகை, தமிழில் வாய்ப்புகள் இல்லாமல் போக, சென்னையில் புடவைக்கடை ஒன்றை நடத்தி வருகிறார்.

பெயர் தான் புடவைக்கடையே தவிர, உண்மையில் புடவை வியாபாரத்திற்குப் பதிலாக 'பலான' தொழில் தான் நடத்தி வருகிறார். பலகாலமாக அந்த நடிகையின் 'சேவை' அமோகமாக நடந்து கொண்டிருக்கிறது.

பெரியதிரை-சின்னத்திரை நட்சத்திரங்களின் ஜொலிப்பால், அங்கு பல பெரும்புள்ளிகள் தவறாமல் ஆஜராகி விடுவதுண்டு. படவாய்ப்புத் தேடி சென்னை வந்த கட்டுடல் கொண்ட அந்தச் சின்னத்திரை நடிகை, முதலில் முன்னாள் நடிகையின் 'வியாபார நிலையத்தில்' தான் முழுநேரப் பணியை மேற்கொண்டு வந்தார்.

அங்கு வந்த சின்னத்திரைப் பிரமுகர் ஒருவரது கண்ணில் பட்டு, சின்னத்திரை தொடர்களில் நடிகையாக அறிமுகமானதும், அதன்பின் அதிர்ஷ்டம், நடிகையின் 'திறமை' காரணமாக இன்று சின்னத்திரையில் பிஸியான வில்லியாக வலம் வருவது பலரும் அறிந்த கதை. இப்போது பெரிய திரையிலும் சின்னச் சின்ன வேடங்களில் நடித்து வருகிறார்.

காந்தக் கண்களாலும் கவர்ச்சியான உதடுகளாலும் யாரையும் வீழ்த்தி விடும் அந்த நடிகை 'பழையதை' மறக்காமல் முன்னாள் நடிகையின் 'வியாபார நிறுவனத்தில்' பகுதிநேரப் பணியில் ஈடுபட்டும் வந்தார்.

முன்னாள் நடிகையின் 'வியாபார நிறுவனத்திற்கு' வாடிக்கையாளர்களையும், புதிய வரவுகளையும் அழைத்து வரும் 'முகவருக்கும்' முன்னாள் நடிகைக்குமிடையே திடீரென மோதல் ஒன்று ஏற்பட்டது.

உடனே அந்த 'முகவர்' சின்னத்திரை வில்லி நடிகையிடம் சென்று, 'உங்க அழகுக்கும் திறமைக்கும் நீங்களே சொந்தமாக ஒரு 'வியாபார நிறுவனத்தை' ஆரம்பிக்கலாம். ஆட்களைக் கொண்டு வருவது என் பொறுப்பு' எனத் தூபம் போட்டிருக்கிறார்.

அந்தச் சின்னத்திரை நடிகையும் சாவி கொடுக்கப்பட்ட பொம்மை போல் தலையாட்ட, 'முகவரோ' அந்தச் சின்னத்திரை நடிகையின் வீட்டையே 'வியாபார நிறுவனமாக்கி' விட்டார்.

இப்போது முன்னாள் நடிகையின் இடத்திலும் பார்க்க வில்லி நடிகையின் வீட்டில்தான் அமோகமாக ஆட்கள் குவிந்து வருகிறார்கள்.

இதனால் முன்னாள் நடிகை, சின்னத்திரை நடிகை மீது கடும்கோபத்தில் இருக்கிறாராம்.

## பப்படமான 'பாப்பா'

தெலுங்கிலும் தமிழிலும் ஒரே நேரத்தில் தயாரான இருமொழிப்படம் என்ற அறிவிப்போடு வெளியானது 'பாப்பா'. ஆனால் தெலுங்கில் தயாரிக்கப்பட்டு தமிழில் மொழிமாற்றப்பட்ட, ஒரு டப்பிங் படம் என்பதை இரசிகர்கள் புரிந்து கொண்டு விட்டார்கள். அத்தோடு படத்திலும் எதிர்பார்த்தளவுக்கு புதுமையாக ஒன்றுமில்லை. இதனால் படம் வந்த வேகத்திலேயே திரையரங்கை விட்டு ஓடி விட்டது.

இப்படத்தைத் தயாரித்த 'சூப்பர் குட் ஃபிலிம்ஸ்' சௌத்ரிக்கு கோடிக்கணக்கில் நஷ்டம்.



படம்: பூவெல்லாம்...



விக்னேஷ்-அஞ்சு அரவிந்த்
படம்: நினைவெல்லாம் நீ

## விஜய் நடிக்கும் 'ஷாஜகான்'

பல இளம் இயக்குநர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கும் தயாரிப்பாளர் ஆர்.பி.சௌத்ரி, ரவி என்ற புதிய இயக்குநரை வைத்துத் தயாரிக்கும் படம் 'ஷாஜகான்'.

இதில் விஜய் கதாநாயகனாக நடிக்கிறார். இவருக்கு ஜோடியாக 'அல்லி அர்ஜுனா' படத்தில் அறிமுகமாகும் ரிச்சா பலோட் நடிக்கிறார். இவர்களுடன் விவேக், தேவன், பாலாஜி, கோவை சரளா உட்பட பலர் நடிக்கின்றனர்.

ஆர்தர் ஏ.வில்சன் ஒளிப்பதிவு செய்கிறார். தெலுங்குப்பட இசையமைப்பாளர் மணிசர்மா இசையமைக்கிறார். வைரமுத்து பாடல்களை எழுதுகிறார்.

கதை-திரைக்கதை-இயக்கம் ஆகிய பொறுப்புகளை ஏற்றிருக்கும் புதியவரான ரவி, 'உதயம்' புகழ் ராம் கோபால் வர்மாவிடம் பல படங்களில் உதவியாளராகப் பணியாற்றியவர்.

## எஸ்.வி.சேகர் ஜோடியாக சுகன்யா

எஸ்.வி.சேகர் முதல் முறையாக இயக்கி நடிக்கும் 'கிருஷ்ண கிருஷ்ணா' படத்தில் எஸ்.வி.சேகருக்கு ஜோடியாக நடிக்கிறார் சுகன்யா. முதலில் இந்த வேடத்தில் நடிக்க தேவயானி, கௌசல்யா ஆகியோரின் பெயர்கள் அடிபட்டன. பின் ரக்மாவை அணுக அவர் பல இலட்சங்களைச் சம்பளமாகக் கேட்க, கடைசியில் சுகன்யாவை ஒப்பந்தம் செய்துள்ளனர்.

எஸ்.வி.சேகர்-சுகன்யா ஜோடியுடன் ரமேஷ் கண்ணா, வெண்ணிற ஆடை மூர்த்தி, மதன்பாப், டெல்லி கணேஷ், பாண்டு, மனோரமா, கோவை சரளா ஆகியோர் நடிக்கின்றனர்.

எஸ்.ஏ.ராஜ்குமார் இசையமைக்க, கதை-திரைக்கதை எழுதி இயக்குகிறார் எஸ்.வி.சேகர்.

'பாரதி', 'நிலாக்காலம்' ஆகிய படங்களைத் தயாரித்த மீடியா டீரிமஸ் பட நிறுவனம் இப்படத்தைத் தயாரிக்கிறது.

சினி...



தபு
படம்: கவர் ஸ்டோ...

## இரட்டைக் கவர்ச்சி

மும்தாஜ் நடிக்கும் படங்களுக்கு ஒரு எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது. நடிப்புக்காக அல்ல, அம்மணியின் கவர்ச்சிக்காக. கவர்ச்சி காட்டுவதில் தாராள மயக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் மும்தாஜிற்குப் பல படங்கள் குவிகின்றன.

ஷங்கரிடமிருந்து பிரிந்து வந்த மாதேஷ் தயாரிக்கும் 'சாக்லேட்' படத்தில் மும்தாஜ் இரட்டை வேடங்களில் நடிக்கிறார். இரட்டை மும்தாஜ்- இரட்டைக் கவர்ச்சி.

## வித்தியாச விக்னேஷ்

பாரதிராஜா, கே.எஸ்.ரவிக்குமார் உட்பட பல பிரபல இயக்குநர்களின் படங்களில் நடித்திருந்தும் விக்னேஷிற்கு பேர் சொல்லும்படியான படமெதுவும் வரவில்லை.

இப்போது ஷங்கரின் உதவியாளர் செல்வா இயக்கும் 'சூரி' படத்தைப் பெரிதும் எதிர்பார்க்கிறார். முதல் பாதியில் மென்மையான இளைஞனாகவும் பின்பாதியில் முரட்டுத்தனமான இளைஞனாகவும் 'சூரி'யில் நடிக்கிறார் விக்னேஷ்.

'சேது' எப்படி விக்ரமிற்கு ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியதோ அதைப்போல் இதுவும் தனது திரையுலக வாழ்க்கையில் திருப்புமுனையை ஏற்படுத்தும் என நம்புகிறார் விக்னேஷ்.

**முகப்பில்**

ரோஜா
படம்: கள்ளும் கற்று மற

சத்யராஜ்
படம்: மிஸ்டர் நாரதர்



வெங்கடேஷ்-சௌந்தர்யா
படம்: பாப்பா

## 'பலான' பாட்டு

பிரசாந்த்-ஸ்நேகா நடிக்கும் 'விரும்புகிறேன்' படத்திற்கு ... செக்ஸியாக ஒரு பாட்டு வேண்டும் என்று இயக்குநர் சுசி கணேசன் ... 'இதோ ரெடி,' என்பது போல ... எழுதிக் கொடுத்திருக்கிறார் வைரமுத்து.

'மச்சினிச்சு கேட்டதே-விடிய ... கூத்து, இவன் கிட்ட இருப்பதோ ... பொடித்த தாத்து...' என்று தொடங்குகிறது வைரமுத்து எழுதிக் கொடுத்த பாடல்.

## மன்சூரின் இசை அல்பம்

நடிகர்கள், நடிகைகள் பொப் இசை அல்பம் வெளியிடுவதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். மனோ... ஆகியோரைத் தொடர்ந்து மன்சூரலிகானும் இந்தப் பட்டியலில் இடம் பெறுகிறார்.

இவரது அல்பத்திற்கு 'ஆத்தா ஆத்தா' என்று பெயரிட்டுள்ளார். இடம்பெறும் பாடல்களை எழுதி இசையமைத்துப் பாடி ஆடியிருக்கிறார் மன்சூர். இந்த அல்பத்தில் இவருடன் இணைந்து அனிதாஸ்ரீயின் நடனக் குழுவினர் நடனமாடியிருக்கின்றனர்.



...ம் உன் வாசம்

## மினி சினி

- வெற்றிப்பட இயக்குநராக வலம் வரும் சரணிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றி வரும் ஹரி என்பவர் பிரசாந்தை வைத்துப் படமொன்றை இயக்கவுள்ளார். இதற்குத் 'தமிழ்' என்று பெயரிடப்பட்டுள்ளது.
- விக்னேஷ் ஜோடியாக 'சூரி' படத்தில் அறிமுகமாகும் மாளவா, மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளில் 7 படங்களில் நடித்திருக்கிறார்.
- விஜய் முதல் முறையாக இரட்டை வேடத்தில் நடிக்கும் படத்தை ஆஸ்கார் மூவீஸ் பட நிறுவனம் தயாரிக்கிறது. இதில் ஒரு விஜய்க்கு ஜோடியாக முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யா ராய் நடிக்கவுள்ளார்.
- அஜித்தின் மார்க்கெட் 'தீனா' மூலம் மறுபடி ஏறுமுகமாக இருக்கும் நிலையில், இவர் கதாநாயகனாக நடிக்கும் புதிய படமொன்றிற்கு 'ஏறுமுகம்' என்று பெயரிடப்பட்டிருக்கிறது.
- மம்முட்டி-நெப்போலியன் இணைந்து நடித்த 'எதிரும் புதிரும்' படத்தை இயக்கிய வி.சி.ரமணி இயக்கத்தில் விக்ரம்-லைலா ஜோடியாக நடிக்கும் படத்திற்கு 'கனகவேல்' என்று பெயர் சூட்டியுள்ளார்கள்.
- தமிழில் இரண்டாவது நாயகனாக 'மிஸ்டர் நாரதர்', 'காதல் வைரஸ்' ஆகிய படங்களில் நடித்து வரும் அப்பாஸ், இப்போது நான்கைந்து இந்திப் படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறார்.
- சூர்யா ஜோடியாக 'ப்ரண்ட்ஸ்' படத்தில் அறிமுகமான விஜயலட்சுமி இப்போது 3 தமிழ்ப்படங்களில் கதாநாயகியாக நடித்து வருகிறார்.
- விவேக் முதல் முறையாக கதாநாயகனாக நடிக்கும் 'பஞ்ச' படத்தில் மூன்று கதாநாயகிகள். ஒருவர் ராதிகா சௌத்ரி. மற்ற இருவரையும் புதுமுகங்களாகத் தேடி வருகிறார்கள்.

## பிரபு-ரம்யா கிருஷ்ணன் நடிக்கும் 'ஆயிரம் பொய் சொல்லி'

'கலியுகம்', 'உத்தமபுருஷன்' ஆகிய வெற்றிப் படங்களை பிரபுவை வைத்து இயக்கிய கே.சுபாஷ் அடுத்து பிரபுவை வைத்து இயக்கும் படம் 'ஆயிரம் பொய் சொல்லி'.

இதில் பிரபு ஜோடியாக ரம்யா கிருஷ்ணன் நடிக்கிறார். இவர்களுடன் விவேக், காக்கா ராதாகிருஷ்ணன், வெண்ணிற ஆடை மூர்த்தி, பாண்டு உட்பட பலர் நடிக்கின்றனர்.

தேனிசைத் தென்றல் தேவாவிற்கு இசை உதவி புரிந்து வரும் அவரது சகோதரர்களான சபேஷ்-முரளி இப்படத்தின் மூலம் இசையமைப்பாளர்களாக அறிமுகமாகிறார்கள்.

நடிகர் பார்த்திபனின் தம்பி ஆர்.சந்திரசேகர் இப்படத்திற்குக் கதை எழுத, பூபதி பாண்டியன் வசனம் எழுதுகிறார். திரைக்கதை அமைத்து இயக்குகிறார் கே.சுபாஷ்.

## வந்துவிட்டார் வாரிசு

விஜயகுமார்-மஞ்சுளா தம்பதியின் கடைசி வாரிசான ஸ்ரீதேவியும் களமிறங்கி விட்டார். கதிர் தயாரித்து இயக்கும் 'காதல் வைரஸ்' படத்தில் நாயகியாக அறிமுகமாகிறார் ஸ்ரீதேவி. இவரது ஜோடியாக நடிக்கிறார் அறிமுக நடிகர் ரிச்சர்ட். இவர் ஷாலினியின் சகோதரர் என்பது தெரிந்ததே.

விஜயகுமார்-மஞ்சுளா தம்பதியின் வாரிசுகளான வனிதா, ப்ரீதா ஆகியோரை அடுத்து நாயகியாக அறிமுகமாகும் ஸ்ரீதேவி, 'ரிக்ஷா மாமா', 'சுகமான சுமைகள்' உட்பட பல படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடித்துள்ளார்.

## வி சி ட்



## காதோடு சொல்லுகிறோம்

'காதலுக்கு மரியாதை' செய்த மலையாள இயக்குநரிடம் தனது தங்கையை நாயகியாக்குமாறு சிபார்சு செய்யப் போனாராம் முன்னாள் நடிகையும், இந்நாள் இளம் நாயகனின் மனைவியும் அந்நாள் குழந்தை நட்சத்திரம். 'பார்க்கலாம்' என்று பதிலளித்த அந்த மலையாள இயக்குநர், பின்னர் புதுமுக நாயகி ஒருவரை வைத்துப் படத்தை ஆரம்பித்து விட்டாராம். தங்கைக்குச் சிபார்சு செய்யப்போன முன்னாள் நடிகை வருத்தத்தில் இருக்கிறாராம்.

குழந்தைகள் விரும்பிச் சாப்பிடும் பெயர் கொண்ட படத்தை இயக்கி வரும் ஏழுமலையானின் பெயரைக் கொண்ட இயக்குநர் துணை நடிகைகளிடம் பல்லைக் காட்டி வருகிறாராம். சிலர் பல்லைக்கடித்துக் கொண்டு சகித்துக் கொள்கிறார்களாம். அப்படிச் செய்யாவிட்டால், அவர்கள் நடித்த காட்சிகளை வெட்டியெறிந்து விடுகிறாராம். வாய்ப்புக்கிடைக்க வேண்டுமென்றால் இப்படியெல்லாம் நடக்க வேண்டியிருக்கிறதே என்று புலம்புகிறார்களாம் பாதிக்கப்பட்ட நடிகைகள்.

மறைந்த இந்தியப் பிரதமரது பெயரின் முன் பாதியைத் தனது பெயரின் முன்பாதியாகக் கொண்ட ஒளிப்பதிவாளரும் இயக்குநருமானவருக்கு மறுபடியும் தமிழ்ப்படமொன்றை இயக்க ஆசையாம். ஆனால் முதலிரு படங்களில் இவர் செய்த குளறுபடிகளால், இவரை வைத்து படமெடுக்க எந்த தயாரிப்பாளருக்கும் விருப்பமில்லையாம். எனவே இவர் தற்போது சொந்தமாகப் படமொன்றைத் தயாரித்து இயக்கிவருகிறாராம். தமிழில் அல்ல தாய்மொழியான மலையாளத்தில்.

வடநாட்டு நடிகைகளின் வரவால் அதிகமாகப் பாதிப்பு அடைந்திருக்கிறாராம் இரண்டெழுத்துக் கன்னழகி நடிகை. புதுமுக நடிகைகளின் வரவால் புதுப் படவாய்ப்புகளின்றி இருக்கும் கன்னழகி நடிகை, எந்த வேடத்தில் யார் நடிக்க அழைத்தாலும் மறுப்பேதும் கூறாமல் வந்த வரைக்கும் இலாபம் என்ற வகையில் வாய்ப்புகளை வளைத்துப் போட்டுக் கொள்கிறாராம்.



பிரசாந்த்-மிங்க் சிங்
படம்: பிரியாத வரம் வேண்டும்

## தமாஷ் பெயர்

படங்களுக்குப் பெயர் சூட்டுவதில் மலையாளப்படவுலகம் கொஞ்சம் வித்தியாசப்பட்டு இருக்கிறது. மற்ற மொழிப் படங்களில் வெளிவருவதை விட நகைச்சுவைப் படங்கள் அதிகம் வெளியாவதும் மலையாளத்தில் தான்.

அண்மையில் தயாரிக்கப்பட்ட மலையாளப் படமொன்றுக்கு வைக்கப்பட்டிருக்கும் பெயர் என்ன தெரியுமா? 'மூன்று விக்கெட்டும் முன்னூற்றி அறுபத்தஞ்சு ரன்னும்'. சரியான தமாஷ்தான்.

## பிரபுதேவா ஜோடியாக ஜோதிகா

'பூவெல்லாம் உன் வாசம்' படத்தில் அஜித் ஜோடியாக நடித்துவரும் ஜோதிகா, இப்படத்தைத் தயாரிக்கும் நிறுவனம் தயாரிக்கும் அடுத்த படத்திலும் நாயகியாக ஒப்பந்தமாகியுள்ளார்.

இப்புதிய படத்தில் பிரபுதேவா கதாநாயகனாக நடிக்கிறார். பிரபுதேவா-ஜோதிகா ஜோடியாக நடிக்கும் இப்படத்தை 'சொல்லாமலே' சசி இயக்குகிறார்.



பிரபுதேவா-ரோஜா
படம்: களவும் கற்று மற

## டாக்டர் ராஜசேகரின் 'ஆட்சி'

டாக்டர் ராஜசேகர் நடித்த 'ராவண்ணா' தெலுங்குப் படம் அங்கு வெற்றிபெற, உடனே தமிழில் மொழிமாற்றி வெளியிடப் போகிறார்கள். தமிழில் இதற்கு 'ஆட்சி' என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள்.

டாக்டர் ராஜசேகருடன் சௌந்தர்யா, சங்கவி மற்றும் விஜயகுமார், ராக்கி, மோகன்ராஜ், ராணி மற்றும் பலர் இதில் நடித்திருக்கிறார்கள்.

எஸ்.ஏ.ராஜ்குமார் இசையமைத்திருக்கும் இப்படத்தை கோபால் என்பவர் இயக்கியுள்ளார்.


## முரளியின் 'மனமகிழ்ச்சி'

முரளி-நெப்போலியன் நடித்த 'மனுநீதி' படத்தைத் தயாரித்த பி.ராமச்சந்திரன், தான் தயாரிக்கும் அடுத்த படத்திலும் முரளியையே கதாநாயகனாக்கியுள்ளார். இப்படத்திற்கு 'மனமகிழ்ச்சி' என்று பெயரும் வைத்து விட்டார். 'மனுநீதி' படத்தை இயக்கிய தம்பி ராமையாவே இப்படத்தையும் இயக்குகிறார்.

## அதிக அரங்குகள்

'துள்ளாத மனமும் துள்ளும்' படத்தை இயக்கிய எழில் இப்போது அஜித்-ஜோதிகா நடிக்கும் 'பூவெல்லாம் உன் வாசம்' படத்தை இயக்கி வருகிறார். இப்படத்திற்காக இதுவரை இல்லாத அளவுக்கு கோடிக்கணக்கில் செலவழித்துப் பல அரங்குகள் (செட்) போட்டுப் படமெடுத்து வருகிறார் எழில்.

# வித்தியாசமான ஓவியம்



அழகு தேவதை மோனாலிஸாவை வைத்து உலகப்புகழ்பெற்ற ஓவியர் லியார்னடோ டாவின்ஸி வரைந்த ஓவியம் தான் தற்போது ஃபிரான்ஸ் நாட்டில் விலைமதிக்க முடியாத ஒரு பொக்கிஷமாகப் பேணிக்காத்து வரும் மோனாலிஸா ஓவியமாகும்.

1857ம் ஆண்டு வரையப்பட்ட மோனாலிஸா ஓவியத்தை மாதிரியாகக் கொண்டு சிம்பன்ஸிக் குரங்கொன்று தனது குட்டியைக் கையில் வைத்திருப்பது போல் கடந்த வருடம் வரைப்பட்ட ஓவியம்தான் இது. இலண்டனைச் சேர்ந்த பிரபல ஓவியரான என்சனி பிரவுண் என்பவர் வரைந்த இந்த வித்தியாசமான ஓவியம், இங்கிலாந்தின் அதிசிறந்த விருதுகளில் ஒன்றான 'கிறிஸ்டன் அன்டலிஸன்' விருது பெறுவதற்கான போட்டிகளில் கலந்து கொள்ள அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(பட உதவி: அஹமட் நியாஸ், கொரியா)

# காதல் படும் பாடு

காதல் மலர், பழம்போன்றது
இவை இரண்டும் எங்கிருந்தாலும்
பிறர் தெரிந்து கொள்ளலாம்.
***
காதல் வந்து விட்டால்
கல்லாதவனும் கவிஞன் ஆகிறான்.
***
காதல் மிகவும் சக்தி வாய்ந்தது
சிலரை கடனாளியாக்குகிறது;
பலரை பைத்தியக்காரனாக்குகிறது.
***
வீரன் தோல்வியடைவது
தன் காதலியிடம் மட்டும்தான்!
***
காதல் சிலருக்கு
மின்னலைக் கொடுக்கும்.
ஒரு சிலருக்கு இடியைக் கொடுக்கும்;
இன்னும் சிலருக்கு மழையைக் கொடுக்கும்.
எதற்கும் தயாராக இருக்க வேண்டும்!.
***
உண்மைக் காதல் உதடுகளைத்தேடும்;
பணக்காதல் பணப்பையை தேடும்!
***
உலகத்தில் உள்ள எல்லாவற்றையும்
விலைபேச முடியும்,
உண்மைக் காதலைத்தவிர.
***
காதல் கரும்பைப் போன்றது,
அதை நுனியிலிருந்து அடிவரை சுவைக்க வேண்டும்.
***
காதல் வந்து விட்டால்
சோப்பு, சீப்பு கண்ணாடிக்கு வேலை அதிகம்.
***
காதல் ஒரு தென்றல் காற்று,
அது புயலாக மாறுவதற்கு முன்பு
திருமணம் செய்து கொள்ள வேண்டும்.

காதலன் உணர்ச்சி வசப்பட்டால்,
"சந்திரனையும் சூரியனையும் கொண்டு வருகிறேன்!" என்பான்;
காதலி, அது முடியாது என்று தெரிந்தும்
மறு கேள்வி கேட்க மாட்டாள்.
***
காதல் ஒரு காந்தம்;
அது பிடித்தவற்றை எங்கிருந்தாலும் இழுத்துக் கொள்ளும்.
***
உலகம் ஒரு பெரிய காதல் அரங்கு;
அந்த அரங்கில் தினசரி காட்சிகளுக்குப் பஞ்சமே
இல்லை.
***
காதல்
நீர்வீழ்ச்சியைப் போன்றது;
கரையில் சேர்ந்தவர்களுக்கு மகிழ்ச்சியையும்
கரையில் சேராதவர்களுக்கு வீழ்ச்சியையும் கொடுக்கும்.
***
காதல் என்ற வெள்ளம்
கரை புரண்டு ஓடுவதற்கு முன்பு
மாங்கல்யம் என்ற அணையைப் போட்டு
அதைத் தடுக்க வேண்டும்!
***
காதல் ஒரு கனிமரம்;
கல்லடியும் படும். நல்ல கனிகளையும் கொடுக்கும்.
எதற்கும் தயாராக இருக்க வேண்டும்.
***
காதலர்கள் தங்கள் கூட்டு முயற்சியில்
பல உலக அதிசயங்களையும் படைக்கின்றனர்
சிலரை படைத்ததிற்கு மகிழ்ச்சி அடைகிறார்கள்
சிலரை படைத்ததிற்கு வேதனைப் படுகிறார்கள்.
"வாழ்க காதல் வளர்க காதலர்கள்!"

ஈச்சந்தீவு, செ.ராமேஸ்வரன்
(மலேசியா)

# ஆசை

அலைமீது தலை வைத்து
உறங்கிட ஆசை.
சிறகு இல்லாமல் வானில்
பறந்திட ஆசை
வண்டாகி மலரில் தேனை
சுவைத்திட ஆசை.
செதுக்காமல் கற்களை
சிலையாக்கிட ஆசை.
தீட்டாமல் சுவர்கள் எல்லாம்
ஓவியமாக்கிட ஆசை.
ஒருநாள் இரவுமட்டும் வானில்
நிலவாய் இருந்திட ஆசை.
காதலிக்காமல் கவிதை
எழுதிட ஆசை.
ஆனால்
இதனைக் காணவேண்டும்
என்றால் காதலித்தே
ஆகவேண்டும் என்பதால்
என் எண்ணங்களுக்கு
தாள் போட்டு
வைக்கிறேன்!

பி.விக்னேஸ்வரன்-
அட்டன்.

# என் கல்லறையில் கவிதை எழுது...!

ஏன் என் விழியில் மோதினாய்?
ஏன் என் மனதில் சுமை ஏற்றினாய்?
காணும் கனவுகளை பொய்யாக்கினாய்;
காணாத வாழ்வை உருவாக்கினாய்!
*
நீ என் கல்லறையில் எதை
எழுதுவாய் என்றே புரியவில்லை.
ஏதேனும் எழுதி வை.
உனக்காக அல்ல, எனக்காக!
*
வாழ்வின் சோகங்கள் எல்லாம்
வார்த்தையில் சொல்ல முடிவதில்லை.
வசந்தம் நாளை உதயமானாலும்
வாழ்வதற்கு நான் உயிருடன் இல்லை!
*

பிரதீப் அஜ்ஜி, தெஹியோவிட்ட.

# தேன் கிண்ணம்

# நீயும் தெரிந்து கொள்



இன்னும் ஏன்
என்னை சூரியன்
போல் சுட்டெரிக்கிறாய்?
*
உன்னை காதலித்த
பாவத்திற்கா?
*
வானில் பொழியும்
மழை பூமிக்கு வந்தடைந்தால்தான்
அதற்கும் நிம்மதி...!
*

நீ நினைப்பது
மாதிரி கடல் நீர்
நீல நிறமல்ல; வானின்
நிழல் தான் என்பதையும்
விளங்கிக் கொள்!
*
காதல் என்பது
புரியாத புதிர் அல்ல-
உனக்கு விளக்கிக்கூற,
*
அல்லிப்பூ சேற்றில்
மலர்ந்தாலும்
அதற்கும் பெயர்
பூதான்.
*
எந்த நேரமோ!
குளத்து நீர்
வற்றிப் போகலாம்!
ஆனால், கடல் நீர்
என்றைக்குமே
வற்றாது.
*
எப்படியெல்லாம்
சூரியன் சுட்டெரித்தாலும்
அதன் வருகை பார்த்துதான்
சூரிய காந்தி மலரும்.

அக்கரைப்பற்று,
அஜந்தகுமார்.

# கவனி முன்னேறு நில்

நாம் மற்றவர்களை எப்படி நேசிக்கிறோம், மற்றவர்கள் நம்மை எவ்விதம் நேசிக்கிறார்கள் என்பதனைத் தெளிவாக தெரிந்து கொண்டால் வாழ்க்கையை இன்பமாக வாழ்ந்து காட்ட முடியும்.

முழு மனதுடன் பிறரை நேசிக்க வேண்டும். அன்புடன் உதவும் பண்பு அவசியம் இருக்க வேண்டும். இப்படிச் செய்வதின் மூலம் மற்றவர்களும் நம்மை இதே மாதிரித்தான் நேசிப்பார்கள்.

இதனால் தான் பைபிள் கூறுகிறது, 'நீ எந்த அளவு அளக்கிறாயோ அதே அளவு உனக்கும் அளக்கப்படும்' நாம் பிறருடன்பேசும் பொழுதும் பழகும் பொழுதும் நேசம் நிச்சயிக்கப்படும்.

நமது முகபாவத்தின் மூலமும், சொல்லின் மென்மையிலும் கனிவான ஒலியினாலும், நேசம் இணைக்கப்பட்டு விடும். இந்த உறவுதான் பலவிதமான புதிய தொடர்புகளை உண்டாக்க நம்முடைய நேசத்தின் தன்மையை அதிகரிக்கும்படி செய்து ஆற்றலைப் பெற்றுத் தரும்படி வழிவகுக்கும்.

நாம் உண்டு, நம் வேலை உண்டு என்று மற்றவர்களிடம் நேசம் கொள்ளாமல், மனம் விட்டுப்பழகாமல் இருந்தால் என்றுமே நன்றாக மகிழ்ச்சியாக வாழ முடியாது.

மற்றவர்களுடன் ஒன்று சேருவது தொடக்கம். எப்பொழுதும் ஒற்றுமையாக இருப்பது முன்னேற்றம். ஒன்றாக இணைந்து செயல்படுவது வெற்றியைத் தரும் என்கிறார் ஹென்றிபோர்டு. ஒற்றுமையே பலம் என்று நம் நாட்டு பழமொழி கூறுகிறது.

தனிமரம் என்றுமே தோப்பாக மாறாது; கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்று ஆன்றோர்கள் கூறுகிறார்கள். நம்முடைய வாழ்க்கையில் சந்திப்பவர்களுக்கு நேசத்துடன் உதவி செய்ய முன்வரவேண்டும்.

நம்முடன் தொடர்பு கொண்டவர்கள் வெற்றி பெற வழி அமைத்துத்தருவது நல்லது. நம்முடன் இருப்பவர்கள் தவறான பாதையில் செல்லும் போது தடுக்க வேண்டும்.

இதனைச் செய்தால் எல்லோருடைய இதயங்களிலும் நாம் நேசத்துடன் இருக்க முடியும்.

நமக்கு மட்டும் அல்ல, நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கும் வெற்றியை தேடித் தர இயலும். நாம் மற்றவர்களுக்கு உதவ முன்வரும் போது தான் நம் மனதில் புதிய சக்தி உருவாகும்.

வீட்டில் மட்டும் இல்லாமல், வெளியிலும் இந்தப் புதிய சக்தி உருவாகும்.

உயிரோடு இருக்கையில் மகிழ்ச்சியாய் இருப்பதும், நன்மை செய்வதும் அல்லாமல் வேறு ஒரு நன்மையும் மனிதனுக்கு இல்லை என்று பிரசங்கி என்ற அறிஞர் கூறுகிறார்.

## நேசம் வெற்றியின் வாசம்


நேசம் என்பது மணம் தரும் செண்ட். இதை மற்றவர்கள் மீது தெளிக்கும் போது நம் மீதும் சில துளிகள் விழும். எதையும் எளிதாகச் சொல்லிவிட முடியும். செய்வது என்பது தான் கடினம். அதனால் தான் ஒரு அறிஞர் கூறினார், சொல் அல்ல, செயலே முக்கியம் என்று சொல்லுவது எல்லோராலும் முடியும். ஆனால் செய்வது என்பது சிலரால் மட்டுமே முடியும்.

உயிருடன் இருக்கும் வரை தான் நாம் மற்றவர்களுக்கு உதவி செய்ய இயலும். மற்றவர்களிடம் நேசம் கொள்ளவும் இயலும். உயிர் போய் விட்டால் நாம் ஒன்றுமே செய்ய முடியாது.

இவருடைய கேள்விக்கு சரியான விடை தரும்படி நம்முடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும். காணும் சகோதரனிடத்தில் அன்பு செலுத்தாதவன் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு செலுத்துவான் என்று இயேசு கேட்கிறார். நம்முடைய நேசத்தை விருத்தி செய்து கொள்வதற்கு, உதவி உன்னதமான இடத்தைப் பெறும் என்பதனை என்றும் நினைவில் வைக்க வேண்டும்.

நாம் மற்றவர்களிடம் நேசம் கொண்டுக்கிறோம் என்பதனைத் தெரியப்படுத்துவதற்கு, வாய்ப்புத் தருவதே, உதவி செய்வது தான்.

# பேனா நண்பர்கள்



பெயர்: பி. விஷ்வன்
வயது: 29
முகவரி:
27, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
பொழுது போக்கு:
பேனா நட்பு.



பெயர்: என். அனிதா
வயது: 19
முகவரி: 5ம் வட்டாரம்,
நெடுந்தீவு.
பொழுது போக்கு:
வழமையானவை.

# இந்தவாரம் உங்கள் பலன்

11.03.2001 முதல் 17.032001வரை

ஜோதிடர் 'கர்ணா'

**மேடம்:**
இழுபறியான நிலை மாறும். புதிய திட்டங்கள் வெற்றியைக் கொடுக்கும். வெளிநாட்டுப் பிரயாணம் சித்திக்கும். தூர இடத்து நற்செய்தி கிட்டும். அச்சுவினி நட்சத்திரக்காரருக்கு பிரயாண வெற்றி கொடுக்கும்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: மஞ்சள்; எண்: 06.
அதிஷ்ட திகதிகள்: 15, 16.

**இடபம்:**
தொழிலில் சிக்கல் தொடரும். பண வரவு சீராக அமையாது. எதிலும் சுணக்கம் காணப்படும். தடைகள் ஏற்படும். முக்கிய முடிவுகள் சிக்கலுடன் எடுக்கப்படும். ரோகினி நட்சத்திரக்காரர் எதிலும் அவதானம் தேவை.
அதிஷ்ட நாட்கள்: செவ்வாய், சனி.
அதிஷ்ட நிறம்: ஊதா; எண்: 07.
அதிஷ்ட திகதிகள்: 11, 17.

**மிதுனம்:**
வருமான வசதிகள் கூடும். நாட்பட்ட பிரச்சனைகள் தீரும். சுபகரும விடயங்கள் முடிவுக்கு வரும். குடும்பப் பெண்களிற்குச் சிறப்பான வாரமாகும் புனர்பூச நட்சத்திரக்காரர் தொழில் சிறப்புக்களைப் பெறுவர்.
அதிஷ்ட நாட்கள்: புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம்: வெள்ளை; எண்: 05.
அதிஷ்ட திகதிகள் : 11, 14.

**கடகம்:**
பதற்றமான நிலை மறையும். பயண அலைச்சல் காணப்படுவதுடன் கடன் பிரச்சனைகள் கூடிக் குறையும். தாமதமான சில விடயங்கள் கைகூடுவதுடன் பொருள் வசதிகள் பணவருவாய் அதிகமாகும். உடலில் உள்ள நோய் துன்பம் நீங்கும். பூச நட்சத்திரர் எச்சரிக்கையுடன் செயற்படவும்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், புதன்.
அதிஷ்ட நிறம்: வெள்ளை; எண்: 04.
அதிஷ்ட திகதிகள்: 13, 14.

**சிங்கம்:**
தொழில் வசதி பெறும். கொடுக்கல் வாங்கல் கடன் பிரச்சனை தீரும். திருமண, சுபகரும நிகழ்வுகள் நடைபெறும். நோய்துன்பம் மாறுவதுடன் ஆலய தரிசனமும் ஏற்படும். மகநட்சத்திரருக்கு தொழில் சிறப்பு கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள்: வியாழன், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: இளநீலம்: எண்: 05.
அதிஷ்ட திகதிகள்: 14, 15.

**கன்னி:**
குடும்பத்தவர்களுக்கு அலைச்சல் ஏற்படும். பணவரவுடன் செலவுகள் அமையும் மாணவர்களின் கல்வி நிலை சிக்கலைக் கொடுக்கும். வாகன விடயம் அவதானம் தேவை. அத்த நட்சத்திரருக்கு பிரயாண வசதிகள் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், ஞாயிறு.
அதிஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு; எண்: 06.
அதிஷ்ட திகதிகள்: 15, 16.

**துலாம்:**
நல்ல முயற்சிகள் தொடரும். தொழிலுடன் சம்பந்தப்பட்ட இடத்தில் நற்பெயர் ஏற்படும். எதிர்பார்த்த சுய கரும முயற்சிகள் நன்றாக நடைபெறும். மாணவர்களிற்கு ஊக்கமளிக்கும் வாரமாகும். சுவாதி நட்சத்திரப் பெண்களிற்கு மகிழ்ச்சி ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள்: புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: இள மஞ்சள்; எண்: 03.
அதிஷ்ட திகதிகள்: 12, 15.

**விருட்சிகம்:**
அரச எதிர்ப்புண்டு. கொடுக்கல் வாங்கல் சிக்கல்கள் காணப்படும். பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி காணப்படும். வாகனத்துறையுடன் தொழில் செய்வோர் அதிக இலாபம் பெறுவார்கள். கேட்டை நட்சத்திரகாரருக்கு வசதிகள் கூடும் நேரமாகவும் அமையும்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், சனி.
அதிஷ்ட நிறம்: இளபச்சை; எண்: 04.
அதிஷ்ட திகதிகள்: 14, 16.

**தனுசு:**
தேக்கமான நிலை வெளியாரின் தலையீட்டால் தீர்வடையும் முக்கிய முடிவுகள் தாமதம் இன்றிக் கிடைக்கும். தொழில் இல்லாதோர் தொழில் வசதிகளைப் பெறுவார்கள். மூல நட்சத்திரக்காரர் பணவசதி வாய்ப்புக்களைப் பெறுவர்.
அதிஷ்ட நாட்கள்: புதன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம்: றோஸ்; எண்: 09.
அதிஷ்ட திகதிகள்: 12, 14.

**மகரம்:**
தொழில் விடயமான ஆலோசனைகள் பலன்தரும். பணம் சேரும். நாட்பட்ட நோய்துன்பம் மாறும். வெளிநாட்டுப் பிரயாணம் வெற்றியாக அமையும். திருவோண நட்சத்திரப் பெண்களிற்கு சிறப்பான வளர்ச்சியுண்டு.
அதிஷ்ட நாட்கள்: செவ்வாய், வியாழன்.
அதிஷ்ட நிறம்: நீலம்; எண்: 08.
அதிஷ்ட திகதிகள்: 05, 17.

**கும்பம்:**
முக்கிய பிரச்சனைகள் தோன்றும். நோய்துன்பம், மன நிம்மதியற்ற நிலை. விவசாய கைப்பணித் தொழில் செய்வோர் ஓரளவு வருமான வசதிகளைப் பெறுவதுடன் சதயநட்சத்திரக்காரர் முக்கிய விடயங்களில் கவனத்துடன் ஊக்கம் எடுக்கவும்.
அதிஷ்ட நாட்கள்: புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: கருநீலம்; எண்: 02.
அதிஷ்ட திகதிகள்: 16, 17.

**மீனம்:**
மனதில் மகிழ்ச்சி நிலவும். முக்கிய திட்டங்கள் நடைமுறைக்கு வரும். பிரிந்த உறவினர்கள் ஒன்று சேர்வார்கள். பெரியோர்களின் ஆசீர்வாதமும் உடல் உற்சாக நிலையும் ஏற்படும். உத்திரட்டாதி நட்சத்திரக்காரருக்கு மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடந்தேறும்.
அதிஷ்ட நாட்கள்: வெள்ளி, ஞாயிறு.
அதிஷ்ட நிறம்: மரூன் வர்ணம்; எண்: 01.
அதிஷ்ட திகதிகள்: 11, 12.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்



## அழுத்தமாகத் தேய்த்தால் ஆபத்து

சிலர் பற்களைச் சுத்தப்படுத்துகிறேன் என்று தினமும் அழுத்தமாகத் தேயோ தேய் என்று தேய்த்துப்பார்ப்பார்கள். அவர்கள் அதற்காக கடினமான பிரஷ்களையும் உபயோகிப்பார்கள்.

இப்படியெல்லாம் தொடர்ந்து செய்து வந்தால் நாளடைவில் பற்கள் வலுவிழக்கும். பற்கள் கூசும். பற்களின் மேற்பூச்சான எனாமல் நீங்கிப் பற்கூச்சம் அதிகரிக்கும். ஈறுகள் கடுமையாகப் பாதிக்கப்படும்.

பற்சுத்தம் தேவைதான். அதற்காக அளவு மீறக் கூடாது. பற்களைச் சுத்தப்படுத்தும் பிரஷ்களை நாம்தான் எமக்குத் தேவையான வகையில் பார்த்து வாங்கவேண்டும்.

பிரஷ்கள் ஒல்லியாக, பற்களில் குத்தாமல் வளைவாக இருக்க வேண்டும். பிரஷ்ஷில் உள்ள நைலோன் கற்றைகள் ஒரே அளவினதாக இருக்க வேண்டும்.

அதிக சூடாக தேனீர் அல்லது கோப்பி அருந்தி விட்டு, உடனே ஐஸ்கிறீம் போன்ற குளுமையான உணவு வகைகளைச் சாப்பிடக் கூடாது. இதுபோன்ற மாறுபட்ட வெப்ப நிலையில் உள்ள பொருட்களை அடுத்தடுத்துச் சாப்பிட்டாலும் பற்கள் பாதிப்படையும்.

பல் தேய்க்கும்போது நிதானமாகவும் அழுத்தம் தராமலும் தேய்க்க வேண்டும். அதிக அழுத்தம் ஆபத்திற்கு வழிவகுக்கும்.

பற்களில் கூச்சம் இருந்தால் பல் வைத்தியரிடம் காட்டலாம். அவர்கள் அதற்குரிய இரசாயனம் கலந்த பற்பசைகளை எழுதித் தருவார்கள். இந்த வகைப் பற்பசைகள் பற்கூச்சத்தைப் போக்கும்.

இரவு படுக்கப் போகும் முன்பாக இலேசாகப் பல்தேய்த்து, உப்புப் போட்ட வெந்நீரில் வாயை நன்கு கொப்பளிப்பது நல்லது. ஆல், வேல், வேம்பு, சாதிக்காய், சீரகம் கலந்த மூலிகைப் பொருட்களைக் கொண்ட பற்பொடிகளால் பற்களைத் துலக்கலாம்.

இதனால் பற்கள் வலுவடையும். இருப்பினும் இவற்றை மருத்துவர்களின் ஆலோசனையின் பேரில் மட்டுமே பயன்படுத்த வேண்டும். மருத்துவர்களிடம் கலந்து ஆலோசிக்காமல் உபயோகிப்பது தவறாகும்.


நமது உடல்நிலை, நமக்கு ஒத்துப் போகும் உணவுப் பொருட்கள் இரசாயனங்கள் போன்றவை மருத்துவர்களுக்குத் தெரியும் என்பதால் நாமாக எந்த உடல் நலன் குறித்த முடிவுகளையும் எடுக்கக்கூடாது.

## சொன்னபடி கேட்க.....

உங்கள் குழந்தைகள் அளவுக்கு அதிகமாகக் குழப்படி செய்கிறார்களா? சொன்னபடி கேட்க மாட்டேன் என்கிறார்களா? அடித்து, நொருக்கினால் எல்லாம் சரியாகிவிடும் என்று எண்ணாதீர்கள்.

ஆற அமர்ந்து செயற்பட்டால் அமைதிப் பிள்ளைகளாகி விடுவார்கள் அவர்கள்.

- அக்கம் பக்கத்தில் உள்ள அமைதி யான குழந்தைகளோடு உங்கள் குழந்தைகளையும் விளையாட விடுங்கள்.
- மூளைக்கு வேலையைக் கொடுக்கும் விளையாட்டுப் பொருட்களை வாங்கிக் கொடுங்கள்.
- வெண்டிக்காய், கரட், வெங்காயம் போன்றவற்றை பச்சையாக உண்ணக் கொடுங்கள்.
- தினமும் கைகளை நீட்டுவது, கால்களை உயர்த்துவது போன்ற உடற் பயிற்சிகளை உடனிருந்து சொல்லிக் கொடுங்கள்.
- ஒரு 15 நிமிடமாவது கடவுளை மன்றாடுகிற வாக்கில் ஒரே இடத்தில் அமைதியாக அமரச் செய்யுங்கள்.



மொத்தத்தில் அவர்களை மன ரீதியாக மெதுமெதுவாக திருத்தப்பாருங்கள். தடி எடுத்து விளாசுவதிலும் பார்க்க இப்படியான வழிகளால் அவர்களைச் சரியான வழிக்குக் கொண்டு வரலாம்.

# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்



**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** JF

பெயர்:.....................

முகவரி:.....................

.....................

தொழில்:.....................

கையொப்பம்:.....................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 17-03-2001**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

# மோனிக்கா என் மோனிக்கா

வழங்குவது புவனா — 78

பேர்ணி லிவின்ஸ்கியிடமிருந்து விவாகரத்துப் பெற்ற மோனிக்காவின் தாயார் மார்சியா பீற்றர் ஸ்ட்றவூஸ் என்பவரை மறுமணம் முடிக்க ஏற்பாடு செய்திருந்தார். அவருக்கு அப்போது 76 வயது. இருப்பினும் முறைப்படி திருமணம் பற்றி அறிவித்தல் விடுவிக்கப்படவில்லை.

மோனிக்காவின் விவகாரங்கள் நாடெங்கணும் பகிரங்கமாக பரவிவந்தமையினால் மார்சியா பீற்றருடன் தொடர்பு வைத்திருப்பதைத் தவிர்த்திருந்தார். தன் வருங்காலக் கணவருக்கு தன் மகளைப் பற்றிய தகவல்கள் தெரியாமல் இருப்பதே நன்மை பயக்கலாம் என்று மார்சியா கருதியிருக்கக்கூடும். ஆனால் 'தினசரிப்பத்திரிகைகளிலும் அத்தனை தொலைக்காட்சிகளிலும் மோனிக்கா–கிளின்ரன் விவகாரங்கள் எந்த நேரமும் பகிரங்கமாக்கப்பட்டு வரும்போது பீற்றர் இது பற்றித் தெரிந்திருக்காமல் இருந்திருக்க முடியுமா? ஆனால் பீற்றர் மோனிக்கா பிரச்சனை பற்றி மார்சியாவிடம் எதையும் கேட்டுத் தெரிந்து கொள்ளவில்லை. மார்சியா எப்போதாவது தன் வருங்காலக் கணவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வந்த



## உண்மையை மறைக்க வேண்டிய நிர்ப்பந்தம்

போதிலும் சுகநலங்கள் பற்றிய விசாரணைகளுடன் நின்று விடும். மார்சியா தனது வாஷிங்டன் இருப்பிடத்தையோ தொலைபேசி இலக்கத்தையோ பீற்றருக்கு கொடுக்கவில்லை.

இதற்கிடையில் ஜனவரி மாத ஆரம்பத்தில் பீற்றர் தனக்கும் மார்சியாவுக்குமிடையில் திருமணம் நடைபெறவிருப்பதற்கான நிச்சயதார்த்த அறிவித்தலை பத்திரிகையில் அறிவித்து விட்டார்.

கிளின்ரன்மீது பௌலா ஜோன்ஸ் தாக்கல் செய்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, நீதிபதி சுசான் வெப்பம் ரைட் என்பவர் பௌலா ஜோன்ஸ் வழக்கில் மோனிக்காவை ஒரு சாட்சியாக விசாரிக்க வேண்டிய அவசியமில்லை என்று கூறிவிட்டார். இதனால் மோனிக்காவும் தாயார் மார்சியா மற்றும் அவர் குடும்பத்தவர்கள் அனைவரும் சற்று ஆறுதலடைந்தார்கள். மோனிக்கா இந்த நிலையில்கூட நிம்மதியாக இருக்க முடியவில்லை. பத்திரிகைக் காரர்களும் வானொலி, தொலைக்காட்சி செய்தியாளர்களும் அன்றாடம் புதுப்புதுக் கதைகளையும், தகவல்களையும் வெளியிட்ட வண்ணம் பூச்சாண்டி காட்டிக் கொண்டே இருந்தனர்.

கென்னத் ஸ்டாரின் உதவியாளர்கள் மீண்டும் தொடங்கிய விசாரணைகளுக்கு மோனிக்கா முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அவளுடைய சட்டத்தரணி கின்ஸ்பேர்க் விசாரணை நடைபெறும் இடத்துக்கு அவளை அழைத்துச் சென்றார். விசாரணையாளர்கள் எத்தகைய கேள்விகளைக் கேட்டாலும், அவற்றுக்கு முகம் கோணாமல் சிரித்த வண்ணமே பதிலளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

இருப்பினும் பத்திரிகைக்காரர்களும் கூலிக்காக பத்திரிகைகளுக்குப் படம் பிடித்துக் கொடுத்து பணம் சம்பாதிக்கும் 'பப்பராசிகளும்' நூற்றுக்கணக்கான ஒளிவிளக்குகளை மோனிக்கா மீது பாய்ச்சி தொடர்ந்து படம் பிடித்த வண்ணமிருந்தனர். தனது சட்ட உதவியாளர் கின்ஸ்பேர்க் சிரித்தபடி இருக்கும் படி கூறிய போதும் படப்பிடிப்பாளர்களின் உபத்திரவத்தை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. சிரிப் புக்குப் பதிலாக அவளுடைய முகத்தில் சினந்தான் பொங்கி எழுந்தது.

கென்னத் ஸ்டாரினுடைய உதவியாளர்கள், மோனிக்கா வீட்டில் நடத்திய சோதனையின்போது, அவர்களால் கைப்பற்றப்பட்ட பொருட்கள், ஆவணங்கள் ஆகியவற்றைப் பற்றி கேள்விக்கு மேல் கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

கிளின்ரன் மோனிக்காவுக்கு பரிசாகக் கொடுத்த கணினியில் பதிவு செய்யப்பட்டிருந்த தகவல்களைப்பற்றி கேள்விகளைக் கேட்டார்கள். இந்த வேளையில் ஸ்ராரின் உதவியாளர்களுக்கும் மோனிக்காவின் சட்டவல்லுநர்களுக்கும் இடையில் பலத்த வாக்குவாதங்களும் இடம் பெற்றன.

ஜனவரி மாதக் கடைசியில் புலன் விசாரணை அதிகாரிகள் இருவர் வழக்கறிஞர் கின்ஸ்பேக்கர் தங்கியிருந்த விடுதிக்கு வந்தனர். மோனிக்காவுக்கு வழக்கில் தண்டனை எதுவும் கிடைக்காமல் பாதுகாப்பளிப்பது தொடர்பாக ஆலோசனைகளை வழங்கவே அவர்கள் அங்கு வந்திருந்தனர். அவர்கள் எதையும் எழுத்தில் கொடுக்க விரும்பவில்லை அவர்கள் வாயால் தெரிவித்த விவரங்களை வழக்கறிஞர்கள் கையால் எழுதிக் கொண்டனர். இதற்குப் பதிலாக மோனிக்காவும் பத்துப்பக்கங்களைக் கொண்ட தனது கூற்றையும் அவர்களிடம் எழுதிக் கொடுத்தாள். இதில் கிளின்ரனுக்கும் தனக்கும் இடையில் நேரடியான பாலியல் தொடர்புகள் இருக்கவில்லையென்றும் வெறுமனே மிக நெருக்கமான அணைப்புகளுடன் கூடிய உறவுகள் மட்டுமே இருந்தன என்றும் தெரிவித்திருந்தாள்.

கிளின்டன் தனக்கும் மோனிக்காவுக்கும் இடையில் எந்தவிதமான பாலியல் ரீதியிலான தொடர்புகளும் இருந்ததில்லை என்று வாதிட வேண்டுமென்றே அவளிடம் வற்புறுத்தி வந்திருக்கிறார். இதற்கு ஓரளவு மோனிக்கா சம்மதமளித்தே இருந்தாள். இவ்வாறு வெளிப்படையாக ஒப்புக்கொண்ட போதிலும் அவளுக்கு, தான் தன் மனச்சாட்சிக்கு விரோதமாக, உண்மைக்குப் புறப்பாகவே அவ்வாறு தெரிவிக்க வேண்டிய நிலையில் இருந்ததை அவள் எண்ணுகிறாள். இத்தனையும் தன் குடும்பத்தாரை நீதி விசாரணைகளுக்கு உட்படுத்தவோ அவர்களுக்கு தண்டனை வழங்கப்படுவதோ தவிர்க்கப்பட வேண்டும் என்பதற்காகவே அவ்வாறு தெரிவிக்க முற்பட்டாள். எவ்வாறாயிருப்பினும் தான் மனப்பூர்வமாக நேசித்த ஒருவரை, அவ்வாறு நேசிக்கவில்லை! அவருக்கும் தனக்குமிடையே எவ்வித உறவும் இருந்ததில்லை என்று கூறுவது அவளுக்கு மிகுந்த மனவருத்தத்தையே அளித்தது. இருப்பினும் தன்னுடைய காதலனைக் காப்பாற்ற இத்தகைய பொய் மூலம் ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மோனிக்கா ஓரளவு நிம்மதி அடைந்தாள்.

மோனிக்காவின் சட்டத்தரணியான கின்ஸ் பேர்க் எதற்கும் பயந்த சுபாவம் உடையவராகவே காணப்பட்டார். மோனிக்காவின் தந்தையாரைக்கூட அவருடைய மகள் மோனிக்காவுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள வேண்டாமென்றும் அறிவுறுத்தி இருந்தார். மோனிக்காவுக்கும் எவருடனும் தொலைபேசி மூலமாகவோ



எதுவும் தெரிவிக்க வேண்டாம் என்றும் எச்சரித்திருந்தார். இருப்பினும் மோனிக்காவுக்கு ஆறுதல் கூறியும் அனுதாபம் தெரிவித்தும் ஏராளமான கடிதங்கள் அன்றாடம் வந்து குவிந்தவண்ணமிருந்தன. இவற்றுக்கெல்லாம் பதில் கடிதம் போடக்கூடாது என்றும் எச்சரித்திருந்தார் கின்ஸ்பேர்க் அவர்கள்.

பெப்ரவரி மாத மத்தியில் மோனிக்கா லொஸ் ஏஜ்சல்ஸ் நகருக்கு விமானம் மூலம் போய்ச் சேர்ந்தாள். அப்போதுகூட சென்று கொண்டிருந்த மோட்டார் வண்டியைக்கூட சுற்றிச் சுற்றி படம் பிடித்தார்கள். லொஸ் ஏஞ்சல்ஸ் போய்ச் சேர்ந்த பின்னரும்கூட படப்பிடிப்பாளர்களின் தொல்லையிலிருந்து அவள் விடுபடவில்லை. மோனிக்கா அணிந்திருந்த ஆடைகள், அவற்றின் வர்ணங்கள் அவளுடைய முடி மற்றும் அவள் அணிந்திருந்த அணிகலன்கள் அத்தனையும் விபரமாக பத்திரிகையில் வர்ணிக்கப்பட்டன. புகைப்படங்களும் பிரசுரிக்கப்பட்டிருந்தன.

*(வருவாள்)*

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

### மன்னார் வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி

இவர்தான்

**பி.பிறேமலதா**
மூர் வீதி, மன்னார்.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# பீர்பால் எங்கே?

பாப்பா முரசு சிறுகதை



அக்பரும், பீர்பாலும் அடிக்கடி உரையாடுவார்கள். அந்த உரையாடலின்போது பீர்பாலின் அறிவு பூர்வமான விஷயங்களைக் கேட்டு அளவற்ற மகிழ்ச்சி கொள்வார் அக்பர். அதேசமயம் ஆத்திரமும் கொள்வார்.

அவர் எப்பொழுது மகிழ்ச்சி கொள்வார், எப்பொழுது ஆத்திரம் கொள்வார் என்பதை யாராலும் கண்டுபிடிக்க முடியாது.

மகிழ்ச்சி கொள்ளும் சமயங்களில் பீர்பாலுக்குப் பரிசுகள் கொடுத்துப் பாராட்டுவார். ஆத்திரம் கொள்ளும் சமயங்களில் பீர்பாலை உடனே வெளியேறும்படி உத்தரவிடுவார். ஆத்திரத்தில் அப்படிச் செய்துவிட்டுப் பிறகு மனம் வருந்துவார். அதன்பிறகு பீர்பாலை வரவழைக்க முயலுவார்.

ஒருநாள்-அக்பருக்கும், பீர்பாலுக்கும் நடந்த உரையாடலின் போது, ஏடாகூடமாக பேச்சு மாறிவிட, அக்பர் ஆத்திரத்துடன், பீர்பாலை உடனே வெளியேறும்படி உத்தரவிட்டார்.

பீர்பாலும் மூச்சு விடாமல் வெளியேறி விட்டார்.

அவர் எங்கு சென்றார் என்பது யாருக்கும் தெரியாது.

சில நாட்கள் ஓடின.

தனது ஆத்திரத்தை நினைத்து வருந்திய அக்பர், பீர்பாலை உடனே பார்க்க வேண்டும் என்று விரும்பினார்.

பல இடங்களில் காவலர்களை அனுப்பித் தேடினார்.

ஆனால் பீர்பால் எங்கும் கிடைக்கவில்லை.

மிகவும் மனம் வருந்திய அக்பர் பீர்பாலை எப்படிக் கண்டுபிடிப்பது என்று தெரியாமல் விழித்தார். ஆனாலும் கண்டுபிடிக்கா விட்டால் நாம் சக்கரவர்த்தியாய் இருப்பதற்குத் தகுதியே இல்லை என்றும் நினைத்தார்.

பீர்பாலை எப்படிக் கண்டுபிடிக்கலாம்? என்று யோசித்தார்.

அறிவைப் பயன்படுத்தினால் நிச்சயம் அவர் இருக்கும் இடத்தை அறிய முடியும் என்ற முடிவுக்கு வந்த அக்பர், மிகத் தீவிரமாக யோசித்தார்.

அவருக்கு ஒரு யோசனை வந்தது.

தம் ஆட்சிக்கு உட்பட்ட சிற்றரசர்களுக்கெல்லாம் கீழ் கண்ட ஓலையை அனுப்பினார்.

'நமது ராஜ்ஜியத்திலுள்ள கடலுக்குத் திருமணம் நிச்சயம் செய்யப்பட்டிருக்கிறது. உம்முடைய எல்லைக்கு உட்பட்டிருக்கும் ஆறுகளையெல்லாம், உடனே எனது அரண்மனைக்கு அனுப்பி வைக்கவும்.'


ஓலையைப் பெற்ற சிற்றரசர்கள், விஷயம் எதுவும் புரியாமல் குழப்பமடைந்தனர். ஆனால் ஒரே ஒரு சிற்றரசர் மட்டும், அக்பரின் செய்திக்குப் பதில் அனுப்பியிருந்தார்.

'என்னுடைய எல்லைக்குட்பட்டிருக்கும் ஆறுகள் அனைத்தும், கடலின் திருமணத்துக்கு வர முன்னேற்பாடுகளுடன் இருக்கின்றன. தாங்கள், தங்கள் ராஜ்ஜியத்திலிருக்கும் கிணறுகள் அனைத்தையும் தயார் செய்து, ஆறுகளை வரவேற்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள்,' என்பது தான் அந்த சிற்றரசர் அனுப்பிய செய்தி.


இதைப் படித்த அக்பருக்குப் புரிந்து விட்டது

'எனது கேள்விக்கு, இத்தனை அறிவுப் பூர்வமாக பதில் கூறும் திறமை, பீர்பாலைத் தவிர வேறு யாருக்கும் இருக்க முடியாது. பீர்பால் இந்த சிற்றரசரின் பாதுகாப்பில்தான் இருக்கிறார். எனது செய்திக்குப் பதில் எழுதி சிற்றரசருக்கு உதவியவரும் அவர்தான்.'

அக்பர் உடனே அந்த சிற்றரசரின் நாட்டுக்குச் சென்று சகல மரியாதையுடன் பீர்பாலை அழைத்துக் கொண்டு நாடு திரும்பினார்.



இலக்கம் 1ல் ஆரம்பித்து.... இலக்கம் 2ஐ வந்தடைய வேண்டும் தடங்கல் ஏற்படாமல் நீங்கள் அடைய வேண்டிய இடத்திற்குச் செல்லுங்கள் பார்க்கலாம்.




## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **17.03.2001**.

வர்ணம் தீட்டும் போட்டி இல: **386**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 383

**பரிசுக்குரியவர்:**
எஸ்.வினோதரன்,
விபுலானந்தா த.மகா வித்தியாலயம், கொழும்பு-09.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| நஸ்லியா, தெலியாகொன்ன, குருநாகல. | என். தனுஷன், புனித அந்தோனியார் சர்வதேச கல்லூரி, வத்தளை. |
| ப. தனுஜா, கண்டி வீதி, வவுனியா. | பாத்திமா ஹஸ்னா சாபி, விகாரமாகா தேவி பா.ம.வித்தியாலயம், கண்டி. |
| எம். றிபாஸ், மொஹித்தீன் தைக்கா வீதி, காத்தான்குடி-04. | எ.ஃப். நஸ்மிலா நிஸாம், தமிழ் மகா வித்தியாலயம் (தே.பாட), பசறை. |
| சு. சத்தியதர்ஷன், சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம், பதுளை. | க. டினோஷன், இக்கோல் ஆங்கிலப் பாடசாலை, திகன. |
| எல். மயூரி, தம்பேதென்ன த.வி., அப்புத்தளை. | இ. ரெனுஜா மிசேல், அளுத்மாவத்தை வீதி, கொழும்பு-15. |

## ஜனாதிபதிகள்

அமெரிக்காவில் இதுவரை 42 ஜனாதிபதிகள் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றனர். அவர்கள் பற்றிய விவரம் வருமாறு

| பெயர் | வருடம் |
|---|---|
| 1. ஜோர்ஜ் வோஷிங்டன் | 1789 |
| 2. ஜோன் அடம்ஸ் | 1797 |
| 3. தோமஸ் ஜெபர்ஸின் | 1801 |
| 4. ஜேம்ஸ் மடிசன் | 1809 |
| 5. ஜேம்ஸ் மன்றோ | 1809 |
| 6. ஜோன் குயின்ஸி அடம்ஸ் | 1825 |
| 7. அன்ட்ரு ஜக்ஸன் | 1829 |
| 8. மார்டின் வான்பரேன் | 1837 |
| 9. வில்லியம் ஹரிஸன் | 1841 |
| 10. ஜோன் டைலர் | 1841 |
| 11. ஜேம்ஸ் நொக்ஸ்போல்க் | 1845 |
| 12. சச்ரி பில்மோர் | 1849 |
| 13. மில்லார்ட் பில்மோர் | 1850 |
| 14. பிராங்ளின் பியர்ஸ் | 1853 |
| 15. ஜேம்ஸ் புச்சனஸ் | 1857 |
| 16. ஆபிரகாம் லிங்கன் | 1861 |
| 17. அன்ட்ரு ஜக்ஸன் | 1865 |
| 18. யுலிசஸ் சிம்ஸன் | 1869 |
| 19. ருதர் போர்ட் பிர்கார்ட் | 1877 |
| 20. ஜேம்ஸ் ஆபிரகாம் | 1881 |
| 21. செஸ்டர் அலன் ஆதர் | 1881 |
| 22. குரோவர் கிளீவ்லாண்ட் | 1885 |
| 23. பெஞ்சமின் ஹரிஸன் | 1889 |
| 24. குரோவர் கிளீவ்லாண்ட் | 1893 |
| 25. வில்லியம் மெக்கின்லி | 1897 |
| 26. தியோடர் ரூஸ்வெல்ட் | 1901 |
| 27. வில்லியம் ஹவர்ட் | 1909 |
| 28. வுட்ரோ வில்சன் | 1913 |
| 29. வரென் ஹார்டிங் | 1921 |
| 30. கல்வின் கூலிட்ஜ் | 1923 |
| 31. ஹெர்பார்ட் கிளார்க் | 1929 |
| 32. பிராங்ளின் ரூஸ்வெல்ட் | 1933 |
| 33. ஹரி ட்ரூமன் | 1945 |
| 34. டுவைட் ஜோன்சன் | 1953 |
| 35. ஜோன் கெனடி | 1961 |
| 36. லிண்டன் ஜோன்சன் | 1963 |
| 37. ரிச்சர்ட் நிக்ஸன் | 1969 |
| 38. ஜெரால்ட் போர்ட் | 1974 |
| 39. ஜிம்மி கார்ட்டர் | 1977 |
| 40. ரொனால்ட் ரீகன் | 1981 |
| 41. ஜோர்ஜ் புஷ் | 1989 |
| 42. பில் கிளின்ரன் | 1993 |
| 43. வில்லியம் புஷ் | 2001 |

## வினோத உயிரினங்கள்



கடல் வாழ் உயிரினமான ஒக்டோ பஸ்ஸிறகு 3 இதயங்கள் உள்ளன.



சாதாரணமாக ஊர்ந்து செல்லும் எறும்புகளுக்கு 5 மூக்குகள் உள்ளன.

மனிதர்களுக்கு நாக்கில் மட்டும் தான் சுவை அரும்புகள் உள்ளன. ஆனால் மீன்களுக்கு உடல் முழுவதும் சுவை அரும்புகள் உள்ளன.



## துறவியர் மடம்



ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான எத்தியோப்பியாவில் 'ஆடுவா' என்ற இடம் உள்ளது. இங்கு ஒரு துறவியர் மடம் உள்ளது. இந்த மடம் உயர்ந்த செங்குத்தான பாறையின் மேல் கட்டப்பட்டுள்ளது.

இந்த மடத்திற்குச் செல்வதற்குப் படிகளோ, பாதைகளோ கிடையாது. மடத்தின் ஊழியர்கள் பாறையின் மேலிருந்து நீளமான கயிறு ஒன்றை இறக்குவார்கள்.

கீழிருப்பவர்கள் கயிற்றைப் பிடித்துக் கொள்ள, மேலிருக்கும் ஊழியர்கள் கயிற்றை இழுத்து, அவரை மேலே கொண்டு செல்வார்கள். மேலே இருப்பவர்கள் கீழே இறங்குவதும் இந்தக் கயிறு வழியாகத்தான்.

# நிழல் கொலைகள்

01



ஊட்டி கடுங்குளிர் பற்களைக் கிடுகிடுக்க வைத்தது.

புரொடக்ஷன் மானேஜர் தர்மா வழக்கம் போல முதலில் எழுந்திருக்க வேண்டும். கடிகாரம் சரியாய் மூன்று மணிக்கே அடித்தது.

எழுந்தவன் சுறுசுறுப்பானான்.

அறையில் உடன் படுத்திருந்த இரண்டு அஸிஸ்டெண்ட் டைரக்டர்களையும் எழுப்பி விட்டான்.

"குணா, மணி! எழுந்திருங்க... டைரக்டர் அஞ்சு மணிக்கு ஸ்பாட்ல இருக்கணும்னு சொன்னார், மறந்துட்டீங்களா?"

"தர்மா... ஹேங்க் ஓவர் தலையை கனக்குது!"-குணா மறுபடியும் கம்பளியை இழுத்து தலைவரை மூடிக்கொண்டு படுத்தான்.

மணி, "குணா.. எழுந்திரு நேற்று நைட்டே டைரக்டர் டென்ஷனா பேக்கப் சொன்னாரு, சீக்கிரம் கிளம்பற வழியைப் பாரு-" என்றவன் தர்மா பக்கம் திரும்பினான்.

"தர்மா! ஸில்வர் இன்னுக்கு போய் சுபாவை எழுப்பு-நிவாஷ் அதே அறையில் இருந்தாலும் இருப்பான்... காஸ்ட்யூம் நைட்டே அவங்க ரூம்ல வச்சாச்சு... ஸ்பாட்டுக்கு இங்கேயிருந்து போய்ச் சேரவே ஒரு மணி நேரம் ஆகும். மேக்கப்மேனையும் கிளப்பிட்டுப் போ-" என்றான்.

"எல்லாம் நான் பார்த்துக்கறேன். நீங்க முதல்ல கிளம்பற வழியைப் பாருங்க... நேத்து மாதிரி கிளாப் போர்டை விட்டுட்டு வந்துடாதீங்க..."

குரங்கு குல்லாவை மாட்டிக் கொண்ட தர்மா அறையை விட்டு வெளியே வந்தான். புரொடக்ஷன் அஸிஸ்டெண்ட்ஸ் இருந்த அறை, காமிரா அஸிஸ்டெண்ட்ஸ் என ஒவ்வொரு அறையாகத் தட்டித் தட்டி எழுப்ப மணி மூன்றே காலாகி விட்டது.

ஸ்வெட்டர், குல்லா இரண்டையும் மீறி, குளிர் கடுமையாய்த் தாக்கியது. புரொடெக்ஷன் அசிஸ்டெண்டை இழுத்துக் கொண்டு கிச்சனுக்குப் போனான்.

காபி தயாராகிக் கொண்டிருந்தது.

கிச்சனுக்குள் அசிஸ்டெண்டை நிறுத்தி, "காபி போட்டதும் முதல்ல எனக்குக் கொடு. அப்புறம் எல்லோருக்கும் கொண்டு போ..."- சொன்னவன் வெளியில் வந்தான்.

சட்டைப் பையிலிருந்த ஃபில்டர் வில்ஸ் பாக்கெட்டை எடுத்தான். சிகரெட் ஒன்றை எடுத்து வாயில் பொருத்தி தீப்பெட்டியிலிருந்து குச்சி ஒன்றையெடுத்து, உரசி கொளுத்தி பற்ற வைத்துப் புகை உறிஞ்சினான்.

புகையை உள்ளிழுத்து புகைவிட குளிருக்கு இதமாய் இருந்தது. இரண்டு வார ஷெட்டியூல். ஒரு பாடல், சில காட்சிகள். இன்று இரண்டாவது நாள். டைரக்டர் பால்ராஜ் சூப்பர் ஹிட் இயக்குநர்.

அவர் இதுவரை எடுத்த நான்கு படங்களுமே சில்வர் ஜூப்ளி படங்கள். அவர் கதையில் ஊட்டி நிச்சயமாய் இடம்பெறும். ஒவ்வொரு முறையும் புதுப்புது லொகேஷனைத் தேடிப் பிடிப்பார். புதுப்புது கோணத்தில் ஊட்டி திகட்டாமல்...

நேற்றுப் போன அதே இடத்தில் தான் இன்றும் ஷூட்டிங். மைசூர் ரோடில் ஒரு லொகேஷன் பிடித்திருந்தார். முழுக்க முழுக்க யூகலிப்ட்ஸ் மரங்கள். உள்ளே புகுந்து போனால் சரீரென்று சரிந்த பள்ளத் தாக்கு. எந்தப் படத்திலுமே இந்த லொகேஷன் இடம் பெற்றதில்லை.

பெண் வயசுக்கு வந்ததும் மஞ்சள் நீராட்டுப் போல, படத்துக்குப் படம் ஊட்டி வந்து வழக்கமான கார்டன், லேக் என காமிராவுக்குள் சுருட்டிப் போகாமல் தேடித் தேடி லொகேஷன் பிடித்து... இந்த சின்ஸியாரிட்டியே பால்ராஜின் வெற்றிக்குக் காரணமாய் இருக்கலாம்.

தர்மா யோசித்து நின்றிருந்த வேளையில் அஸிஸ்டெண்ட் காபியோடு வந்தான்.

காபி தொண்டையில் இறங்கியதும் இதமாக இருந்தது.

"எல்லோருக்கும் கொண்டு கொடு... நான் போய் டைரக்டர், சுபா, நிவாஷ் எல்லாரையும் எழுப்பிவிட்டு வர்றேன்..."

வெளியே வந்தவன் 'சில்வர் இன்'னை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

காரிலேயே போகலாம். டிரைவர் பயல் இந்த வேளையில் 'டொர்டொர்' ரென்று கிளப்பி... அதற்குள் போய் திரும்பி விடலாம்.

'சில்வர் இன்' கேட்டருகில் கூண்டுக்குள் இருந்த செக்யூரிட்டி இருட்டிலும் தர்மாவைப் பார்த்து சிநேகமாய் சிரித்து 'கேட்'டைத் திறந்து விட்டான்.

பில்டிங்கினுள் நுழையுமுன்பே தர்மாவின் பார்வை அவனையும் அறியாமல் இரண்டாவது மாடிப் பக்கம் போனது.

டைரக்டரின் அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

எழுந்து விட்டார்.

முதல் மாடிப் பக்கம் பார்த்தான்.

நிவாஷின் அறையும், சுபாவின் அறையும் இருட்டாய்...

பக்கத்து பக்கத்து அறை.

நிவாஷ் பொம்பளை விஷயத்தில் படு வீக். ஒரு முறை ஆளே இல்லாத போது ஒரு 'டச் அப்' கேர்ளை 'டச்' செய்து விட்டான்.

சுபா புதுமுகம். அவளுடன் பள்ளியொன்றில் டீச்சராய் வேலை பார்க்கும் அம்மாக்காரி.

ராத்திரி என்ன ஆச்சோ?

நிவாஷ் சும்மா இருந்திருப்பானா?

யோசித்தபடியே லிப்டுக்குள் நுழைந்தான்.

லிப்ட் மேலே போனது.

இரண்டாவது மாடியில் வெளியே வந்தான்.

212-ஐ நோக்கி நடந்தான்.

காலிங் பெல்லை அழுத்த-

'யெஸ்' என்றபடியே டைரக்டர் கதவைத் திறந்தார். குளித்து தயாராய் இருந்தார்.

"மார்னிங் சார்... எழுந்துட்டீங்களான்னு பார்க்க வந்தேன். அவங்களையும் எழுப்பிடறேன். ஸேம் லொகேஷன்தானே சார்?"

"அதே லொகேஷன்தான்.. நாலே முக்காலுக்கு எல்லோரும் ஸ்பாட்ல்ல இருக்கணும்.. குணா, மணி எழுந்தாச்சா...?"

"எழுந்தாச்சு சார், கிளம்பிட்டிருக்காங்க!"

தர்மா பேசிக் கொண்டிருக்கும் போதே 'பாட்'டில் காப்பி வந்தது.

"தர்மா! காபி..."

"நீங்க சாப்பிடுங்க சார்... நான் இப்பத்தான் சாப்பிட்டேன், அவங்களையும் கிளப்பணும்..."

படியில் முதல்தளம் வந்தான்.

படித் திருப்பத்திலேயே நிவாஷின் அறை. காலிங்பெல்லை அழுத்தினான்.

பதிலில்லை.

மறுபடியும் அழுத்தினான்.

'ஊம்' என்றான் நிவாஷ். உள்ளே விளக்கைப் போடும் சப்தம்.

சாவித் துவாரம் வழியே வெளிச்சம் தெரிந்தது.

கதவு திறக்க-

அரை டிராயரில் நிவாஷ்

"குட்மார்னிங் சார்:"

"தர்மா! ஒரு தடவையாவது உன்னை மறந்து தூங்கிட மாட்டாயா?

"அதெப்படி சார்.. கடமையாச்சே..."-தர்மா சிரிக்க

நிவாஷ், "சரி சரி.. நான் படம் பண்ணா நீதான் புரொடக்ஷன்.. அந்தப் புது பாப்பாவையும் எழுப்பிட்டு போ!"-என்றான் சிரித்துக் கொண்டே.

தர்மா சுபாவின் அறை வந்து, காலிங் பெல்லை அழுத்தினான்.

பதிலில்லை.

மறுபடியும் அழுத்தினான்.

'டிங் டொடங்...' என்றது பெல் சப்தம்.

உள்ளே சலனமேயில்லை.

மறுபடியும் அழுத்தினான்.

பதிலில்லை.

'சுப்'பென்று பயப் பந்து ஒன்று தர்மாவின் வயிற்றில் சுருண்டு கொண்டது.

தர்மா நான்காவது முறையாக மணியை அழுத்தினான்.

மணி சப்தம் மட்டும் கேட்டது.

தர்மாவுக்கு இனம் புரியாத பயம் எழுந்தது. நேரே டைரக்டரின் அறைக்கு ஓடினான்.

பதட்டத்துடன் 'டப்டப்'பென்று அவர் அறைக் கதவைத் தட்டினான்.

பொளேரென்று கதவைத் திறந்தார்.

அந்தக் குளிரிலும் வேர்க்க விறுவிறுக்க நின்றிருந்த தர்மாவைப் பார்த்தார்.

"என்னப்பா, என்னாச்சு..?"

"சார் நிவாஷ் சாரை எழுப்பி விட்டேன்.. சுபா அறைக் கதவைத் திறக்கவேயில்லை... ரொம்ப பயமா இருக்கு..."- என்றான் பதட்டத்துடன்.

பால்ராஜ், தர்மாவுடன் ஓடிவர, மறுபடியும் மணியை அழுத்தினான்.

பதிலில்லை.

"தர்மா, கதவைத் தட்டிப் பார்த்தியா.. கதவு பூட்டித்தான் இருக்கா...? -என்றபடியே பால்ராஜ் நாப்பில் கை வைத்து அழுத்த, கதவு திறந்து கொண்டது.

தர்மா சுவரில் கை வைத்து தடவி ஸ்விட்ச் போர்டைக் கண்டுபிடித்து வரிசையாய் எல்லா ஸ்விட்சையும் போட-

விளக்கு எரியவில்லை.

பால்ராஜிற்குத் 'திக்' என்றிருந்தது.

எல்லா அறைகளிலும் விளக்கு எரிந்து கொண்டிருக்க-

'இங்கு மட்டும் விளக்கில்லை' பால்ராஜ் யோசித்தவாறே, "தர்மா, பெட்டி இருந்தா கொளுத்து!" என்றார்.

தர்மா பைக்குள்ளிருந்த தீப்பெட்டியை எடுத்து உரச-

**சுப்ரஜா**

அறைக்குள் ஒளிபரவ-

இரண்டு பேருக்கும் 'திக்'கென்றிருந்தது.

தர்மா நகர்ந்து-

பாத்ரூமுக்குள் போய் அணைந்து போன குச்சியைத் தூக்கியெறிந்து இன்னொரு தீக்குச்சியை கொளுத்திப் பார்க்க-

பாத்ரூமும் காலி!

"சார் இங்கயும் இல்லே சார்-"

"அட கடவுளே!" - அதிர்ந்து போனார் பால்ராஜ்.

தர்மா ஓடிப்போய் ஓட்டல் மானேஜரை அழைத்து வர-

ஹோட்டல் பரபரப்பானது.

சுபா தங்க வைக்கப்பட்டிருந்த அறையின் ஸ்விட்ச் போர்டைப் பணியாளர் ஆராய-

வயர்கள் பிடுங்கி விடப்பட்டிருந்தன.

**தொடர்ந்து வரும்**

# உலர்ந்த நினைவுகள்

*சுமார் 20 வருடங்களுக்கு முன்பு நகைச்சுவை நடிகர் கவுண்டமணி தமிழக இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டி இது.*

*நகைச்சுவை நடிப்பில் கொஞ்சம் பிரபலமாகி சில ஆயிரங்கள் சம்பளமாகப் பெற்ற கவுண்டமணி, சில வருடங்களுக்கு பின் நாளொன்றுக்கு சில இலட்சங்கள் சம்பளமாகப் பெற்றார்.*

*சினிமாவுக்கு வரு முன் அவர் பட்ட பாடுகளைப் பற்றிச் சொன்ன உலர்ந்த நினைவுகளை நீங்களும் கொஞ்சம் படித்துத் தான் பாருங்களேன்.*

நான் நடித்துக் கொண்டிருந்த பாய்ஸ் கம்பெனி அப்போது ஊட்டி அருகே குன்னூரில் முகாமிட்டிருந்தது. எங்கள் நாடகக் கொட்டகைக்கு எதிரில் ஒரு தியேட்டர். அதில் அன்று 'நாடோடி மன்னன்' படம் ரிலீஸ். கூட்டம் அலை மோதியது. ரசிகர்களின் 'க்யூ' எங்களது நாடக கொட்டகை வாசல் வரைக்கும் நீண்டது. அன்று 'நால்வர்' நாடகம். பார்க்க வந்த ரசிகர்களின் எண்ணிக்கை ஆறு மட்டுமே. எங்களுக்கு பெருத்த ஏமாற்றம்.

மறுநாள் ஆறு, மூன்றாகி விட்டது. தொடர்ந்து பத்து நாட்கள் வெவ்வேறு நாடகங்கள். அதே மூன்று பேர்கள் தான் எங்களது ரசிகர்கள்.

"நீங்க மூணு பேரு மட்டும் தினசரி தவறாம நாடகம் பார்க்க வர்றீங்களே, ஏன்?" என்று அவர்களைக் கேட்டபோது, "நாங்கள் இந்த ஊர் அமெச்சூர் நடிகர்கள். நீங்க நடிக்கிறதுக்கும், நாங்க நடிக்கிறதுக்கும் என்ன வித்தியாசம்னு பார்க்க வந்தோம்," என்று பதில் வந்தது.

வசூல் இல்லாததால் கம்பெனியில் ரொம்ப வறுமை. காலையிலே பதினோரு மணிக்கு வரக் காபி (பால் இல்லாத காபி) கொடுப்பார்கள். அதை வாங்கிக் குடிக்க ஒரே அடிதடி. ஒவ்வொருவரும் பசியினால் மூன்று கிளாஸ், நான்கு கிளாஸ் குடித்து விட்டு வயிற்றுப் போக்கினால் அவதிப்படுவார்கள். சாப்பாட்டைப் பார்த்து ரொம்ப நாட்களாகிவிட்டது.

நாடகக் கம்பெனியை வேறு ஊருக்கு மாற்றலாமென்றால் அதற்குக் கூட பணமில்லை. என் உடம்பு மெலிந்து, வெளுத்துப் போய் தலை மட்டும் பெரிதாக இருந்தது. ஏறக்குறைய கம்பெனியிலுள்ள எல்லோரது நிலையும் இதுதான்.

ராஜமாணிக்கம் என்று எனக்கு ஒரு நண்பர். அவர் ஒரு பாடகர். நடிக்கவும் செய்வார். அவருக்கு போர்டு எழுதும் வேலை ஒரு சைடு பிசினஸ். அதன் மூலம் ஒன்றிரண்டு ரூபாய் அவ்வப்போது கிடைக்கும். அதை வைத்து மொத்த கம்பனி பசியையும் தீர்க்க முடியுமா?

ஒரு நாள் ராஜமாணிக்கம் இரண்டு ரூபாய் சம்பாதித்து அதில் பொட்டுக் கடலை, வெல்லம் வாங்கி வைத்துக் கொண்டு என்னைக் கூப்பிட்டார். இரண்டு பேரும் ஒதுக்குப்புறமாக ஒரு இடத்தைப் பார்த்து அங்கே உட்கார்ந்து பொட்டலத்தைப் பிரித்தோம். அந்த சமயம் பார்த்து தானா உள்ளூர் இளவட்டங்கள் சிலர் அந்தப் பக்கம் வரவேண்டும். வெட்கத்தில் பிரித்த பொட்டலத்தை அப்படியே தூக்கிக் கொண்டு ஓடி வந்ததால் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை.

மாலை நேரங்களில் நானும், எனது சகநடிக நண்பரான பீலிசிவமும் மலைச் சரிவிலே உட்கார்ந்திருப்போம். அப்போது பெண்கள் தலையிலே கூடை கூடையாக சாத்துக்குடி பழங்களை சுமந்து கொண்டு போவார்கள். பழம் தவறிக் கீழே விழாதா என்று நானும், பீலியும் கொட்டாவி விட்டுக் கொண்டு காத்திருப்போம். விழவே விழாது.

இனியும் உயிரோடு இருக்க வேண்டுமென்றால் ஊரைப் பார்க்கப் போக வேண்டியது தான் என்ற நிலைக்கு ஆளாகி விட்டேன். ஊருக்குப் போவதென்றால் ஏழெட்டு ரூபாயாவது பஸ்சுக்கு வேண்டுமே. அதற்கு என்ன செய்வது என்ற குழப்பத்தில் இருந்த போது, ரத்ததானம் செய்தால் அரசு மருத்துவமனையில் ஏழரை ரூபாய் பணம் கொடுப்பதாக யாரோ சொன்னது நினைவில் வந்தது. உடனே ஓடினேன்.

'ரத்தம் கொடுக்கிறதுக்காக வந்திருக்கேன்' என்றதும் டாக்டர் என்னை ஏற இறங்கப் பார்த்தார். எனக்கே ரத்தம் தேவைப்படுகிற நிலைமை. அதனால் டாக்டர் ரத்தம் எடுக்க சம்மதிக்கவில்லை. எப்படியோ கெஞ்சி என் கஷ்ட நிலையை அவருக்கு உணர்த்தி ரத்தத்தைக் கொடுத்தேன்.



நான்கு பிஸ்கட்டும், ஒரு கப் டீயும் கொடுத்தனர். சாப்பிட்டு விட்டு பணத்தை வாங்கிக் கொண்டு ஊர் போய்ச் சேர்ந்தேன்.

குன்னூர் அனுபவத்தில் இனிமே இந்த நாடக ஆசையே வேண்டாமென்று முடிவு செய்தேன். நான் முடிவெடுத்தால் போதுமா? நாடகக் கம்பெனிக்காரர்கள் விட்டால்தானே. சில நாட்களில் வேறொரு நாடகக் குழுவினர் என்னைத் தேடி வந்தனர். "பட்டுக்கோட்டையில் நாடகம். அவசியம் வர வேண்டும்," என்று வற்புறுத்தினார்கள். நான் குன்னூரில் பட்டினி கிடந்த விஷயத்தைச்சொல்லி மறுத்தேன். அப்படியெல்லாம் நடக்காது என்று அவர்கள் உறுதியளித்தார்கள். வீட்டுச் சாப்பாடு சாப்பிட்டு உடலில் கொஞ்சம் ரத்தம் ஊறியதும் பழையபடி நாடக ஆசை துளிர் விட ஆரம்பித்தது. வருவதாக ஒத்துக்கொண்டேன்.

கையில் இருந்த பணத்தை எடுத்துக் கொண்டு பட்டுக்கோட்டைக்கு பஸ் ஏறிய பிறகு தான் தெரிந்தது. பஸ் டிக்கெட்டிற்கு பணம் போதாதென்பது. நான் கொடுத்த காசுக்கு பட்டுக்கோட்டைக்கு பதினைந்து மைல் முன்னதாக இறக்கி விடப்பட்டேன். கையில் துணிப்பையோடு நடந்தேன்.

மூன்று மைல் நடந்திருப்பேன். அதற்கு மேல் நடக்க முடியவில்லை. ஒரு டீக்கடைக்கு போய் அந்த ஊரிலிருந்து பட்டுக்கோட்டைக்கு எவ்வளவு பஸ் சார்ஜ் என்று கேட்டேன். இரண்டு ரூபாய் என்று சொன்னார்கள்.

பையிலிருந்து ஒரு வேட்டி சட்டையை எடுத்து டீக்கடைக்காரரிடம் மூன்றரை ரூபாய்க்கு விற்றேன். பட்டுக்கோட்டைக்கு பஸ் ஏறினேன்.

கவுண்டமணி ஏதோ சுலபமாக சினிமாவுக்கு வந்து விட்டதாக நினைக்காதீர்கள். ஜீவ மரணப் போராட்டம் நடத்தி வந்திருக்கேன்..

# ஈழத்தின் இணையற்ற எழுத்துச்சிற்பி.... எஸ்.டி.சிவநாயகம் 45

## எஸ்.டி.எஸ். கண்ட பாரதி

**சவர்**மையான கண்கள். நடு மூக்கில் இறங்கி நிற்கும் கண்ணாடி. ஒரு கால் ஊனம். அதனால் தாண்டு நடை. நகைச் சுவை கலந்த அளவான பேச்சு. அற்புத மான கைவண்ணம்.

அவருடைய சிஷ்யர் சுப்பையாவுக்கு அப்போது 18 அல்லது 20 வயதுதான் இருக்கும்.

இருவரும் அந்த நாடகக் கம்பனியில் ஒரு தனி யூனிட், ஆர்ட் டிபார்ட்மெண்டுக்கு அவர்கள் பொறுப்பு. பகலில் ஆர்ட் வேர்க். இரவில் ஃபோட்டோகிராஃபி. இரண்டு தொழில்கள் பார்த்தார்கள்.

நாடகக் கம்பனியில் ஆர்ட் டிபார்ட் மெண்ட் என்றால் அதில் என்ன வேலை என்று கேட்கிறீர்களா?

றோல் சீன், ட்ராப் சீன், சைட்சீன், தொங்கல் முதலியன பெயிண்ட் பண்ணிக் கொடுப்பதோடு இன்னும் ஒரு முக்கிய பணி இவர்களுக்கு இருந்தது.

அந்தக் காலத்தில் 'வால் போஸ்டர்கள்' அச்சிட்டு ஒட்டும் வழக்கம் இருக்கவில்லை. 'ஹாண்ட்பில்' மட்டும் அச்சிட்டு, பாண்ட் வாத்தியம் முழங்க, மாட்டு வண்டியில் ஊர் முழுவதும் சென்று விநியோகிப்பார் கள். இதை 'பிட் நோட்டீஸ் (Bit notice) கொடுப்பது என்று சொல்லிக் கொள்வார் கள்.

மற்றப்படி இருபது, முப்பது விளம்பரத் தட்டிகள் வரைந்து டவுனுக்குள் உள்ள ஹோட்டல்கள். தேனீர் கடைகள், பாட சாலைகள் முன்னால் வைப்பார்கள். தட்டி கள் என்று சொன்னால் இழப்பமாக நினைத்துவிடக்கூடாது. அவை ஒவ்வொன் றும் கலை அம்சம் கொண்டவையாகக் கண்ணையும் கருத்தையும் கவரும்படியான வண்ண ஓவியங்களைக் கொண்டவையாக இருக்கும். இந்தத் தட்டிகளை இடத்துக்கு இடம் நாளுக்கு நாள் மாற்றி மாற்றி வைப் பார்கள் மூன்றடி அகலம், நான்கு அடி உயரத்தில் பிரேம் செய்து, அதில் 'காரிக் கன்' சீலையைச் சுருக்கமில்லாமல் இறுக்க மாக அடித்து, 'பாக்கிரவுண்ட்' கலவை பூசிக் காயவைத்து, அதன்மீது தான் படம் தீட்டுவார்கள், நாடகத்தின் பெயர் எழுது வார்கள்,

ஒவ்வொரு புதிய நாடகம் போடும் போதும் இந்த விளம்பரத் தட்டிகள் புதிது புதிதாக வரையப்படும். இவற்றை வரையும் வேலை ஓவியர் கொண்டைய ராஜுவிடம், அவர் உதவியாளர் திரு.சுப்பையாவிடமும் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

ஒரு தட்டியில் பத்து நிமிடத்தில் பென்சில் ஸ்கெச் போட்டுக் கொடுப்பார் குரு கொண்டையா. இரண்டு மணித்தி யாலத்துக்குள் உயிரோவியமான படத்தை யும் வரைந்து எழுத்துக்களையும் எழுதிக் கொடுப்பார் சிஷ்யர் சுப்பையா.

ஸ்டேஜ்ஜின் பின்னால் இறக்கப்பட்டி ருந்த ஒரு பத்திக்குள் தான் இந்த ஓவியப் படைப்புகள் உருப்பெற்றன.

அத்தோடு இன்னொரு காரியமும் அங்கு நடைபெற்றது. புகைப்படங்கள் கழுவிக் காயவைத்து கிளேஸ் செய்யப் பட்டன. வண்ணந் தீட்டப்பட்டன.

ஓவியர் கொண்டையா ராஜுபோகும் இடங்களுக்கெல்லாம் ஒரு 'கபினெட் சைஸ் பீல்ட் கமரா'வையும்கூட எடுத்துச் சென் றார். யாரா வது படம் பிடிக்க விரும்பினால், அழகாக வரையப்பட்ட மாட மாளிகை, கூட பீடங்கள், வளைந்த படிக்கட்டுகள், பூந்தொட்டிகள், நந்தவனக் காட்சி, இவை கொண்ட 'பாக்கிரவுண்ட்' படுதா போட்டுப்



படம் பிடித்து, அற்புதமான பிரின்ட் செய்து கலர் தீட்டிக் கொடுத்து விடுவார் அவர். போட்டோ கலை அவருக்கும் சுப்பையாவுக் கும் மேலதிக வருமானம் கொடுத்து வந்தது.

கல்லூரியிலிருந்து பிற்பகல் 3.00 மணிக்கு வீடு திரும்பும் நான் 6.00 மணிவரை அங்கு ஒதுங்கி நின்று, வடிவமும் உயிரும் பெறும் ஓவியப் படைப்புகளையும், போட்டோ கலை வேலைகளையும் மிக அக்கறையோடு கவனிப்பேன்.

இப்படி முதல் மூன்று நான்கு நாள் அங்கு ஒதுங்கி நின்று கூர்ந்து அவதானிப் பதை ஓவியர் கொண்டைய ராஜு கவனித்துக் கொண்டு வந்தார். என்னைத் துரத்தி விடவில்லை. மேலும் இரண்டு மூன்று தினங்கள் கழிந்ததும் அவராகவே என்னோடு பேச்சுக் கொடுத்தார். நானும் மிகவும் பணிவோடும் அடக்கத் தோடும் அச்சத்தோடும் நடந்து கொண்டேன். என்னை அவருக்குப் பிடித்து விட்டது. ஓவியக் கலையிலும், போட்டோ கலையிலும் எனக்கு ஆர்வமும் ஈடுபாடும் இருப்பதைக் கண்டு அவர்கள் மகிழ்ச்சியே கொண்டார். கலைத் துறையில் என்னை 'ஆட்கொண் டையா' ஆகிவிட்டார் அவர்.

என்னொடு கூடச் சேர்ந்து நின்று ஆரம்பத்தில் திரு.கொண்டையர் ராஜுவின் ஓவியத் திறமையை இரசித்தவர்கள் இருவர். இருவரும் என் கல்லூரி நண்பர்களாயிருந்

தொகுத்தளிப்பவர்
இரா.பத்மநாதன்

தனர். ஒருவர் கே.சிவப்பிரகாசம் என்பவர். யாழ்ப்பாணம் நெல்லியடியைச் சேர்ந்தவர். இவர் பின்னர் பாடசாலை ஆசிரியரானார். விசர் நாய் கடித்து அகாலமரணம் அடைந்து விட்டார். மற்றவர் கே.அருளம்பலம் என்ப வர், இவர் பின்னர் மெடிகல் கல்லூரியில் சேர்ந்து டாக்டராகி அரசாங்கத்தில் பணி புரிந்து, இளைப்பாறி இப்போது பருத்தித் துறை வியாபாரி மூலையில் தனிப் 'பிராக் டிஸ்' நடத்தி வருகிறார்,

இந்த இருவருக்கும் இரண்டு மூன்று தினங்களில் ஓவியம் சலித்து விட்டது. திரு. அருளம்பலம் மட்டும் என்னோடு சேர்ந்து கொஞ்சக் காலம் 'ஃபோட்டோகிராஃபி' செய்து கொண்டிருந்தார்.

ஓவியக் கலை, நாடகத் துறை ஆகிய வற்றில் எனக்கு இயற்கையாகவே சிறுவயதி லிருந்து நாட்டம் இருந்தது. ஆனால் இது வேட்கையாக மாறியது மட்டக்களப்பில் தான். ஓவியர் கொண்டைய ராஜு அவர்க ளைச் சந்திக்கும் முன்னரே இந்தப் பரிதாப நிலை எனக்கு ஏற்பட்டுவிட்டது.

கல்லூரி விடுமுறை நாட்களில் நான் மட்டக்களப்புக்குச் செல்வேன். என் சிறிய தாயார் வீட்டில் தங்குவேன்.

ஒருநாள் பக்கத்து வீட்டில் அற்புத மான ஹார்மோனிய வாத்தியம் அபூர்வமாக ஒலித்துக் கொண்டிருந்தது. இந்தக் கானப் பிரவாகம் என் காதில் விழுந்ததுதான் தாமதம் அங்கு ஓடோடிச் சென்றேன்.

ஒரு கூட்டம், என்னைவிட வயதில் மூத்த வாலிபர்கள் அங்கு காணப்பட்டார் கள். ஏதோ ஒரு நாடகத்துக்கான ஒத்திகை நடந்து கொண்டிருந்தது. பிற்காலத்தில் மட்டக்களப்பின் பிரபல தங்க வியாபாரியாக வும் நகை மாளிகை அதிபராகவும் விளங்கிய திரு.கே.வேதாரணியம் ஆச்சாரி அவர்கள் தான் ஹார்மோனியம் வாசித்து, அழகாகப் பாடிக் கொண்டுமிருந்தார். கூட இருந்தவர் கள் நாடக வசனக் 'காப்பி'களைக் கையில் வைத்துக் கொண்டிருந்தனர். இவர்களில் ஒருவரை இன்னும் எனக்கு ஞாபகம் இருக்கிறது. அவர் பெயர் திரு.த.பொன்னம் பலம். திருகோணமலையில் அன்ரி மலே ரியா டிபார்ட்மெண்டில் உயர் அதிகாரியாக வேலை பார்த்து, பின்னர் 'நேவல் பேஸில்' பணியாற்றி இப்போது இளப்பாறியிருக்கி றார்.

இளைப்பாறியிருக்கிறார் என்று நான் சொல்வது தவறு. ஏனென்றால் திரு.பொன் னம்பலம் அவர்கள் இளைப்பாறக் கூடியவர் அல்லர். அவர் எப்போதும் 'அக்டிவ்' ஆகவே இருப்பார். இப்போதும் உவர்மலை என்ற இடத்தில் ஓர் ஆலய நிர்வாகத்தைத் தன் தலையில் மீது தூக்கிப் போட்டுக் கொண்டு ஓய்வு ஒழிச்சலின்றி உழைத்து வருகிறார்.

அது சரி, மட்டக்களப்பில் அந்த நாடக ஒத்திகை நடைபெற்றுக் கொண்டி ருந்த வீடு யாருடையது?

திரு.விநாயகமூர்த்தி என்று ஒரு வாலிபர்தான் அப்போது அந்த வீட்டில் வாசம் செய்து கொண்டிருந்தார்.

யார் அந்த விநாயகமூர்த்தி? இன்று, கல்முனையில், பிரசித்த நொத்தாரிஸ் ஆகவும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களில் ஒருவராகவும் விளங்குகி றாரே திரு.பி.வி.கந்தையா என்று ஒருவர், அவரேதான்.

அவருடைய முழுப் பெயரான பொன் னையா விநாயகமூர்த்தி கந்தையா என்பது தான் பி.வி. கந்தையா ஆகியிருக்கிறது.

ஆனால், அந்த நேரத்தில் அவர் விநாயகமூர்த்தி என்றே அழைக்கப்பட்டார்.

திரு.விநாயகமூர்த்தி அவர்கள் அந் நேரம் ஆசிரியர் கலாசாலையில் ஓர் ஆசிரிய ராகப் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தார்.

அப்போது அவருக்கு மூன்று வித 'ரோகங்கள்' பீடித்திருந்தன. ஒன்று, ஓவியம் வரைவது. இரண்டு நாடகம் நடிப்பது. மூன்று தேகப்பயிற்சி செய்வது. தேகப் பயிற்சி செய்து, செய்து அவர் ஓர் ஆணழ கனாக விளங்கினார். ஸஸ்பெண்டைரப் போட்டுக் கொண்டு அவர் ஒரு விதமாக விறைத்து நின்றார் என்றால், தேகம் முழுவதும் திட்டி திட்டியாக, குண்டு குண் டாகச் சதைப் பிண்டங்கள் திரண்டு கொள் ளும். பார்ப்பதற்கு அதிசயமாக இருக்கும். சாகஸங்கள் புரியும் ஒரு ஸாண்டோவாக ஆக வேண்டும் என்ற ஆசை அவருக்கு அந்நேரம் இருந்திருக்கும் போலும்.

நானோ ஒரு நெத்தலிப் பயில்வானாக இருந்தேன். அவரைப் போல என் தேகத் தையும் திரட்ட உருட்ட முடியாதா என்று நான் எனக்குள் ஆசைப்பட்டுக் கொண் டிருந்தேன்.

ஒரு நாள் அதிகாலையில் நான் அவர் வீட்டுக்குச் சென்று ஜன்னலினூடாக மண்ட பத்துக்குள் எட்டிப் பார்த்தேன். திரு.விநாயக மூர்த்தி இடுப்பில் ஜட்டியோடு, வெறுந்த ரையில், வெறும் மேனியோடு நீட்டி நிமிர்ந்து படுத்திருந்தார்.

இன்னொரு வாலிபர், அவர் நெஞ்சுக்கு



நேரே இந்தப் புறமும், அந்தப் புறமுமாகக் கால்களை வைத்துக் கொண்டு-

ஒரு பெரிய 56 றாத்தல் பீரங்கிக் குண்டு ஒன்றை இரண்டு கையினாலும் தனது தலைக்கு மேலே உயர்த்திக் கொண்டு பயங்கரமாகக் காட்சியளித்தார்.

என்ன நடக்கப் போகிறதோ என்று நான் அதிசயமாகப் பார்த்துக் கொண்டு நின்றேன்.

அந்தப் பேர்வழி, அந்தக் குண்டினைச் சரியாகக் குறி பார்த்து திரு.விநாயகமூர்த்தி யின் வயிற்றின் மேல் 'தொப்'பென்று போட்டார்.

நான் துணுக்குற்றேன். எனக்கு நடுக்கம் எடுத்து விட்டது.

வயிற்றில் விழுந்த குண்டு பட்டுத் தெறித்தது!

இப்படிப் பல தடவை பயங்கரக் 'குண்டு வீச்சு நடைபெற்றது. ஆயினும் திரு.விநாயகமூர்த்தி கிறுங்கவில்லை! அவர் சிரித்துக் கொண்டு எழுந்திருந்தார். பிறகு அந்தப் பீரங்கிக் குண்டினை ஆகாயத்தில் வீசி எறிந்து புஜத்திலும் கழுத்திலும் ஏந்திக் கொண்டார்.

'தேகத்தின் தசைகளைக் குண்டு குண் டாக்குவதற்கு இப்படி வயிற்றிலும் கழுத் திலும் குண்டடிபட வேண்டும் போலிருக்கி றது' என்று நான் நினைத்துக் கொண்டேன்.

அன்று எனக்கு ஏற்பட்ட உள் நடுக்கத் தினால் அந்தத் துறையில் எனக்கு நாட்டமே ஏற்படவில்லை.

திரு.விநாயகமூர்த்தி அவர்கள் மிக அழகாக சித்திரங்கள் தீட்டினார். வாட்டர் கலர் பெயிண்டிங் செய்தார். கூடவே நின்று அவர் எப்படி எப்படியெல்லாம் வரைகிறார், வண்ணம் கலக்கினார், தூரி கையை ஓட்டுகிறார் என்பனவற்றை எல் லாம் கற்றுக் கொண்டேன். அவரைப் போலவே வரையவும் எத்தனித்துக்கொண் டேன்.

ஓவியத்தைப் போலவே, அங்கு நடை பெற்ற நாடக முயற்சிகளும் என்னைக் கவர்ந்தன. வேதாரன்யம் ஆச்சாரி, விநாய மூர்த்தி, பென்னம்பலம் ஆகியோர் சேர்ந்து பல வெற்றி நாடகங்களை மேடயேற்றினார் கள்.

திரு.விநாயமூர்த்தி அவர்கள் விலையு யர்ந்த ஓர்.எச்.எம்.வி.கிராமபோனும் வைத்தி ருந்தார். அருமையான நாதம் தரக்கூடிய கிராமபோன் அது.

நாடகங்கள் 'செட், செட்'டாக் கிராம போன் தட்டுகளில் பதிக்கப்பட்டு வெளிவந்த காலகட்டம் அது. எச்.எம்.வி. கம்பனியும், ஒடியன் கம்பனியும் இந்த நாடக றெக்கோட் செட் வெளியீட்டில் முன்னணியில் நின்றன.

மட்டக்களப்பில் எச்.எம்.வி.கம்பனிக்கு திரு.தம்பிப்பிள்ளைப் பத்தர் என்பவர் ஏஜண்டாக விளங்கினார். அவர் உதவியால் மட்டக்களப்பில் பட்டி தொட்டிகளில் எல் லாம் எச்.எம்.வி. கிராமஃபோனும் றெக்கோட் டுகளும் அபரிமிதமாகப் பரவலாயின. மட்டக்களப்பில் சங்கீதக்கலை வளர்வதற்கு திரு.தம்பிப்பிள்ளைப் பத்தர் ஆற்றிய பணி நினைவு கூரத்தக்கது.

வள்ளி திருமணம், கோவலன், சத்திய வான் சாவித்திரி, தூக்குத் தூக்கி, பாரிஜாதம், பவளக் கொடி, அல்லி அர்ஜுனா, குலே பகாவலி, நல்லதங்காள், மயான காண்டம், லவ-குச, பக்த குசேலர் என்பன போன்ற நாடங்கள் பாட்டும் வசனமுமாக ஐந்து தட்டு செட், ஆறு தட்டு செட் என்று வந்து குவிந்தன.

நாடக ஒத்திகைகளைப் பார்ப்பதோடு, இந்த நாடக செட் றெக்கோட்டுக்களையும் நான் திரு.விநாயகமூர்த்தி அவர்கள் வீட்டில் கேட்டு இரசித்தேன்.

யாராவது பெரியவர்களுக்கு, அறிஞர்க ளுக்கு, அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்குப் பிரியாவிடை என்றால், பணக்கார வீட்டுத் திருமணங்கள் என்றால் 'அட்ரஸ் பேப்பர்' என்று ஒன்று எழுதிப் படித்துக்கொடுப்பது அந்தக் காலத்தில் 'வெறி பிடித்த' ஒரு வழக்கமாக இருந்து வந்தது.

இத்தகைய 'அட்ரஸ் பேப்பர்களை' அழகாக வரைந்து கொடுப்பதில் திரு.விநா யக மூர்த்தி ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஓவியராக விளங்கினார். அவரிடம் இந்த 'டெக்னிக்கை'ப் பார்த்து மனதில் பதித்துக் கொண்டு திருகோணமலை வந்த சமயத்தில் தான் முதல் தடவையாக ஓவியர் கொண் டைய ராஜுவும் திருகோணமலை வந்து சேர்ந்தார் என்றால் அது என்னைப் பொறுத்தவரையில் சர்க்கரைப் பந்த லில் தேன் மாரி பொழிந்த கதையே அல்லவா?

**(இன்னும் வரும்)**

## வாரம் ஒரு வார்த்தை!

### 8. சிரிப்பு மருந்து

**நா**ன் ஒண்ணு சொல்றேன்;

அதை நீங்க செஞ்சீங்கன்னா உங்க உடம்புக்கு ரொம்ப நல்லது.

நான் சொல்றதை நீங்க செஞ்சீங் கன்னா உங்க உடம்புலே என்னென்ன நடக்கும் தெரியுமா? இதை நான் சொல்றது இருக்கட்டும். டாக்டர்கள் சொல்றதை கேளுங்க...

சுவாசப்பையிலே பிராணவாயு அதிகமா நிரம்பது.

உடம்புலே ரத்தம் வேகமாப் பரவுது.

ஈரலையும் வயிற்றுத் தசைகளையும் தட்டி எழுப்பது.

தேகப்பயிற்சி செய்யறப்போ உடம்பு தசையெல்லாம் அசைஞ்சு பலப்படுதுல்லே! அதேமாதிரி பலம் சேரும்!

ரத்தத்துலே சக்தியைக் குடுக்கிற சர்க் கரைப் பொருளை பாய்ச்சுது!


ஆகையினாலே இதைவிட சிறந்த 'டானிக்' வேறே எதுவும் இல்லே!

எது தெரியுமா? இப்ப நான் சொல்லிக் கிட்டு வந்த இவ்வளவும் உங்களுக்கு வேணும்னா நீங்க வேறே ஒண்ணும் செய்ய வேண்டாம்! வாய்விட்டுச் சிரிச்சா போதும்.

"வாய்விட்டுச் சிரிச்சா நோய்விட்டுப் போகும்." அப்படின்னு சொல்லுவாங்கள்லே! அது ரொம்பவும் உண்மைன்னு டாக்டர் களே சொல்றாங்க! ஆகையினாலே காசில் லாமே டானிக் வேணும்னா கலகலன்னு சிரிங்க. அது போதும்!

"சிரிக்கறதுக்கு நாங்கள் தயார்... ஆனா சிரிப்பு வர மாட்டேங்குதே. அதுக்கு நாங்கள் என்ன செய்றது? இது தான் பல பேருடைய கேள்வி.

வாழ்க்கையோட உண்மையை புரிஞ்சிக்குங்க... எதையும் 'சீரியஸா' நினைக்கிற பழக்கத்தை இன்னையோட விட்டுடுங்க! வாழ்க்கையை லேசா எடுத்துக்குங்க. வாய்விட்டுச் சிரிக்கலாம்.



கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், அப்படித்தான் இருந்தார். நெருக்கடியான நேரம் கூட அவரை நிலை குலைய வச்சதில்லே! ஒரு தடவை அவரும் அவரைச் சேர்ந்த வங்களும் நாகர்கோவில்லேயிருந்து சென்னைக்கு சொந்த கார்லே வந்துகிட்டிருக்காங்க.

வர்ற வழியிலே... கோவில் பட்டிக்கு பக்கத்துலேன்னு நினைக்கிறேன்... ஒரு பெரிய ஆக்ஸி டென்ட்! வேற யாருக்குமில்லே! அவங்களுக் குத்தான்! அவங்க கார் ஒரு புளிய மரத்துலே மோதி அப்படியே தகடா நசுங்கிப் போச்சு! கார்லே இருந்தவங் களுக்குலாம் பலமான காயம்! மெதுவா ஒவ்வொருத்தரையா வெளியே எடுத் தாங்க! தேவைப்பட்டவங்களுக்கு முதல் உதவி செஞ்சாங்க... கட்டுலாம் போட் டாங்க!

ஒரு பெட்ஷீட்டை எடுத்து ரோடு ஓரமா புல் தரையிலே போட்டு அதுலே உக்கார்ந்திருந்தாங்க...

ஒருத்தரை மட்டும் பக்கத்து டவுனுக்கு அனுப்பி வேறே ஒரு டாக்ஸி எடுத்துக் கிட்டு வரச் சொல்லியிருக்காங்க! இவங் கள்லாம் உக்காந்து பேசிக்கிட்டிருக்காங்க!

கலைவாணரும் வெத்திலை பெட்டி யைத் திறந்து வெத்தலை சீவல் போட்டுக் கிட்டு உக்கார்ந்திருக்கார்.

கார் புளிய மரத்துலே பதிஞ்சு போயி இருக்கு!

அந்த நேரத்துலே அந்த வழியிலே போனவங்க இதை பார்த்துடறாங்க!

"ஐயையோ நம்ம கலைவாணர் மாதிரி யில்லே தெரியிது"... அப்படின்னு சொல்லி கிட்டு பதறிப்போயிகிட்டே ஓடி வர் றாங்க...

"அண்ணே! என்னண்ணே ஆச்சு?" அப்படின்னு உதறலோட கேக்கிறாங்க...

என்.எஸ்.கிருஷ்ணன்... கொஞ்சம் கூட பதறலே... வெத்திலையிலே சுண்ணாம்பு தடவிக்கிட்டே சொல்றாரு!

"அதுல்லாம் ஒண்ணுமில்லீங்க! இப்படி வந்துகிட்டே இருந்தோம்... ரொம்ப களைப்பா இருந்துது... அதுதான் காரை அந்த புளிய மரத்துலே சாத்தி வச்சுட்டு இப்படி உக்காந்து வெத்தலை போட்டுக் கிட்டிருக்கோம்!" அப்படின்னார்.

அவரு நிலைமையிலே நாம இருந் தோம்ன்னா அந்த நேரத்துலே அப்படி சொல்லத்தோணுமா? யோசிச்சிப் பாருங்க!

அவரு வாழ்க்கையை ஒரு சுமையா நினைக்கலே... லேசா நினைச்சார்.

அதனாலேதான் அவராலே அப்படி சொல்ல முடிஞ்சுது.. கார் நசுங்கிப் போன துக்கே அவரு கவலைப்படலே!

கால் செருப்பு வார் அறுந்து போனா நாம எவ்வளவு கவலைப்படறோம்!

அதுதான் நமக்கும் அவருக்கும் உள்ள வித்தியாசம்.

இதுவரைக்கும் போனது போகட் டும்... இனிமேலாவது கொஞ்சம் வாய் விட்டுச் சிரிச்சிப் பார்க்கலாம்.

தினம் ஒரு தடவையாவது அப்படி செய்யிங்க!

ஓர் எச்சரிக்கை!

ரெண்டு மூணு பேரோட சேர்ந்து இருக்கும்போது வாய்விட்டு சத்தம் போட்டு சிரிங்க!

ஆனா.. நீங்க தனியா உக்காந் திருக்கறப்போ அப்படி சிரிக்காதீங்க!

பாக்கறவங்க சந்தேகப்படுவாங்க!

தென்கச்சி – கோ. சுவாமிநாதன்

**(வார்த்தைகள் தொடரும்)**

# தங்கம் போட்டுத் தேய்த்தாலும்....



வீணைவேந்தன்

யாருமே எதிர்பார்க்கவில்லை. வகுப்பாசிரியரே சிலையாக நின்றார்

ஆரம்பத்தில் மாணவர்கள் கேலியும் கிண்டலுமாகப் பேசிக்கொண்டிருந்தபோதும், நேரம் செல்லச் செல்ல சிறிது சிறிதாக அங்கு அமைதிபரவத் தொடங்கியது. அத்தனை மாணவர்களின் புலன்களும் ஒழுங்கிணைந்து அதையே உற்றுப் பார்த்த வண்ணம் செவிமடுத்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கே தாங்கள் பார்ப்பதும் கேட்பதும் நிஜம்தானா என்று தீர்மானிக்க முடியாமல் திகைப்பில் ஆழ்ந்திருந்தார்கள்.

ஆம். யாருமே எதிர்பாராத அற்புதம் நடந்து கொண்டிருந்தது.

தனது அறையில் வேலையில் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருந்தபோதும், அதிபரின் கூரிய காதுகள் சுற்றுப்புறச் சூழ நிகழ்வுகளைக் கூர்ந்து கவனித்துக் கொண்டு தானிருக்கும். அந்தக் காதுகளே இப்போது ஆச்சரியத்தில் ஆழ்ந்துவிட்டன. சந்தடியும் கூச்சலுமாக இருந்த மாணவர்கள் மத்தியில் இந்த அமைதியா? இந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு அவர்காதுகளில் விழுவதை அவரால் நம்பவே முடியவில்லை.

மெதுவாகத் தலையை நிமிர்த்தி, திருப்பி யன்னலூடாக வெளியே பார்வையைச் செலுத்தினார்.

வெளியில், அண்ணாந்து, பார்த்தபடி, வாயினுள் எதுபோனாலும் தெரிந்து கொள்ள முடியாத அளவு தங்களை மறந்த நிலையில், மாடிவகுப்பறையில் நடக்கும் அந்த அதிசயத்தைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

இதுவரைகாலமும் இப்படி ஒரு சம்பவம் நடந்ததாக அவர்கள் பார்த்ததும் இல்லை; கேட்டதும் இல்லை. ஆனால் இன்று! இது எப்படி...?

அதிபர் முதல்கொண்டு ஆசிரியர், மாணவர் சகலர் மத்தியிலும் இதே கேள்வி மீண்டும் மீண்டும் எழுந்து பதில் காணத் துடித்துக் கொண்டிருந்தன.

அதிபருக்கு அதற்குமேல் இருப்புக் கொள்ள முடியவில்லை. மெதுவாக வெளியே வந்தார்.

அதிபர் வெளியே வந்ததுகூடத் தெரியாமல், வெளியில் நின்ற ஆசிரியர்கள் மேல் மாடியைப் பார்த்தபடி தங்கள் புலன்கள் அத்தனையையும் ஒருங்கிணைத்து கேட்டுக் கொண்டிருந்தார்கள். எந்தவித சலனமும் ஏற்படுத்தாமல் அதிபர் மெதுவாகப் படி ஏறி அந்த வகுப்பறையை அண்மித்தார். வெளியில் நின்றபடி உள்ளே பார்வையைச் செலுத்தினார். அவரது கண்களையே அவரால் நம்பமுடியவில்லை. தனது காதுகள் தான் தன்னை ஏமாற்றிவிட்டதோ என்று எண்ணி இருந்தார். இல்லை. எந்த ஏமாற்றமும் நடக்கவில்லை. அது உண்மைதான். இது எப்படி நடக்கிறது? எப்படி நடக்கும்?!

ஆண்டு இறுதியில் நடந்த பரீட்சையில் தன் பெயரையே சரியாக ஆங்கிலத்தில் எழுதத் தெரியாமல் இருந்த இவனா? நாலு ஐந்து ஆங்கில வார்த்தைகள் எழுதியதற்காக ஒரு சில புள்ளிகளைப் போட்டு, இதற்கு மேலும் அவனை அந்த வகுப்பில் வைத்திருக்க முடியாததால், வெளியேற்றவும் முடியாமல், வலுக்கட்டாயமாக வகுப்பேற்றப்பட்ட அவனா?

ஆம்! அவனே தான்.

அன்றைய மாணவர் மன்றத்தில் ஆங்கிலத்தில் கதையொன்றை மிகவும் அழகாக, சுத்தமான உச்சரிப்புடன், எங்கு எங்கு நிறுத்த வேணுமோ, அங்கங்கே நிறுத்தி எந்த எந்த சொற்களுக்கு எப்படி எப்படி அழுத்தம் கொடுக்க வேண்டுமோ அப்படி அப்படி அழுத்தங்கொடுத்து; தான் உச்சரிக்கும் சொல்லின் அர்த்தம் தொனிக்க முகத்திலும் குரலிலும் பாவத்தைக் காட்டி, ஓர் ஆங்கிலேயனை விட அழகாக உச்சரித்து ஓர் அங்கதனுக்கும் விளங்கும்-உணரும் வகையில் அந்தக் கதையைச் சொல்லிக் கொண்டிருந்தான்.

எதேச்சையாகத் திரும்பிய வகுப்பாசிரியர் தனக்குப்பின்னால், அரவங்காட்டாமல் நின்ற அதிபரைக் கண்டதும் துணுக்குற்ற போதும், மறுகணம் முகமெல்லாம் பூரிக்க பெருமையோடு அவரைப் பார்த்தார். அதிபருக்கிருந்த மகிழ்ச்சியில் அந்த வகுப்பாசிரியரைக் கட்டிப்பிடித்துத் தன் மகிழ்ச்சியைத் தெரிவிக்க வேண்டும் போல் இருந்தது. உணர்ச்சிகளைக் கட்டுப் படுத்திக்கொண்டார். கூட்டம் முடிவடைந்ததும் தன்னை வந்து சந்திக்கும்படி கூறிவிட்டு தன் அறைக்குச் சென்றார் அதிபர்.

அதிபர் அறையில்

"மாஸ்டர் இந்தப் பையன்..." அதிபர் முடிக்கவில்லை,

"இந்தப் பையனை ஆங்கிலத்தில புள்ளிகள் மிக மிகக் குறைவாக எடுத்தான் என்பதற்காக வகுப்பேற்றுவதில் மிகவும் சிரமப்பட்டோமே, அதே மாணவன்தான் சேர்!" தெளிவு படுத்தினார் வகுப்பாசிரியர்.

"அதுதான்...

அது எப்படி இவ்வளவு ஆணித்தரமாகவும் சரளமாகவும் அனாயாசமாகவும் ஆங்கிலத்தை இந்தக் குறுகிய காலத்திற்குள் பேசமுடிந்தது. செமினார் செமினார் என்று அலையிற ஆசிரியர்களால் கூட இந்த அளவிற்கு ஆங்கிலத்தைப் பேச முடியுமா என்பது சந்தேகம். அப்படி இருக்க இது, எப்படி நடந்தது. எந்தப் பார்வதிவந்து இவனுக்கு ஞானப்பாலைக் கொடுத்து, இந்த அதிசயத்தை செய்தது? நம்ப முடிய இல்ல. என்னால நம்ப முடிய இல்ல...."

அதிபர் தன் உள்ளத்தில் இருந்த சந்தேகங்களைக் கொட்டித்தீர்த்தார்.

"நான்கூட முதல்ல நம்ப இல்ல. பிறகு அவன் விபரமாகச் சொன்னதன் பின்பு தான் என்னால ஓர் அளவிற்கு நம்ப முடிந்தது."

"அவன் அப்படி என்ன விபரமாகக் கூறினான்" ஆவலோடு அதிபர் கேட்டார்.

மறுநாள் நடைபெற்ற அவசர ஆசிரியர் கூட்டத்தில் அவன் விளக்கிக் கொண்டிருந்தான்.

"எனது மாமா என்னை அதிகாலை நான்கு மணிக்கே எழுப்பி படிக்க உட்காரவைப்பார். ஆரம்பத்தில் எனக்கு ஒரு ஆங்கில வார்த்தையையும் உச்சரிக்கத் தெரியாது. அதை நன்கு உணர்ந்த மாமா, ஒவ்வொரு பாடத்தையும் அவசரப்படாமல் பந்தி பந்தியாகச் சொல்லித் தந்தார். முதலில் பந்தியில் உள்ள ஒவ்வொரு சொல்லையும் எழுத்துக்கூட்டி மனப்பாடம் செய்யவைத்தார், எழுதவைத்தார். ஒழுங்காக உச்சரிக்க வைத்தார். ஆங்கிலச் சொற்களை உச்சரிக்கும் போது, அதன் ஒலி சரீரத்தில் எங்கிருந்து வரவேண்டும்-அதாவது வயிற்றில் இருந்தா, மார்பில் இருந்தா, அடித்தொண்டையில் இருந்தா, இல்லை தொண்டைகளுக்குள் வெறும் காற்றாகவா இவ்விடமாக விளக்கி உச்சரிக்கவைத்தது மட்டுமன்றிச் சொற்களை உச்சரிக்கும்போது பிரித்து, எழுத்தைக்கூட்டிப் பாடமாக்கும் விதத்தையும் விளக்கினார். முதல் ஐந்து பாடங்களும் வாசித்து, அர்த்தம் விளங்கிக்கொள்ள ஐந்து மாதங்கள் முடிந்தன. ஆனால் ஒவ்வொரு பாடமும் முடிக்கும் போது கிட்டத்தட்ட முழுப்பாடமும் மனனமாகி விடும். அதன் பின் மற்றப்பாடங்களை நானே எழுத்துக்கூட்டிப் படிக்கத் தொடங்கி விட்டேன்...

அவன் தொடர்ந்தான். ஆசிரியர்கள் அனைவரும் அசைவற்றுக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

"எங்கள் மாமா சொல்வார். உழைக்கும் போது நாம் சிறுகச் சிறுக வங்கியில் போட்டுச் சேமிக்கும் பணம், அவசரதேவைக்குக் கைகொடுத்து உதவும். அதேபோன்று மாணவர்கள் படிக்கும் காலத்தில் மனனம் செய்து மனதில் சேர்த்துவைக்கும் கல்வி அனைத்தும் நாம் தேவைப்படும்போது நம்மை அறியாமல் வந்து நமக்குக் கைகொடுக்கும். அன்று அவர் கட்டாயப்படுத்தி மனனம் செய்தவைகளே இன்று என்னை இந்த நிலைக்குக் கொண்டு வந்தது" என்றான்.

மாணவன் போய்விட்டான்.

ஆசிரியர்கள் அனைவரும் கல்லாய்ச் சமைந்திருந்தனர். ஈற்றில் அந்த மாணவனையும், அவனை ஆளாக்கிய அவன் மாமனையும் ஆண்டு இறுதியில் நடக்க இருக்கும் பரிசளிப்பு விழாவில் கௌரவிப்பதென்றும், அச்செயல் ஏனைய மாணவர்களையும் பெற்றோர்களையும் ஊக்குவிக்கும் என்று ஏகோபித்த முடிவாக தீர்மானிக்கப்பட்டது.

மாமனாரை அழைத்த அதிபர் விபரம் கூறினார். ஆனால் மாமனார் சொன்ன செய்தி அதிபரை அதிரச்செய்தது. அவர் சொன்னார்

"சேர்! இவனுடைய அம்மாவுக்கு தன் பிள்ளைகளைப் படிப்பிக்கவேணுமென்ற அக்கறையே இல்லை. படிப்பை விடுத்து அக்கம் பக்கம் கல்லை மண்ணைத்தூக்கி ஐந்தைப் பத்தைக் கொண்டு வந்தால் போதும். பிள்ளைகளின் பிற்காலத்தைப் பற்றிய சிந்தனையே இல்ல. அந்த நேரம் கிடைக்கும் பணம்தான் பெரிசாகப் படுது. இதனால்தான் இவனுக்கு முன்பிறந்த சகோதரங்கள் ஒன்றும் ஒழுங்காகப் படிக்கவில்லை. இவன்கூட என்னுடைய ஆக்கினையில்தான் படித்தவன். வீட்டுக்கு விருப்பமே இல்லை. இந்த நிலையில் நீங்கள் என்னைக் கௌரவித்தால் அவனுடைய அம்மாவுக்கு என்னில ஆத்திரம்தான்வரும். எனக்கு எந்தவித கௌரவமும் வேண்டாம். நீங்கள் அவனுடைய அம்மாவைக் கூப்பிட்டுக் கௌரவிப்பீர்களானால், சில வேளை திருந்தி மகனின் படிப்புக்கு ஊக்கம் கொடுக்கலாம் என்றார்.

அது சரியான அணுகுமுறையாகவே அதிபருக்கும் பட்டது.

அன்று நடந்த அந்தப் பாடசாலைப் பரிசளிப்பு விழாவில் பிரத்தியேகமாகக் கௌரவிக்கப்பட்ட அந்த மாணவனும் அவன்தாயும், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பரிசோடும் பதக்கத்தோடும் பொன்னாடையோடும் அவர்கள் வீதியால் வந்து கொண்டிருந்தார்கள். அந்த வீதியில் உள்ள மக்களுக்கு ஒரே மகிழ்ச்சி. தம் பிள்ளை கௌரவிக்கப்பட்டது போன்ற மகிழ்ச்சி. ஆனந்தக் களிப்பில் ஒரு தாய் கேட்டாள்,

"என்னக்கா! உங்க மகனால அந்தப் பள்ளிக்கூடத்துக்கே பெருமையாமே. உங்களை எல்லாம் கௌரவிச்சாங்களாம். எனிம உங்களுக்கென்ன உங்கட மகன்ற படிப்பால எல்லாருக்கும் பெருமைதானே இனி ஏன்?"

"ஓமடி! ஓமடி! அது இல்லாமல்தானே நாங்க இவ்வளவுகாலம் சமைக்காம இருந்த நாங்கள். இனிம என்ன எங்கட வீட்டில கோழியும் ஆடும்தான். எல்லாரும் படிச்சுக் கிழிச்சிற்றாங்க. இவர் ஒருதர் தான் பாக்கி. எந்தப் பிள்ளபடிச்சு எனக்கென்ன. என்ர கையும் காலும் ஆடாட்டா ஒரு நாயும் என்னை எட்டிப்பாக்காது."

அதைக் கேட்டு அந்தத் தெருவே வாயடைத்தது.

தூரத்து வானொளியில் அந்தப் பாட்டுக் கேட்டுக்கொண்டிருந்தது.

"தங்கம் போட்டுத் தேய்த்தாலும்
எருமை நிறம் மாறாது".

▲

# இப்படியும் மனது



மணி தேநீரை அருந்தியபடி அமர்ந்தான். தினப்பத்திரிகையைப் பிரித்து வாசிக்கக் கூட நேரமில்லை. காலை ஏழு மணிக்கு ஆரம்பித்த ஓட்டம். இப்பொழுது தான் கால்களுக்கும் கொஞ்சம் ஓய்வு. மணியின் கண்கள் மெல்ல அயர ஆரம்பித்தன.

"தம்பி இவள் தங்கச்சியை இன்னும் காணேல்லடா!" அம்மாவின் குரல் கனத்தது.

"எங்க போனவள்?"

"வகுப்புக்குத்தான். வழமையா இந்த நேரம் வந்திடுவாள்!"

மணி எழுந்தான். "என்னம்மா இது வகுப்பு முடியற நேரம் கொஞ்சம் முந்திப் பிந்தலாம்தானே?" ஆனாலும் தாயுள்ளம் கெஞ்சியது!

"எனக்குப் பயமாயிருக்கடா. நீயொருக் காப்பாத்திட்டு வாவன்!" சோர்வில் இருந்த மணிக்கு கோபம் வராமலில்லை. திரும்பி

க. ராகுலன்–வெள்ளவத்தை

அம்மா முகம் பார்த்தான்; அமைதியானான்.

"சரியம்மா!" கிளம்பினான்.

"என்னடா தம்பி போனவேகத்தில திரும்பி வாறாய்?" அம்மா படபடத்தாள். "வகுப்பு முடிஞ்சு ஒரு மணித்தியாலத்துக்கு மேலயாம்."

"இப்ப என்ன செய்யிறது!" அம்மாவின் படபடப்பு மேலும் அதிகரித்தது.

"கொஞ்சம் பதறாதையுங்கோ அம்மா!" மணி தங்கையின் டயறியைப் புரட்டலானான். பக்கங்கள் புரண்டபோது, அவளுடைய அடையாள அட்டை மெல்லத் தலைகாட்டிச் சிரித்தது.

"இங்க பாருங்கோம்மா!" மணி அதை அம்மாவிற்குக் காட்ட, அதைப்பார்த்து அவள் முகம் சிவந்துதான் போனது. "இந்தக் கழுதைக்கு எத்தனைதரம் சொல்றது, இதுகளைக் கொண்டுபோவெண்டு... எங்கேயாவது செக்கிங்கில மாட்டுப்பட்டாளோ?"

"அம்மா கண்டதையும் கற்பனை பண்ணாதையுங்கோம்மா!" என்றவாறு மணி றிசீவரை காதுக்குக் கொடுத்தான். அந்த டயறியிலிருந்த இலக்கங்களை ஒவ்வொன்றாக அழுத்தலானான். "ஹலோ, கார்த்திகா வந்தவவா, நான் அவவின்ர அண்ணா கதைக்கிறன்."

"வரேல்லையே!" மறுமுனையிலிருந்து பதில் வந்தது. அடுத்தடுத்த அழைப்புக்களும் இதே பதிலையே அளித்துவந்தன.

மணி பொறுமையிழந்தவனாய் இறுதியாக தண்டாயுதபாணி மாமாவின் இலக்கங்களை அழுத்தலானான். "டிங்" அழைப்பு மணி ஒலிக்க "தம்பி, தங்கச்சி வந்திட்டாள்!" அம்மாவின் குரல் சந்தோஷம் கோபம் இரண்டையும் சுமந்து வந்தது. மணி றிசீவரை சாத்திவிட்டு எழுந்தான்.

"வாடி இவ்வளவு நேரமும் எங்க போனனீ? ஒரு கொஞ்ச நேரத்துக்குள்ள நாங்கள் என்ன பாடுபட்டிட்டம் தெரியுமா?"

"அண்ணா, அது என்னோட ஃபிரண்ட் குமுதா வீட்ட போயிருந்தேன், அதுதான்!" என்று அப்பாவித்தனமாகக் கண்சிமிட்டினாள் கார்த்திகா. சின்னப்புன்னகையோடு அலறிய தொலைபேசி அழைப்பை ஏற்றுக் கொண்டாள்.

"ஹலோ!"

"ஹலோ, கார்த்திகா வந்தாச்சா? நாளைக்கும் சொன்ன நேரத்துக்கு சந்திப்பம், சரியா ப்ச்..." அந்த றிசீவர் முத்தம் கார்த்திகா காதில் அப்போது தித்திக்கத்தான் செய்தது.

# ஒரு சர்வாதிகாரியின் பலம்



அல்வையூர் காந்தி அருணாசலம்-கனடா

சாந்தியும் மாலதியும் பாடசாலை முடிந்து வீடு வந்து கொண்டிருந்தார்கள். ஓட்டமும் நடையுமாக முன்னே வந்த மாலதி வீட்டு வாசலில் அந்த ஒரு ஜோடி செருப்பைக் கண்டதும் 'ஷாக்' அடித்தது போல் ஒரு வினாடி ஸ்தம்பித்து விட்டாள்.

"என்னடி, பேயைக் கண்ட மாதிரி அப்பிடியே நிண்டிட்டாய்?" என்று கிட்டே வந்த சாந்தி தங்கை மாலதியின் விழிகள் சென்ற வழியே தனது கண்களையும் ஓட விட்டாள். இப்போ இவள் முகத்திலும் அதே அதிர்ச்சி தொற்றிக் கொண்டது.

"ஐயோடி இண்டைக்கு ஹிட்லர் என்ன வேளைக்கே வீட்டுக்கு வந்திட்டார் போலை. இன்றைய பொழுதே ரென்ஷன் தான்." என்று கிசுகிசுத்தாள் சாந்தி.

"அடாடா, றேடியோவிலை ஒரு நல்ல நாடகம் போகுமெண்டு ஆசையா ஓடி வந்தன். இந்த மனுசன் நிக்கேக்கை தான் றேடியோ சத்தமே கேக்கக்கூடாதே. எங்களுக்கு காலையிலை முழிச்ச முகம் சரியில்லைப் போலை" என்று ஏக்கத்துடன் முகத்தைச் சுழித்தபடி முணுமுணுத்தாள் மாலதி.

"என்ன செய்யிறது நாங்கள் குடுத்து வைச்சது அவ்வளவு தான்!" சாந்தியின் நெஞ்சிலிருந்து நீண்ட பெருமூச்சொன்று வெளிப்பட்டது.

"அவள் என்ரை ஃபிரண்ட் கலா கேக்கிறாள் 'ஏண்டி உங்கடை அப்பா உண்மையிலேயே உங்கடை அப்பா தானா?' என்று. அவள் தன்ரை அப்பாவின்ரை தோளுக்கு மேலை கையை போட்டுக் கொண்டு எப்பிடி ஜாலியா பாடசாலைப் பகிடியளெல்லாம் கதைப்பாள் எண்டு சொல்ல எனக்கு வயிறெரியுது. ஏதோ பாவம் செய்து தான் இந்த வீட்டிலை பிறந்திருக்கிறம். ஒவ்வொருத்தி தங்கடை அப்பாமாரைப் பற்றிச் சொல்லேக்கை எனக்கு நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாம் போலை கிடக்கு!" எரிச்சலுடன் காறி உமிழ்ந்தாள் மாலதி.

"இதெல்லாம் அம்மாவின்ரை பிழை தான். அவ கட்டின புதிசிலை அப்பாவைக் கையுக்கை போட்டு வைச்சிருந்தால், மனுசன் இப்ப இப்படித் துள்ள மாட்டார். கமலமன்ரி எப்பிடி அந்த அங்கிளின்ரை கண்ணுக்கை விரல விட்டு ஆட்டுறா. எங்கடை அம்மாவும் இருக்கிறாவே. எள் எண்ட முந்தி எண்ணெயா உருகி வழிஞ்சு கொண்டு... சே." வெறுப்புடன் இதழை மடித்தாள் சாந்தி.

சகோதரிகள் இருவரும் தத்தமக்கே மட்டும் கேட்கும்படியாக மிகமெதுவான குரலில் உரையாடியபடி வீட்டினுள் நுழைந்தார்கள்.

பாக்கியம் பிள்ளைகளைக் கண்டு விட்டு அரக்கப் பரக்க ஓடி வந்தாள்.

"அப்பா வந்திட்டார், அப்பா வந்திட்டார். இண்டைக்கு ரவுணுக்கை ஏதோ பிரச்சனையாம். அது தான் வெள்ளணக் கடையைப் பூட்டிக் கொண்டு வந்திட்டார்!"

"என்ன, ஏதோ மன்னர் மார் வரேக்கை முன்னுக்கு ஒராள் பராக் சொல்லிக் கொண்டு வாற மாதிரிகிடக்கு. அது சரி, ஆள் எங்கை?" என்று விழிகளை நாலா பக்கமும் சுழற்றியபடி வெடுவெடுத்தாள் மாலதி.

"என்னடி, அப்பா எண்டு ஒரு மரியாதை இல்லாமல்... சரி, சரி. வழக்கம் போலை கும்மாளம் போடாமல் உங்கடை அலுவலுகளைப் பாருங்கோ!" என்று பாக்கியம் பதைப்புடன் உத்தரவிட்டாள்.

"உப்பிடிச் சொல்லிச் சொல்லித்தானே இப்ப வெடிக்காரன் வீட்டுக் கோழி மாதிரி நடுங்கிச் செத்துக் கொண்டிருக்கிறம். நாட்டுக்குச் சுதந்திரம் கிடைக்கிறதைப் பற்றி ஏன் கவலைப்படுவான்? இந்த வீட்டுக்கே சுதந்திரம் இல்லை...ம்... ரொம்பப் பாவம் செய்திட்டம்!" என்று மூச்சு விட்டாள் மாலதி.

"அது சரியம்மா. சர்வாதிகாரி நாளைக்கு வழக்கம் போலை பத்து மணிக்குத் தானே வீட்டை வருவார். சரி, ஏதோ இண்டைக்கு ஒரு நாளைக்கு அவர்றை கொடுங்கோலாட்சியைப் பல்லைக் கடிச்சுக் கொண்டு தாங்க வேண்டியதுதான்!"

"சரி.. சரி.. பொம்பிளைப் பிள்ளையளா அடக்கமாக் கதைக்காமல், இதென்னடி ஏட்டிக்குப் போட்டியா அதிகப் பிரசங்கித்தனம்? உஷ்! அப்பா சாமி கும்பிடுகிறார்!" பாக்கியம் வாய்க்குக் குறுக்கே சுட்டு விரலை வைத்து எச்சரித்தாள்.

"என்ன அங்கை சத்தம்? யாரது?" என்று உச்சஸ்தாயியில் உறுமியபடி வந்தார் வேலாயுதம். குளித்து விட்டு இடையில் ஒரு துவாயைச் சுற்றியபடியே சாமியறையில் கும்பிட்டு விட்டு வருகிறார் என்பதை நெற்றி நிறைந்த விபூதியும் ஊதுவத்தி மணமும் கட்டியம் கூறின.

"அதப்பா... வந்துப்பா.... படிச்சிட்டு வாறம்!" திரு திருவென்று முழித்தபடி முணுமுணுத்தாள் சாந்தி.

'இந்த மனுசன் எங்களை இந்தப் பாடுபடுத்திக் கொண்டு ஏன் தான் சாமி கும்பிடுகிறாரோ...ம்.. செய்யிற பாவத்துக்கும் மன்னிப்புக் கேக்க வேணும் தானே' என்று மனதினுள் புகைந்தபடி, "எத்தனையோ நாளைக்கு பிறகு இண்டைக்கு நேரத்துக்கு வந்திருக்கிறியள். உங்கடை உடம்புக்கும் ஆறுதல் வேணும் தானே. அது தான் கதைச்சுக் கொண்டிருந்தம்!" என்று அடியோடு விடயத்தை மாற்றி அப்பாவுக்கு ஐஸ் வைத்தாள் மாலதி.

"சரி, சரி. கதையை விட்டிட்டு முகத்தைக் கழுவிப் போட்டு சாப்பிட வாங்கோ!" அதட்டினார் வேலாயுதம்.

'இண்டைக்கு ஏதோ கஷ்ரகாலம் தான். இந்த ஆளோடை சாப்பிடப் போனால் அப்பிடி இராதை, கோப்பையைப் பாத்துச் சாப்பிடு, கதைக்காதை, தண்ணி குடியாதை என்று ஆயிரம் ஓர்டர் போடுவாரே. என்ரை முருகா! நீ தான் காப்பாத்த வேணும்' என்று மனதினுள் மருகியபடி சகோதரிகள் உடைமாற்றச் சென்றனர்.

வேலாயுதத்துடன் பிள்ளைகள் மட்டுமல்ல மனைவி பாக்கியமும் உம்மென்று ஒரு வார்த்தை எதிர்த்துக் கதைத்தது கிடையாது. குடி, அடி, உதை என்று எதுவுமே இல்லாவிட்டாலும், அந்தக் கண்டிப்பான முரட்டுக் குரலுக்குள் எல்லோரும் அடக்கம் தான்.

முப்பது வருட இல்லற வாழ்வில் இந்த முரட்டுப் போர்வைக்குள்ளிருக்கும் அன்பான வேலாயுதத்தைப் பாக்கியம் நன்கு அறிந்திருந்தாள். அதனால் அவள் வேலாயுதத்தின் கோபத்தையோ, ஆளுமையையோ எதிர்த்ததுமில்லை; அதற்காகக் கவலைப்பட்டதுமில்லை.

அப்பாவின் சர்வாதிகாரத்துக்குள் அடங்கி இருக்கும் அம்மாவை எண்ணி இரண்டு பெண்களும் பச்சாதாபப்பட்டுக் கொள்வார்கள்.

"ஏனம்மா, இந்த மனுசனோடை எப்பிடியம்மா முப்பது வருசமாக் குடும்பம் நடத்துறியள். கட்டின உடனேயே டிவோஸ் எடுத்திருக்கலாமே? உப்பிடி அப்பான்ரை கொடுமையை அனுபவிக்கோணும் எண்டு உங்களுக்கென்ன தலையெழுத்தே? ஆரம்பத்திலையே பிரிஞ்சிருந்தா நாங்களும் பிறந்திருக்க மாட்டம். உந்த ஆளுக்கும் நல்ல ஒரு பாடமாயிருந்திருக்கும்."

"அடி போடி கழுதைகளா? உங்களுக்கென்னடி தெரியும் அவரோடை அருமை? கோபமிருக்கிற இடத்திலை தான் குணமிருக்கும்!" என்று அப்பாவுக்காக வக்காலத்து வாங்கும் அம்மாவைப் பார்க்க, 'இப்பிடி வெகுளியாயிருக்கிறாவே' என்று பெண்களுக்கு பரிதாபம் பொங்கும்.

"ஏனம்மா உங்களுக்கே உங்களுக்கெண்டு எவ்வளவு ஆசை இருக்கும்? இந்தப் படத்திலை வாற ஹீரோயின்ஸ் ஹீரோவை எப்பிடியெல்லாம் ஆட்டிப் படைக்கினம் தெரியுமா? இப்பிடி வாயில்லாப் பூச்சியா வாழுறதிலை உங்களுக்கு என்னம்மா சந்தோஷம்?"

"படத்திலை வாற குடும்பத்தை விட நாங்கள் கூடுதலான சந்தோஷத்தோடை தான் இருக்கிறம். இப்ப அப்பா எனக்கும் உங்களுக்கும் என்ன குறை விட்டிட்டார்? நல்ல சாப்பாடில்லையோ, உடுக்கத் துணியில்லையோ?"

"ஐயோ அம்மா சாப்பாடும் உடுப்பும் தான் வாழ்க்கையா? இப்பிடி ஒரு பெக்கே அம்மாவாயிருக்கிறியளே. உங்களை நினைக்க எவ்வளவு பாவமாயிருக்கம்மா."

இதற்கு மேல் பாக்கியத்திற்குப் பொறுக்காது "அப்பாவைப் பற்றிக் குறைவா இதுக்கு மேலையும் சொன்னியளோ என்ன செய்வனெண்டு எனக்கே தெரியாது" என்று முகத் தைத் தூக்கி வைத்துக் கொள்வாள்.

அமைதியின் மறு உருவமான இந்தப் பாக்கியம். ஒருநாள் நெஞ்சுவலி என்று படுத்ததுதான். திரும்பவும் எழும்பவே இல்லை. வைத்தியர்கள் எவ்வளவோ போராடியும் பாக்கியத்தின் உயிர்க் குருவி கூட்டை விட்டுப் பறந்து விட்டது.

நாட்கள் நகர்ந்ததில் பெண்கள் இருவரும் சிறிதளவு மனதை தேற்றிக் கொண்டார்கள். ஆனால் வேலாயுதம் பச்சைக் குழந்தை போல் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தார். உருக்குப் போன்ற அவரது உரமான உடல் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக உருக்குலைந்து கொண்டு வந்தது. இடியோசை போல் முழங்கும் அவர் கம்பீரமான குரல் பாக்கியத்தின் மறைவுக்குப் பின்னர் அந்த வீட்டில் கேட்கவே இல்லை. வேலாயுதத்தின் பலம் முழுவதும் பாக்கியத்துடன் தொலைந்துவிட, எல்லாவற்றையும் இழந்ததைப் போல் அவர் சுருண்டு கிடந்தார்.

அதிர்ந்து பேசத் தெரியாத அம்மா தானா அவ்வளவு நாட்களும் அப்பாவை ஒரு கம்பீரமான முழுமனிதனாக ஆக்கி வைத்திருந்தார், அம்மாவின் பொறுமைக்குள் இப்படி ஒரு பலம் இருந்திருக்கிறதா என்று சாந்தியும் மாலதியும் மனதினுள் வியந்தபடி தந்தையின் சிம்மக் குரலை மீண்டும் கேட்க வேண்டுமென்று ஆண்டவனைப் பிரார்த்தித்தனர்.

# இலக்கிய நயம்

"கொஞ்சம் மூச்செடுக்க விடுங்களேன்..." முனகினாள் வைதேகி.

"ம்" என்று கிணற்றுக்குள்ளிருந்து வருவதுபோல ஓர் ஒலியை வெளியிட்ட ராதேயன், அவள் முகத்தைத் திருப்பி மூக்கின் மேல் தன் இதழ்களைப் பதித்தான்.

"உங்கள் மூச்சையா கேட்டேன்...?" என்று மேலும் முனகினாள் அவள்.

அவன் வலிய கரங்கள் அவளது இடைப் பள்ளத்தினுள்ளும், கழுத்தின் வளைவுக்குள்ளும் இறுகச் சுற்றியிருந்தன. சாயப் பானைக்குள் முறுக்கிப் போடப்பட்ட துணிச் சுருள்போல அவன் உடலுக்கும் கரங்களுக்குமிடையே முற்றிலுமாகச் சுற்றி வளைக்கப்பட்டு அவனுக்குள் அமிழ்ந்து போயிருந்தாள் வைதேகி.



அவளது மென்மை, அவனை மேலும் மேலும் கிளர்த்த... அவன் கரங்கள் மேலும் மேலும் இறுகின,

இறுக்கிய பிடியைத் தளரவிடாமலே, அவள் காது மடல்களிலும் பிடரியிலும் மாறி மாறி முத்தமிட்டான். அவளுக்கு மீண்டும் மூச்சு முட்டியது.

"இதென்ன இது, பாம்புக் கடிவாய்க்கு மேல் கட்டுப் போடுவது போல இப்படி இறுக்குகிறீர்கள்...? இடைக்குக் கீழே எனக்கு இரத்தோட்டம் செல்லவில்லைப் போலிருக்கிறது..."

"இடையா, எங்கே அது? பூரித்த பொற்குடங்களை இணைத்திருக்கும் இந்த இழையையா சொல்கிறாய்?" என்று மேலும் அழுத்தினான்.

"முரடா!" என்று முனகியபடி அவன் மார்போடு இழைந்தாள்.

பட்டில் மடித்துவைத்த சுகந்தப் பொட்டலம் ஒன்று தன் மேனியெங்கும் இழைவதாய் உணர்ந்தான் ராதேயன், முகர்ந்தான். மூச்சை உள்ளிழுத்து நெஞ்சு நிரப்பினான்.

"வாசனையே... வசீகரமே.. வார்த்தைகளை உருவி விட்ட வாத்ஸாயனப் பாட்டே... சித்தத்துள் தித்திக்கும் தேனே... ரத்தத்தைப் புதுப்பிக்கும் இரகசியப் பேரூற்றே..."

"போதும் என்று அவன்!" இதழ்களைத் தன் இதழ்களால் அடைத்தாள்,

இனிக்கின்ற தேவரசப் பெற்குடத்தை உடைத்தாள்.

அவன் ஒரு சொட்டும் சிந்தாது உண்டுவிடத் துடித்தான். தன் உயிர் ரசத்தை உதடுகளால், உறிஞ்சும் அவன் வேட்கைக்குள், தனைக் கரைத்து ஓடவிட்டு, இனிக்கின்ற யாத்திரையை இமைமூடித் தொடர்ந்தாள்.

## கள்ளனும் கள்ளியும்!

இந்தக் காதல் யாகத்தை... உதடுகளால் உயிருக்குள் உயிர் ஊற்றும் யோகத்தை... காலமும் நின்று ரசித்தது, காதல் தேசத்தில் சில யுகங்கள் வசித்தது.

ராதேயன் விழி திறந்தான்,

தன் உடலில் சிறு நடுக்கத்தை உணர்ந்தான். வைதேகி கண்மூடி அவன் தோளில் துவண்டிருந்தாள். இது உயிரற்ற உடலோ என்று ஒருகணம் அவன் திகைத்தான்,

தருவது **மூழடில்யன்**

அவளுயிர் தன் இதயத்திற்குள் அதிர்வதாய் எண்ணினான், இல்லாவிடில் ஏன், நாடி நாளமெங்கும் இத்தனை களிப்புத் துள்ளல்?

அவள் கண்ணிமையில் தன் உதடுகளைப் பதித்து "வைதேகி!" என்றான்,

"ம்..." ஈனஸ்வரத்தில் பிறந்தது சிறு முனகல்,

"கண்ணைத் திற என் கண்ணே,.... உதட்டுவழி உயிர் முழுதாய் வந்து சேரவில்லை, கண்ணின் வழி கொஞ்சம் கட்டி இழுக்கப் பார்க்கிறேன்..."

"ஹ்ம்.." உதட்டைக் கோணிச் சிணுங்கினாள். கைகளால் அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு கன்னத்தில் கன்னம் உராய்ந்தாள்.

அவளை இறுக்கி அணைத்தபடி சொன்னான்:

"கன்னத்தில் உராய்கிறாய், இதயத்தில் அல்லவா தீப் பிடிக்கிறது!"

சற்று நேரம் மௌனமாக இருந்தார்கள். ·

"என்ன?" என்றாள்,

"என்னுள் ஓடும் இரத்தத்தில் சங்கீதம் கேட்கிறது அன்பே... அதை ரசிக்கவே என் மௌனம்,"

"மயக்கம் தீரவில்லையா?"

"எப்படித் தீரும்? கள்ளால் வரும் மயக்கம், மேலும் மேலும் கள்ளைத் தானே கேட்கும்!"

"கள்ளா நான்?" என்றாள்,

"கள்ளன் நான், நீ கள்ளி!" என்றான்.

அவள் சிரித்தாள்,

"வெளிப்பட வெளிப்பட மேலும் மேலும் மனம் விழைகிற காதலும் இனிமையானது!" என்றான்.


"அதுவும் என்ன கள்ளா?" என்றாள்,

"ஆமாம், கள்ளி!" என்றான்.

களித்தொறும் கள்ளுண்டல்
-வேட்டற்றால் காமம்
வெளிப்படுந் தோறும் இனிது.
(குறள் 1145)

# ஸ்போர்ட்ஸ்

## 9வது வீரராக அத்தபத்து



இலங்கை கிரிக்கெட் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் மார்வன் அத்தபத்து, இங்கிலாந்திற்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இரட்டைச் சதம் அடித்திருந்தார். இது அத்தபத்துவின் 4வது இரட்டைச் சதமாகும்.

இதன் மூலம் இவர் 4 தடவைகளுக்கு மேல் இரட்டைச் சதமடித்த 9வது டெஸ்ட் வீரராக இடம் பிடித்துள்ளார்.

இலங்கை அணி சார்பாக இதுவரை 10 இரட்டைச்சதங்கள் அடிக்கப்பட்டுள்ளன. இதில் அத்தபத்து 4 இரட்டைச் சதங்கள் அடித்துள்ளார். இலங்கை அணி சார்பாக அத்தபத்து தவிர பிரண்டன் குறுப்பு (201 ஆ.இ.), அரவிந்த டி சில்வா (267), ஜயசூரிய (340, 213), மகாநாம (225), ஜயவர்த்தன (242) ஆகிய ஐவரே இரட்டைச் சதமடித்தவர்கள்.

உலகில் 4ம் அதற்கு மேலும் இரட்டைச் சதங்கள் அடித்த வீரர்கள் பற்றிய விவரம் வருமாறு:

1. அவுஸ்திரேலியாவின் சேர் டொன் பிரட்மன் டெஸ்ட் போட்டிகளில் அதிக இரட்டைச் சதங்களை அடித்துள்ளார். இவர் 12 இரட்டைச் சதங்கள் அடித்துள்ளார். (334, 254, 232, 223, 226, 299 ஆ.இ., 304, 244, 270, 212, 234, 201)
2. இங்கிலாந்து அணியின் வொலி ஹமண்ட் இவர் 7 இரட்டைச் சதங்களை அடித்துள்ளார். (200, 251, 227, 336 ஆ.இ., 217, 231 ஆ.இ., 240)
3. பாகிஸ்தானின் ஜாவெட் மியாண்டாட். இவர் 6 இரட்டைச் சதங்கள் அடித்துள்ளார். (206, 280 ஆ.இ., 203, 260, 271, 211, 264, 206, 202 ஆ.இ., 205)
4. இவர்களைத் தொடர்ந்து பாகிஸ்தானின் ஸஹீர் அப்பாஸ் (274, 240, 235 ஆ.இ., 215), அவுஸ்திரேலியாவின் கிரேய்க் சப்பல் (247 ஆ.இ., 235, 204, 201), இந்தியாவின் சுனில் கவாஸ்கர் (220, 205, 221, 236 ஆ.இ.), மே.இ.தீவுகளின் கோர்டன் கிறீனிட்ஜ் (223, 214, 213, 226), இலங்கையின். மார்வன் அத்தபத்து (223, 216 ஆ.இ., 207 ஆ.இ., 201 ஆ.இ.) ஆகிய அறுவரும் 4 இரட்டைச் சதங்களை அடித்துள்ளனர்.

## இந்திய பாகிஸ்தான் அணிகள் தோல்வி

நியூஸிலாந்திற்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்ட பாகிஸ்தான் கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் போட்டித் தொடரில் 2-3 என்ற கணக்கில் நியூஸிலாந்து அணியிடம் தோல்வி கண்டுள்ளது.

ஒக்லாண்டில் நடந்த முதலாவது போட்டியில் 6 விக்கெட்டுக்களாலும் வெலிங்டனில் நடந்த 3வது போட்டியில் 28 ஓட்டங்களாலும் பாகிஸ்தான் வெற்றி பெற்றது. நேப்பியரில் நடந்த 2வது போட்டியில் 6 விக்கெட்டுக்களாலும் கிறைஸ்ட் சேர்ச்சில் நடந்த 4வது போட்டியில் 138 ஓட்டங்களாலும் டுனைடினில் நடந்த 5வது போட்டியில் 4 விக்கெட்டுக்களாலும் நியூஸிலாந்து வெற்றி பெற்றது.

இந்தியாவுக்குச் சுற்றுப்பணம் மேற்கொண்டிருக்கும் அவுஸ்திரேலிய அணி, இந்தியாவுக்கெதிரான முதல் டெஸ்ட் போட்டியில் 10 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது. இதன் மூலம் தொடர்ச்சியாக 16 டெஸ்ட் வெற்றிகளைப் பெற்று சாதனை அணியாகத் தொடர்கிறது.

மும்பையில் நடந்த இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 176 ஓட்டங்களுக்குள் சுருண்டது. (டெண்டுல்கர் 76, ஷேன்வோர்ன் 4-47)

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 349 ஓட்டங்களைக் குவித்தது. (மத்தியூ ஹெய்டன்-119, அடம் கில்கிறைஸ்ட் 122)

இரண்டாவது இன்னிங்ஸில் இந்தியா 219 ஓட்டங்களைச் சேர்த்தது. முதல் இன்னிங்ஸில் அதிகபட்ச ஓட்டங்களை எடுத்த டெண்டுல்கரே இரண்டாவது இன்னிங்ஸிலும் அதிகபட்சமாக 65 ஓட்டங்களை எடுத்தார்.

46 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இன்னிங்ஸைத் துவக்கிய அவுஸ்திரேலிய விக்கெட் இழப்பின்றி இலக்கை எட்டியது.

இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1-0 என்ற கணக்கில் அவுஸ்திரேலியா முன்னிலை வகிக்கிறது. 2வது டெஸ்ட் மார்ச் 11 முதல் 15 வரை கல்கத்தாவிலும் 3வது டெஸ்ட் மார்ச் 18 முதல் 22 வரை சென்னையிலும் நடைபெறுகின்றன.

# சிந்தியா பதில்கள்

**'வான் நிலவே' பாடல் புகழ் கவிஞர் இளைய கம்பனின் விலாசத்தைத் தயவு செய்து தரமுடியுமா?**

வ.சாதனா, அக்கரைப்பற்று-07.

*கற்பகம் புத்தகாலயம், 18, ராஜாபாதர் தெரு, சென்னை 600 017, தமிழ்நாடு.*

**கல்யாணம் செய்த பெண்கள் குங்குமப் பொட்டு அணிவது போல், காதலிக்கும் பெண்களும் குறிப்பிட்ட நிறப் பொட்டு வைத்துக் கொண்டால், எங்கள் கஷ்டங்களும், காலவிரயமும் நீங்குமே..?**

தியாகு, மாத்தளை.

*நல்ல ஐடியாதான்! ஆனால், உங்கள் தொல்லைத் தாங்காமல் இளம் பெண்கள் எல்லோருமே அந்த நிறப் பொட்டை வைத்துக் கொண்டு திரிவார்கள்; பரவாயில்லையா?*

**நடந்து முடிந்த 'பொங்கு தமிழ் எழுச்சி' எப்படி?**

பி. ஆர்.அசோக்குமார், டிக்கோயா.

*'நாங்கள் சரியாகத்தான் நடந்துகொள்கிறோம்' என்று நாமெல்லோரும் நெஞ்சு நிமிர்த்திச் சொல்ல முடிந்திருந்தால், நம்முடைய எழுச்சிகளுக்கெல்லாம் நிச்சயம் நியாயத்தன்மை வந்திருக்கும். எந்த இலக்குவணர்களும் எங்கள் பலத்தைச் சரித்திருக்க முடியாது.*

*நமக்குள் குற்றங்களைக் குற்றமே என்று கண்டித்துத் திருத்துகிற பொறுப்புணர்வோடு இருந்திருந்தால், நம்பக்கம் நியாயம் தெரிய நடந்திருந்தால் தடை வராமல் தடுத்திருக்க முடியுமே... தமிழ்பேசும் மக்களின் மீட்சி பற்றி புத்திசாலித்தனமாய் யோசிக்காமல், தமிழ்த் தேசிய வெறிப் பெருமைக்குள் தலையைப் புதைத்து வைத்துக் கொண்டு தப்புப் பண்ணிட்டமே தம்பி... உலகம் காறித்துப்ப வைச்சிட்டமே... இனி யாவது, உலகைக் குறை சொல்வதை விட்டு, நம்மைத் திருத்திக் கொள்ளும் முயற்சியில் இறங்குவோமா?*

**சிந்தியா! எதையும் தாங்கும் இதயத்தைப் பெற என்ன செய்ய வேண்டும்?**

முஹம்மட் மைசான், மீராவோடை-04.

*திருமணம் செய்துகொள்ள வேண்டும்.*

**சமீபத்திய எரிச்சல்?**

க.கமலதாசன், வந்தாறுமூலை.

*தனியார் வானொலி சினிமா விளம்பரங்கள்... வெறும் 'மோனை'யை மட்டும் வைத்துக்கொண்டே இவர்கள் அடிக்கும் லூட்டியைத் தாங்க முடியவில்லை. அர்த்தம் பொருந்தி வருகிறதா என்று பார்ப்பதில்லை. 'சுந்தர்.சி.யின் சுறுசுறுப்பான இயக்கத்தில்...' 'பாலரூபனின் பவ்யமான டைரக்ஷனில்...' என்றெல்லாம் விளம்பரிக்கிறார்கள். டைரக்ஷனில் என்ன சுறுசுறுப்பும், பவ்யமும்? இனி மிச்சமிருக்கும் டைரக்டர்களின் கதியை நினைத்தால் பரிதாபமாக இருக்கிறது. 'ஷங்கரின் சங்கடமான டைரக்ஷனில்..' 'பாரதிராஜாவின் பாரதூரமான இயக்கத்தில்....' 'ரவிக்குமாரின் ரம்யமான நெறியாள்கையில்....' கே.எஸ்.ரவிக்குமார் என்றால் 'கேணத்தனமான' என்றாகி விடுகிறதோ என்னவோ...*

*விளம்பரத்திற்கு வார்த்தைகள் போடுவதென்பது கவிதை எழுதுவதைப் போன்றே சொற்களைச் செதுக்கும் ஒரு கலை. மறைந்த சில்லையூர் செல்வராஜன், எஸ்.கே.பரராஜசிங்கம் போன்றோர் இங்கே அதில் வித்துவத்தைக் காட்டிப் போயிருக்கிறார்கள். இன்றும் அதற்குரிய விற்பன்னர்களைத் தேடிப் பெற வேண்டும். இஷ்டத்துக்கு எதுகை மோனை விளையாட்டு விளையாடக்கூடாது!*

**என் அபிமானப் பாடகி சித்ரா முதலில் பாடிய பாடல் எது? அவர் திரைப்படங் களிலும் நடித்துள்ளாராமே, உண்மையா?**


தமிழ்பிரியன், கற்சிலை மடு.

*'நீதானா அந்தக் குயில்' படத்தில் இளையராஜாவின் இசையில் கங்கை அமரனோடு இணைந்து பாடிய 'பூஜைக்கேத்த பூவிது நேத்துத்தானே பூத்தது' என்ற பாடல்.*

*திரைப்படங்களில் நடித்ததில்லை.*

**கம்பன் மகனிடம் கேட்கும் கேள்வியை உங்களிடம் கேட்கிறேன். காதல் அழகா? காதல் பெண் அழகா?**

ஜே.லக்கி, பெரியகல்லாறு.



*முதலில் கம்பன் மகனே என்ன சொல்கிறார் என்று பார்த்துவிடலாம். (திரு.'மூழடில்யன் அவர்களின் ஏரியாவுக்குள் அத்துமீறி நுழைகிறேன். அவர் என்னை மன்னிக்கட்டும்.)*

"மிகலே ஒழியக் குறைவேது மின்றி
நீடிய வெந்துயர்க்கோர்
புகலேது மின்றிப் புலம்பல் நெஞ்சே!..."

*அவள் நினைவால் எழுகிற துயரம் நிமிடத்துக்கு நிமிடம் அதிகரித்துச்செல்கிறதே தவிர குறைகிற வழியைக் காணோம்! அந்தக் கொடுந்துயரை ஆற்றுவதற்கு ஒரு புகலிடமும் இன்றிப் புலம்புகிறது நெஞ்சு...*

*காதல் வருத்துகிறது.*

*அவள் வருகிறாள். தனது புன்னகை ஒன்றின் மூலம் புத்துயிர் அளிப்பதற்கான 'இன்ஜெக்ஷனை' ஏற்றுகிறாள்.*

"பொருந்தார் வருந்த
இகலே செயுமயில் அன்ன
எண்ணாத முகத்தெல்லியன்றிப்
பகலே நிலவும் பவளத்துள்ளே
வந்து பாரித்ததே!"

*அவள் காதலோ, கடைக்கண் பார்வையோ கிடைக்கப் பெறாதவர்களை எல்லாம் துன்பத்தில் உழல வைக்கும் அழகு முகத்தாள்! வந்து சிறு புன்னகை செய்கிறாள். அதுவும் எப்படிப்பட்ட புன்னகை? இரவில் ஒளிவீசும் நிலவு, அவள் பவள இதழ்களுக்கு இடையில் வந்து பகலிலும் பிரகாசிக்கிறது, புன்னகைத்தாலே வெண்ணிலவின் விரிவு தெரிகிறதாம்.*

*அடடா, காதல் பெண் அழகு. ஆகாயத்தில் நம்மை அமுதம் பருகியபடி மிதக்க விடுகிறது. அது திருவாளர் அம்பிகாபதி பார்வையில், செல்வி அமராவதி பார்வையில் அழகு அம்பிகாபதிதானே!*

**நாளை என்ன நடக்குமென்பதை மனிதன் உணர்ந்துகொள்ளும் நிலை வந்தால்..?**

மார்க்கண்டு வாணி, கிரான்.

*தலை வெடித்து இன்றே செத்துவிடுவான்..*

**கேள்வி கேட்பதற்கு என்ன தகுதி வேண்டும்?**

என்.தனுசுயன், யாழ்ப்பாணம்.

*பதில் தெரியாதிருக்க வேண்டும். அல்லது, தான் பரிசோதிக்கப்படுகிறோம் என்பது விளங்காமல் பதில் சொல்லிக் கொண்டிருக்கக்கூடிய ஓர் ஆளைத் தெரிந்திருக்க வேண்டும்.*

**பரீட்சை முடித்த மாணவர்களுக்கு எதிர்காலத்தைக் காட்ட கவிதை ஒன்று சொல்லுங்களேன்?**

தென்றல், மன்னார்.

வெறுங்கை என்பது மூடத்தனம்
விரல்கள் பத்தும் மூலதனம்
இது-

*தெரிந்திராத வரைக்கும்தான் நீங்கள் தென்றல். புரிந்துகொண்டுவிட்டால் புயல் என்று பேர் உங்களுக்கு.*

# மன்னாதி மன்னன்

48

## பேசாமடந்தை பேசினாள்

இராஜகுமாரன்


கற்சிலையாக நின்ற அழகியை மோகித்த அரசகுமாரனான மதன மோகன், அந்த அழகியை தான் உயிருடன் காண்பதற்கு வசதி செய்த தனது நண்பன் தந்திரலோகன் மாண்டுவிட்டான் என்ற செய்தி கேட்டு, "நண்பனைப் பிரிந்தபின் நான் மட்டும் உயிருடன் வாழ்வதில் பயனில்லை!" என்று கூறிக் கொண்டு தனது உடைவாளை எடுத்து மார்பில் குத்திய வண்ணம் உயிர் துறந்தான்.

தன்னுருவத்தை கற்சிலையாகக் கண்டு காதலித்த மன்னர் மகன் தான் உயிருடன் வந்து நின்ற போதும் தனது நண்பனுக்காகவே உயிர்துறந்தான். "இந்த நிலையில் நான் மட்டும் ஏன் உயிர் வாழ வேண்டும்?" என்று அதே உடைவாளையெடுத்து தானும் தற்கொலை செய்து கொண்டாள்.

இத்தகையதொரு விபரீதம், தான் இறந்து விட்டதாகக் கூறிய பொய்யினால் நடந்திருக்கும் என்று கருதாத தந்திரலோகன் தன் நண்பனையும் உல்லாச உருக்குமணியையும் பார்ப்பதற்காக ஆலயத்தின் வடபுறத்தை வந்தடைந்தான். அங்கு அவர்களிருவரும் தங்கள் உயிரைப் போக்கி மறைந்து விட்டதைக் கண்டு மன வேதனைப்பட்டான்.

"உயிர் வாழவேண்டிய இவ்விருவரும் உயிர்த்துறந்தபின்னர் நான் மட்டும் ஏன் உயிர் வாழ வேண்டும்?" என்ற வண்ணம் அதே வாளை எடுத்து தன் மார்பில் செருகி உயிர் துறந்தான்.

சற்று நேரத்துக்கெல்லாம் ஆலயத்துக்கு வந்த பூசகர் அவ்வாலயத்தின் வட புறமாக வந்தபோது மூவரும் இறந்து கிடக்கும் கோரக் காட்சியைக் கண்டார். 'ஆலயத்தின் சுவரில் உயிரோவியமாக நின்ற இந்த அழகிய



பெண்ணின் தோற்றத்தைப் பற்றிய விவரத்தையறிந்து வர நான்தானே இந்த இளைஞனுக்கு உதவி செய்தேன். ஆகவே நான்தான் முழு முதற் குற்றவாளி. நானும் உயிருடன் இருப்பதில் எதுவித பலனுமில்லை' என்று தன்னுயிரைப் போக்கிக் கொள்ள விரும்பினார்.

அதே வாளை எடுத்து பூசகர் தன் உயிரைப் போக்கிக் கொண்டார்.

ஆலயத்திற்குப் பூசை காண வந்திருந்த அடியார் ஒருவர் ஆலயத்தின் வடக்கு வீதியில் ஆலயப் பூசாரி உட்பட நால்வர் தற்கொலை செய்து இறந்து கிடப்பதைக் கண்டு ஊருக்குள் ஓடிச் சென்று கதையைப் பரப்பினார். ஊர் மக்கள் அனைவரும் திரண்டுவந்து இந்தப் பரிதாபக் காட்சியைப் பார்த்துத் திகைத்தனர்.

'எப்படியும் ஆலயத்தில் பலியான நால்வரையும் மீண்டும் உயிர் பெற்றெழச் செய்ய வேண்டும்' என்று ஊரவர்கள் அனைவரும் ஒரே மனதாகத் தீர்மானித்தனர்.

எல்லோரும் ஒன்றாக அமர்ந்து ஒரே மனதுடன் இறைவனைப் பிரார்த்தித்தனர்.

ஊரவர்கள் முன் இறைவன் தோன்றி "உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

"ஆலய வீதியில் தற்கொலை செய்து கொண்டுகிடக்கும் இந்த நால்வரையும் உயிர்ப்பித்தந்தருள வேண்டும்!" என்று ஒரே குரலில் கேட்டனர்.

இறைவனும், அந்த நால்வரையும் உயிருடன் எழுப்பிவிட்டார். அனைவரும் ஒன்றாக இறைவனுக்கு நன்றி கூறி துதித்தனர்.

அரசகுமாரன் மதனமோகன் உல்லாச உருக்குமணியை அழைத்துக் கொண்டு நாட்டுக்குச் சென்றான். மதனமோகனுக்கும் உல்லாச உருக்குமணிக்கும் மாளிகையில் வெகு சிறப்பாக திருமணம் நடைபெற்றது.

அதே தினத்தன்று மந்திரிகுமாரன் தந்திரலோகன் தனக்கேற்ற ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டான்.

இந்தளவில், விக்கிரமாதித்தனுக்கும் பேசாமடந்தைக்குமிடையில் கதை கூறிய திரைச்சீலை இருவரிடமும் ஒரு கேள்வியைக் கேட்டது.

"நான் கூறிய கதையில் நால்வர் ஒரே வேளையில் உயிர்த்தியாகம் செய்துள்ளனர். இவர்களுள் யாருடைய தியாகம் சிறந்து விளங்குகிறது?" என்றுதான் திரைச்சீலை கேட்ட கேள்வி அமைந்திருந்தது.

விக்கிரமாதித்தன் பேசாமடந்தையை எப்படியாவது பேசவைத்துவிட வேண்டும் என்று கருதியமையினால் திரைச்சீலையின் கேள்விக்கு தவறான பதிலைக் கூறினான்.

"அமைச்சர் மகன் தந்திரலோகன் செய்த தியாகமே தலைசிறந்தது!" என்று விக்கிரமாதித்தன் கூறியதும் பேசாமடந்தையாக இருந்த இளவரசி "இல்லை... இல்லை அமைச்சர் குமாரனை விட இதில் சம்பந்தப் படாத கோயில் பூசாரி செய்த தியாகம் தான் தலை சிறந்தது!" என்று கூறினாள்.

பேசாமடந்தையைப் பேச வைத்து விட்ட மகிழ்ச்சியில் விக்கிரமாதித்தன் அவளை தொடர்ந்து பேச வைக்க வேண்டுமென்று கருதி "கதையும் ஒன்றுதான் பேச்சும் ஒன்றுதான்," என்று கூறினான். பின்னர் திரைச்சீலையிலிருந்த வேதாளத்தை அழைத்து பேசாமடந்தையின் ரவிக்கையில் புகுந்து கொள்ளுமாறு பணித்தான். பின்னர் "ஏ ரவிக்கையே! உனக்கு உண்மை தெரிந்திருக்கும். எப்படியாவது நீயும் ஒரு கதை சொல்லு பார்ப்போம்!" என்று ரவிக்கையில் புகுந்திருந்த வேதாளத்திடம் விக்கிரமாதித்தன் சொன்னான்.

பேசமடந்தையின் ரவிக்கையில் இருந்த வேதாளம் "ஐய்யையோ நான் இருக்கும் நிலையில் என்னால் எப்படி கதைகூற முடியும். இளவரசி என்னை தனது மார்பில் இறுக்கமாகக் கட்டி வைத்துள்ளாள். மூச்சு விடுவதே எனக்குக் கஷ்டமாக இருக்கிறது. அப்படியிருக்க என்னால் எப்படி கதை கூற முடியும்?" என்று கேட்டது.

தனது ரவிக்கை பேசுவதைக் கேட்ட பேசாமடந்தை பயந்து உடனடியாக தனது ரவிக்கையைக் கழற்றி வீசி எறிந்தாள். அந்த ரவிக்கை இருவருக்குமிடையில் போய் விழுந்தது.

அப்பொழுது அதனிடம் ஒரு கதை கூறுமாறு விக்கிரமாதித்தன் பணித்தார்.

### ரவிக்கை கூறிய கதை

ரங்கநாதபுரம் என்ற நாட்டை மதிவாணன் என்ற மன்னன் ஆட்சி செய்து வந்தான். அவனுக்கு மோகனாங்கி என்றொரு மகளிருந்தாள். மதிவாணனுடைய மந்திரி கார்வண்ணன். அவனுடைய மகன் மதிவல்லவன். அரசன் மகள் மோகனாங்கியும், அமைச்சர் மகன் மதிவல்லவனும் இளம்பிராயத்தில் ஒரே குருவானவரிடம் சென்று கல்வி பயின்றனர். இருவரும் பருவ வயதை அடைந்தனர். இதனால் இருவருக்குமிடையில் இயல்பாகவே சந்திக்கும் வாய்ப்புகள் அருகிப் போய் விட்டன.

இருப்பினும் இளமையில் ஏற்பட்ட பழக்கம் காரணமாக இருவருக்குமிடையில் காதல் மலரத் தொடங்கியது.

அரசகுமாரி அமைச்சர் மகன் மதிவல்லபனை கண்டு பழகத் துடித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய விசுவாசத்துக்குப் பாத்திரமான தோழியை அழைத்து மதிவல்லவனிடன் தூதனுப்பினாள். "அவரைப் பார்க்காவிட்டால் என்னுயிரே போய் விடும்போல் தெரிகிறது. ஆகவே இன்றிரவு ஊரடங்கிய பின் அரண்மயையில் என் அறைக்கு வருமாறு அழைத்துக் கொண்டு வா?" என்று கூறி அனுப்பினாள்.

அரசகுமாரியின் எண்ணத்தை நிறைவேற்றுவதற்காக மதிவல்லவனைத் தேடிச் சென்ற தோழி அவனைக் கண்டு அரச குமாரியின் எண்ணத்தை எடுத்துரைத்து, அன்றிரவே அரசகுமாரியின் அரண்மனைக்கு அழைத்து வந்தாள்.

அன்றிரவு வெகுநேரம் வரை மதிவல்லவனும், மோகனாங்கியும் இன்பமாக பொழுதைக் கழித்தனர்.

இவ்வாறு மதிவல்லவன் அரண்மனைக்கு வந்து இரவில் தங்கிவிட்டு விடியுமுன்னர் எவரும் காணாமல் எழுந்து போய் விடுவது பல காலம் தொடர்ந்தது.

இப்படியாக நான்கு மாதங்கள்வரை அரசகுமாரியும், மந்திரிகுமாரனும் சந்தித்து மகிழ்ச்சியாக இருந்தமையினால் அரசகுமாரி கர்ப்பம் தரித்தாள்.

*(மன்னன் வருவான்..)*

# காதில பூ கந்தசாமி

கீழுள்ள சத்தியக் கடதாசியில் கண்ணை மூடிக் கொண்டு கையெழுத்திட்ட பின்னர்தான் நீங்கள் மேற்கொண்டு வாசிக்க அனுமதி பெற்றவர்களாவீர்கள். அதனை வெட்டி, அல்லது போட்டோ பிரதி செய்து 'காதில பூ கந்தசாமி' என்ற தலைப்பில் தினமுரசுக்கு அனுப்புவோர் அபிமான வாசகர் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியைப் பெறுவீர்கள். விபரம் கீழே.

### சத்தியக் கடதாசி:

நோட்டீஸ் பலகையிலுள்ள காதில பூ கந்தசாமியின் சத்திய வாக்கியத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டு, எனக்குச் சுயமாகச் சிந்திக்கும் உரிமை இல்லையென ஏற்றுக்கொண்டு, அவர் கூறுகின்ற அத்தனை பொய்களையும் எள்ளளவு சந்தேகமுமின்றி நம்புவேன், அதைத் தவிர வேறொன்றையும் நம்பமாட்டேன், இப்படி நம்புவதன் விளைவுகளுக்கு நானே பொறுப்பாளியென சுய நினைவுடன் இத்தால் நான் உறுதியளிக்கிறேன்.

திகதி:.............. பெயர்:.................. ஒப்பம்:..................



**நோட்டீஸ்பலகை**

நான் சொல்வதெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை

*-காதில பூ கந்தசாமி*

அபிமான வாசகர் போட்டியில் இரண்டாவது: பொய்மையைப் போற்றி இரண்டு வரியில் ஒரு கவிதை எழுதுக. சிறந்த கவிதைக்குப் பரிசளிக்கப்படும். முடிவுத் திகதி மார்ச் 31. பெறுபேறுகள் மே முதல்வாரத்தில்.

**அலரிக்காயைத் தின்று கனபேர் தற்கொலை செய்யினமெண்டு சுகாதார அமைச்சு இப்ப அலரி மரங்களைத் தறிக்கும் திட்டத்தை தீட்டியிருக்கினமெல்லோ, அப்ப கிணத்துக்க குதிக்கிறவையத் தடுக்க, கிணறுகளெல்லாத்தையும் மூடுறதிட்டந்தான் அடுத்ததோ தெரியேல்ல. அதுசரி, உவை எதைத்தான் தறிக்கட்டும் எதத்தான் மூடட்டும் சயனைட் குடிக்கிறவைய நிப்பாட்ட ஏலுமோ உவயால எண்ட சவால் விடுறாங்கள் இப்பத்தப் பெடியல்.**

**கவிதைப்போட்டியில வெண்ட கவிஞரப்பற்றி எழுதினதப் பாத்திட்டு ஒரு வாசகி கவிதை எழுதிறது எப்பிடியெண்டு என்னைக் கேட்டிருந்தா தங்கச்சி கேட்டுக் கொள்ளுங்கோ. கவிதை எழுதிறதொண்டும் பெரிய கஷ்டமில்லை. முதலில கவனமாய் இப்படி ஒரு கானாவை எழுதுங்கோ (க). அதுக்குப் பக்கத்தில வானாவ எழுதி ஒரு விசிறி போட்டால் வினா வரும். பக்கத்தில ஒரு சங்கிலியைக்கீறி பக்கிண்டு ஒரு தானாவப்போடுங்கோ. தையன்ன வந்திட்டுதோ, வந்த கையோட மூண்டு எழுத்தையும் கூட்டிப் பாத்தால் கவிதையும் தெரியும். பிறகென்ன நீங்கள் கவிதை எழுதிட்டியள். என்னை விட்டுடுங்கோ!**

**அதவிடுவம், இந்தச் சமாதானக் கதவு ஏன் இத்தனை காலமா அடைபட்டுப் போயிருக்குதெண்டு நானும் உங்களப்போல மண்டையக் குடைஞ்சுகொண்டு மூலையில சுருண்டிருக்காமல் மெல்ல வேட்டிய மடிச்சுக்கட்டிக்கொண்டு அந்தக் கதவுக்குப் பின்னால போய் எட்டிப் பாத்தனான். அதென்னெண் டால்பாருங்கோ, வேற ஒண்டுமில்ல, முழங்கைய மற்றப்பக்கத்தால மடிக்கப் பாக்கிற மாதிரி, நாங்கள் பிற வழமாத் திறக்கப்பாக்கிறம். திறக்குமோ...? இதப்பற்றி திடுக்கிடும் செய்தியொண்டு சந்திரன் எப்.எம்மில போய்க்கொண்டிருக்குது கேப்பம்:**


**சமாதானக் கதவை உடனடியாக அரசாங்கம் திறக்காவிட்டால் தாங்கள் அதை, மத்திய வங்கியைவிடப் பெரியதொரு குண்டுவைத்துக் தகர்க்கப் போவதாக தமிழர் வியாபாரக் கூத்தணியின் கொரில்லாப்படைத் தலைவர் அழுக்கு சங்கரி சவால் விட்டுள்ளார். இத்தகைய சமாதானக் குண்டுகளைத் தாங்கள் மக்கள் சக்தியைப் பயன்படுத்தித் தயாரித்து வைத்துள்ளதாகவும் பிரித்தானியா தங்களைத் தடைசெய்தால் உண்மையான பயங்கரவாதம் எதுவென்பதைத் தாம் புரிய வைக்கப் போவதாகவும் அக் கூத்தணித் தலைவர் தெரிவித்திருந்தார்.**

**பொழுது போகாத காரணத்தால நான் உந்தச் சந்திரன் எப்.எம்மில அடிக்கடி மெய் மறந்து பொய் கறக்கப் போறனான். அப்படிக் கறந்த பொய் யொண்டக் கடைஞ்செடுத்து வெண்ணைய எடுத்துக்கொண்டு மோர மட்டும் உங்களுக்குத் தாறன், சுவைச்சுப் பாருங்கோ.**

ச.எப்.எம்: **வணக்கம் காதிலபூ, என்ன, போட்டிக்குத் தயாரா?**
கா.பூ: **இல்லை.**
ச.எப்.எம்: **என்ன இல்லையா? அட ஆரம்பமே பொய்தானா, சரி கா.பூ, சமாதானம் எப்போது கிடைக்கும்?**
கா.பூ: **அது எப்பவோ கிடைத்து விட்டதே!**
ச.எப்.எம்: **அப்படியானால் எதுக்காக இப்ப போராடுகிறார்கள்?**
கா.பூ: **அது சும்மா, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம். சனத்தொகையக் குறைக்க...**
ச.எப்.எம்: **அப்படியானால் நோர்வே நாடு ஏன் நடுவராக வந்தது?**
கா.பூ: **அது எப்படிச் சமாதானமாக வாழலாமெண்டு இலங்கையிட்டக் கேட்டுத் தெரிஞ்சுகொண்டுபோகவெல்லோ வந்தது.**
ச.எப்.எம்: **சரி, அப்ப உந்தத் தமிழ்க் கட்சிகள் ஏன் இப்ப எம்பஸிப் படிகளால ஏறி இறங்கினம்?**
கா.பூ: **வயசு போன காலத்தில ஒரு எக்ஸசைஸ் எடுக்கினம். அதோட முகத்தக் காட்டிவைச்சால் வீசா எடுக்க உதவுமெண்டும் ஒரு ஐடியாப்போல.**
ச.எப்.எம்: **ஜனநாயகம் என்றால் என்ன?**
கா.பூ: **ஏக பிரதிநிதித்துவம்.**
ச.எப்.எம்: **ஏக பிரதிநிதித்துவமென்றால்....?**
கா.பூ: **அகிம்சை.**
ச.எப்.எம்: **அகிம்சையென்றால்...?**
கா.பூ: **பயங்கரவாதம்.**
ச.எப்.எம்: **பயங்கரவாதமென்றால்....?**
கா.பூ: **மக்கள் போராட்டம்.**
ச.எப்.எம்: **தலைசிறந்த அகிம்சாவாதி ஒருவரைச் சொல்லும்.**
கா.பூ: **ஹிட்லர்.**
ச.எப்.எம்: **மிகச் சிறந்த கலை எது?**
கா.பூ: **கொலை.**
ச.எப்.எம்: **தற்கொலை செய்துகொண்ட அரசியல்வாதி யார்?**
கா.பூ: **அமிர்தலிங்கம்.**
ச.எப்.எம்: **ஆத்தாமல் கேக்கிறன், பொய் எழுதும் கை எது?**
கா.பூ: **பத்திரிகை**
ச.எப்.எம்: **ஆ, இதோ நீங்கள் ஒரு உண்மை சொல்லிவிட்டதால் போட்டியிலிருந்து விலக்கப்படுகிறீர்கள், அடுத்த போட்டியாளர், சட்டக் கட்சி ( டெல்-லோ கட்சி) முதல்வர் சீறிய காந்தா)**

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

Regd. as a News Paper at the G.P.O.(QD/65/NEWS/200






பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: ..., காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
Website: www.lapk.com/arul
436331


# கவர்ச்சி ஆட்டம்




→ சிங்கிள் பீஸ்-டபுள் பீஸ் எனப்படும் பிகினி உடைகளுடன் கடற்கரைக் காற்று-சூரியக்குளியல் செய்யும் பெண்கள் ஆரம்பித்து வைத்ததுதான் இந்தக் கவர்ச்சி ஆட்டம்.

பெண்களுக்கென்று உள்ளரங்குகளில் கரப்பந்து விளையாட்டு பலகாலமாக நடந்து வருகிறது. இருப்பினும் காற்றோட்டமான உடைகளில் கடற்கரையோரங்களில் ஆடப்பட்ட இந்த விளையாட்டு பல நாடுகளிலும் பிரபலமாகி விட்டது.

அமெரிக்காவில் முதலில் பிரபல்யம் பெற்ற இந்தக் கவர்ச்சி ஆட்டம் இப்போது உலகெங்கிலு முள்ள பல நாடுகளிலும் (நம்நாட்டிலும் தான்) ஆடப்பட்டு வருகிறது.

பொழுது போக்காக ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆட்டம் ஒலிம்பிக் போட்டியில் ஆடப்படுவது வரை போய்விட்டது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

1996ம் ஆண்டு அட்லாண்டாவில் இடம் பெற்ற ஒலிம்பிக் விளையாட்டுக்களில் அமெரிக்கா முதல் முதலாக கடற்கரை கரப்பந்தாட்டங்களில் பங்கேற்றது.

'சிங்கிள் சிமித்' என்ற அமெரிக்க வீராங்கனை இந்தப் போட்டிகளில் திறமை பெற்று விளங்குகின்றார். 1977ல் முதல் முதலாக இக்கரப்பந்தாட்டத்தில் ஈடுபட்ட 'சிமித்' இதுவரை 139 தடவைகள் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளார். இவர் 1992ல் மட்டும் 10 இலட்சம் டொலர்களை சம்பாதித்திருக்கிறார்.

# ஆபத்து



← தொட்டுப் பார்க்க வேண்டும் போல் இருக்கும் இந்த மீன், எவ்வளவு அழகானதோ அந்தளவு ஆபத்தானதும்கூட. செங்கடல் மற்றும் இந்து-பசுபிக் பிராந்தியக் கடல்களில் காணப்படும் 'நெற்றோடன்' என்ற ஒருவகை மீனானது இது. பயங்கர நச்சுத்தன்மை கொண்டது. இதனுடைய அடி வயிற்றில், முட்டைகளில், இரத்தத்தில், நுரையீரல், குடல்கள் மற்றும் தோலில் ஒரு கிராம் அளவு கொடிய நஞ்சு பொதிந்திருக்கிறது. இந்த நஞ்சில் சாதாரண மனிதனை 20 நிமிடங்களில் கொன்று விடும் தன்மை வாய்ந்தது.





SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657


↓ ஆசிய நாடுகளில்தான் தமக்குப் பின் தமது வாரிசுகளை அரசியலில் இறக்குவது அதிகமாக இடம்பெற்று வருகிறது.

இப்போது இதை அமெரிக்கா பின்பற்றிவிட்டதோ என எண்ணத் தோன்றுகின்றது. அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் மகன் வில்லியம் புஷ் இப்போது அமெரிக்க ஜனாதிபதியாகியுள்ளார்.

அடுத்து, இன்னொரு முன்னாள் ஜனாதிபதியான பில் கிளின்ரனின் மனைவி ஹிலாரி அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியில் போட்டியிட வழிகோலுவது போல் செயற்பட்டு வருகிறார்.

இப்போது பாடசாலைக்குப் போய்க் கொண்டிருக்கிறார் ஹிலாரி. எதற்கு என்கிறீர்களா? நியூயோர்க் நகரின் செனட்டராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் ஹிலாரி, அதுபற்றி முழுமையாக அறிந்து கொள்ளத்தான் இந்தப் பாடசாலைப்படிப்பு.

இதற்காக அதிகாலையிலேயே எழுந்து பாடசாலை போய் விடுகிறார். இந்தப் பதவியில் 6 வருடகாலம் பணியாற்றியிருக்கும் ஹிலாரிக்கு கிளின்ரன் மற்றும் மகள் செல்ஷியா பக்கபலமாக இருந்து வருகிறார்கள்.

சில வருடங்களுக்கு முன் அமெரிக்க முதல் பெண்மணியாக இருந்த போது சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஹிலாரி ஷங்காய் நகரில் சிறுவர்களை மகிழ்விக்கும் பொம்மையுடன் நின்ற காட்சி தான் இது.

# வாரிசு



# கம்பளம்



← இயற்கைச் சூழலை ஒரு சாதனமாகப் பயன்படுத்தி பிரமாண்டமான கலை வடிவங்களை அமைப்பதில் வல்லவர் ஹங்கேரி நாட்டில் பிறந்த 'கிறிஸ்டோ'.

1972 முதல் 1976 வரை நான்கு வருடங்கள் கலிஃபோனியாவில் உள்ள 'மறியன்' மற்றும் 'சோனோன்மர்' ஆகிய பிராந்தியங்களை இணைத்து நீண்ட கம்பளம் போன்ற 'பொலிபுறோன் பயிலன்' என்ற பொருளை வைத்து 40Km நீளமுள்ள ஒரு செயற்கை வேலியை அமைத்தார்.

இந்த பிரதேசம் ஒரு பாலைவனமாகும். கிறிஸ்டோ அமைத்த வேலி நீரால் ஆனது (கால்வாய் போன்றது) இந்த நீர் நிலையில் இப்படத்தில் காணப்படுவது போல் தீவுகளும் அமைக்கப்பட்டன.